ராஜா ராம்மோகன் ராய்

சௌமியேந்திரநாத தாகூர்



இந்திய
இலக்கியச்
சிற்பிகள்

ராஜா ராம்மோகன் ராய்

உள் அட்டையில் காணும் சிற்பக் காட்சியில், பகவான் புத்தரின் அன்னை மாயாதேவி கண்ட கனவின் பலனை, மன்னர் சுத்தோதனருக்கு நிமித்தகர் மூவர் விளக்குகின்றனர். அவர்களுக்குக் கீழே அமர்ந்து அந்த விளக்கத்தை எழுதுகிறார் ஒரு எழுத்தர். எழுதும் கலையைச் சித்தரிக்கும் முதல் இந்தியச் சிற்பம் இதுவாகவே இருக்கலாம்.

(நாகார்ஜுன மலைச் சிற்பம்—கி. பி. இரண்டாம் நூற்றாண்டு.)

பட உதவி: நேஷனல் மியூசியம், புது டில்லி.

இந்திய இலக்கியச் சிற்பிகள்

ராஜா ராம்மோகன் ராய்

ஆசிரியர் :

செளமியேந்திரநாத தாகூர்

தமிழாக்கம் :

க. த. திருநாவுக்கரசு

சாகித்திய அக்காதெமி

புது தில்லி

Raja Rammohan Roy — Tamil translation by K.D. Thirunavukkarasu of Soumyendranath Tagore's Monograph in English, Sahitya Akademi, New Delhi (1989) Rs. 5.

First Edition : 1972
Reprint : 1989

சாகித்திய அக்காதெமி

தலைமை அலுவலகம்:

இரவீந்திர பவன், 35, ஃபெரோஸ்ஷா சாலை, புது தில்லி-110 001.

விற்பனை :

'சுவாதி', மந்திர் மார்க்; புது டில்லி 110 001.

கிளை அலுவலகங்கள்:

பிளாக் V-B, இரவீந்திர சரோபர் ஸ்டேடியம், கல்கத்தா-700 029.

29, எல்டாம்ஸ் சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018.

172, பம்பாய் மராத்தி கிரந்த சங்கிரகாலய மார்க்கம்,
தாதர், பம்பாய் 400 014.

(கிளை அலுவலகங்களிலும் விற்பனை உண்டு)

ரூ. 5.

Classic Prints, Madras

முன்னுரை

இந்திய மறுமலர்ச்சியின் விடிவெள்ளியாக விளங்குபவர் ராஜா ராம்மோகன் ராய். புரட்சிக்கனல் தெரிக்கும் தீவிரவாதிகளின் வளர்ப்புப் பண்ணையாக விளங்கிவரும் வங்காளம், இம்மாபெருந் தலைவரைப் பெற்றெடுத்ததில் வியப்பில்லை.

பிறப்பால் பிராமணராக இருந்தாலும், பொருளற்ற சமயச் சடங்குகளை முதன் முதல் சாடிய பெருமை அவருக்கேயுரியதாகும். 'சமய உண்மைகள் வேறு ; சமயச் சடங்குகள் வேறு' என்பதைத் தெளிந்து, 'ஒன்றே குலம் ஒருவனே தேவனும்' என்னும் உண்மையை இந்தியா மட்டும் அல்லாமல், உலகம் முழுவதும் உணர்ந்து போற்ற வேண்டும் என்பதற்காக அவர் அரும்பாடு பட்டார். கீழைநாடுகளின் பண்பாட்டோடு, மேலைநாடுகளின் பண்பாட்டில் காணப்பெறும் சிறப்பியல்புகளைக் கலக்கச் செய்வதன் மூலம், புதிய 'உலக நாகரிகம்' ஒன்றை உருவாக்க அவர் முயன்றார். பேருறக்கத்தில் ஆழ்ந்துகிடந்த இந்தியாவைத் தட்டி எழுப்பி, அதன் ஆன்மிகப் பேரொளியைக் காணுமாறு முதன்முதல் தூண்டிய அறவோராக ராம்மோகனர் விளங்குகிறார்.

உலகிலுள்ள நாடுகள் பலவற்றின் பிரதிநிதிகளைக் கொண்ட அனைத்து நாடுகளின் அவை ஒன்றினை நிறுவி, அதன்மூலம் பல்வேறு நாடுகளிடையே உண்டாகும் பூசல்களைக் 'கலந்துரையாடுவதன் மூலம்' போக்கிக்கொள்ள முயலலாம் என்ற அரிய கருத்தை, முதன் முதல் உலகிற்கு அறிவுறுத்திய மூதறிஞர் நம் ராஜாராம் மோகனரேயாவர்.

இத்தகைய சிறப்பியல்புகளைக் கொண்ட சான்றோர் ஓர் இலக்கியச் சிற்பியாகவும் திகழ்ந்த வரலாற்றை இச்சிறிய நூல் எடுத்தியம்புகிறது. சௌமியேந்திரநாத தாகூர் ஆங்கிலத்தில் இந் நூலைப் படைத்துள்ளார். பல மூலப் பதிவேடுகளையும், நூல்களையும் ஆராய்ந்து, அனைவரும் அறிந்துகொள்ள வேண்டிய முக்கியச் செய்திகளை முறைப்படுத்தி இந்நூலினை அவர் வரைந்துள்ளார். ராம் மோகனரைப் பற்றிக் காலப்போக்கில் கிளைத்தெழுந்த சில தவறான கருத்துக்களைச் சுட்டி, அவை மெய்ம்மையானவை அல்ல என்பதைத் தக்க சான்றுகள் காட்டி, இந்நூலாசிரியர் நிறுவியுள்ளமை போற்றத் தக்கதாகும். ராஜா ராம்மோகன் ராயின் இருநூறும் ஆண்டு பிறந்தநாள் விழா நாடெங்கும் கொண்டாடும் இச் சமயத்தில், இந்நூலைத் தமிழ் மக்களுக்கு அறிமுகம் செய்து வைப்பதன்மூலம், இந்திய ஒருமைப்பாட்டிற்கு நல்லதோர் அடிப்படையை அமைத்துத்தர முன்வந்த சாகித்திய அக்காதெமி யாருக்கு என் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளு கின்றேன்.

சென்னை,
1-4-72.

க. த. திருநாவுக்கரசு.

பொருளடக்கம்

வைகறை இருள்

தற்கால இந்திய வரலாற்றில், உண்மையிலேயே மிகவும் இருள் செறிந்த காலம் அது. பழைய சமூக அமைப்புக்கள் சிதறுண்ட காலம் அது. அக் கூளங்களையும் சிதைவுகளையும் அப்புறப்படுத்துவதற்குரிய சக்தி யாதும் அதுவரை தோன்றவில்லை. மேலும், பழைய அடிப்படையின் மீது புதியதொரு சமூக அமைப்பை நிறுவுவதற்குரிய எத்தகைய முயற்சியும் அக்காலத்தில் மேற்கொள்ளப் படவில்லை. மறைந்துபோன மரபுகளும், வழக்கற்றுப்போன பழக்க வழக்கங்களும், அறிவுக்கு ஒவ்வாத மூட நம்பிக்கைகளும் நாட்டின் உயிர் ஓட்டத்தைத் தடைப்படுத்தி விட்டன. அதனால் நாடு அறிவொளியை இழந்தது. அப்பொழுது எங்கும் காரிருள் சூழ்ந்து கிடந்தது. அறிவுப் பஞ்சமும், சிந்தனையில் மலட்டுத்தன்மையும் நிறைந்திருந்த அக்காலத்தில்தான், ராஜாராம் மோகன்ராய் அறிவுச் சுடரொளியாகவும், சிந்தனைச் சிற்பியாகவும் இந்நாட்டில் தோன்றினர்.

மனித இனத்தின் நாகரிக வரலாற்றைக் கண்ணுக்குப் புலனாகாத வகையில் இயக்கிவருவது காலமெனும் சக்தியாகும். அக்காலமெனும் சக்தியினுடைய படைப்பாற்றலின் குவிமுகப் புள்ளிகளாக இருப்பவர்களே சான்றோர்களாவர். மக்களினப் பண்பாட்டு வரலாறு, வற்றாது நீர்ப்பெருக்கெடுத்தோடும் ஒரு பேராறு. அப் பேராற்றின் போக்கில் வேறுபாடோ, மாறுபாடோ உண்டானதில்லை. வரலாற்றினால் மனித ஆளுமை கட்டுப் படுத்தப்பட்டுள்ளதைப் போன்று, பெரிதும் மனித ஆளுமையினால் வரலாறு உருவாக்கப்படுவதாகவும் தோன்றுகிறது.

அக்காலப் பகுதியின் நடுநாயகமாகத் திகழும் பணியினைப் புரிவதற்குத் தேவையான அறிவுத்திறனிலும், வரலாற்று ஓட்டத்தின் சாரத்தை உறிஞ்சிக்கொள்ளப் பயன்படும் சிந்தனைத் திறனிலும், இறுதியாக அப்பணியை நிறைவேற்றுவதற்குத் தேவையான உச்சநிலைப் படைப்பாற்றலைக்கொண்டு, உறுதியான வீரவுணர்வோடு துணிந்து செயல்புரியும் திறனிலும் மனித ஆளுமையின் சீரும் சிறப்பும், பயனும் பெருமையும் பொதிந்து கிடக்கின்றன. படைப்பியல் முயற்சிகளுள் மிக உயர்ந்த செயல்முறைகள் சிறப்புடையன. அவற்றுள் மனித ஆளுமை முரண்பட்ட பண்புகளின் புதுமுறைக் கலவையாகி விடுகிறது. அது மிக உயர்ந்த அளவிற்குத் தனிமுறைச் சார்பற்றதாகக் காணப்படுகிறது. அத்துடன் அது முனைப்பான

தனி மனிதப் பண்புடையதாகவும் தோன்றுகிறது. இலட்சியத்தைக் கறைப்படுத்துகின்ற அளவிற்கு ஆணவச் சேற்றின் துகள் அதில் படியாதவண்ணம் காப்பதையே தனிமுறைச் சார்பற்ற பண்பென நாம் போற்றுகிறோம். குறிப்பிட்ட ஒரு தனி மனிதனிடம் பருப் பொருள் சார்புடையதாக இலட்சியம் பெரிதும் வெளிப்படுகிறது. அதனை நாம் முனைப்பான தனிமனிதப் பண்பு என்று குறிப்பிடு கிறோம். அது மக்களின வரலாற்றில் காண்பதற்கு அரியதொரு பண்பாகும். ஆனால், அது திரும்பத்திரும்ப இடம்பெறத்தான் செய்கிறது.

பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில், ராம்மோகன்ராய் இந்திய வரலாற்று அரங்கில் தோன்றினார். அப்பொழுது இஸ்லா மியரின் ஆட்சி அழிந்து கொண்டிருந்தது; வாணிகர்களாக இந்தியாவிற்கு வந்த பிரிட்டிஷார் பையப்பைய, தங்களைத் தாங்களே ஆட்சியாளர்களாக மாற்றிக்கொண்டிருந்தனர். ராஜாராம் மோகன்ராய் பிறப்பதற்குப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு — 1757இல் — பிளாஸிப் போர் நடந்தது. அது வங்காளத்தின் தலை விதியை நிர்ணயித்துவிட்டது. நாட்டிலே குழப்பங்களும் கொந் தளிப்புகளும் நிலவிய போதிலும், அவற்றிடையே புதிய அமைப் புக்கள் மெல்லமெல்ல உருக்கொள்ளத் தொடங்கின.

மேனாட்டு நாகரிகமும், பண்பாடும் இந்தியாவில் பரவுவதற்குப் பிரிட்டன் கட்டியம் கூறி நின்றது. அது வெறும் வாணிகத்தின் பிரதிநிதியாக மட்டும் இங்கு வரவில்லை; வரலாற்றின் கருவியாக வும் வந்தது. நெடுநாட்களாக உணர்ச்சியிழந்த இந்தியாவை அது தட்டியெழுப்பியது; புதியதொரு சிந்தனை அலையைப் பாய்ந்தோடச் செய்தது; அவளுடைய வரலாறெனும் பழைய ஆற்றுப்படுகையில், செயல திறனெனும் வெள்ளம் பெருக்கெடுத்தோடச் செய்தது. இவ்வருஞ் செயல்களைச் செய்வதற்கு இறைவனால் அனுப்பப் பட்டதோ என்று எண்ணுமாறு, பிரிட்டன் நம் நாட்டிற்கு வாணி கத்தின் பொருட்டுத் தன் மக்களை அனுப்பிவைத்தது.

இந்தியாவிற்குள் முஸ்லீம்கள் நுழைந்த பிறகு, தீர்க்கதரிசன முடைய பெரியார்கள் பலர் நம் நாட்டில் தோன்றினர். அவர்கள் இந்து சமயம், இஸ்லாமிய சமயமெனும் இருபெரும் சிந்தனை உலகங் களுக்கு இடையே, இணைப்பினை உண்டாக்கவேண்டிய வரலாற்றுத் தேவையை நிறைவேற்றுவதற்காகவே தோன்றினர். டாடு (Dadu), கபீர், குரு நானக் என்போர் அவர்களுள் சிறப்பு மிக்கவராவர், மற்றும் பல பெருமைமிகு புதியநெறிகளைக் கண்ட சான்றோர்களும் அக்காலத்தில் தோன்றினர். அவர்கள் எல்லாரும் இம்மாபெரும் திருப்பணியில் ஈடுபட்டனர். இப்பணியைப் பிறருடைய நற்பண்பு கள் அனைத்தையும் திரட்டும் முறையினால் சாதித்துவிட முடியாது. ஏனெனில், அம்முயற்சி புறச்சார்பானதும் தனியுரிமை வாய்ந்தது

மான மூலக் கூறுகள் பலவற்றை ஒருவகைத் தலையினால் ஒன்று படுத்துவதாக முடியும். எனவே, பல்வேறு மூலக்கூறுகளுக்கு இடையே உள்ள இடைச்சார்பினை உணரச் செய்யும் இணைப்பு முறையின் மூலம், அவர்கள் அவற்றை உணர்த்தினர். அம்மூலக் கூறுகளை உள்ளார்ந்தவகையில் ஒருமுகப்படுத்தும் முறையாலும், இணைப்புவகையாலும் ஒன்றுபடுத்த அவர்கள் முயன்றனர். மேலை நாடுகளோடு இத்தகைய இணைப்பு ஒற்றுமையை உண்டாக்குவதே அக்காலப் பகுதியின் முதன்மையான கடமையாக இருந்தது. வரலாற்றின் அத்தகைய சிறப்புமிக்க காலப்பகுதியில், இந்தியா வின் தலைவிதியை நிர்ணயிக்கும் பொறுப்புடையவராக ராம் மோகன்ராய் தோன்றினார்.

பிறப்பும் போராட்டமும்

கி. பி. 1772ஆம் ஆண்டு, மே மாதம் 22ஆம் நாள் ராம்மோகன் ராய், ராதாநகர் என்ற ஊரில் பிறந்தார். அவ்வூர் முதலில் பர்த் வான் மாவட்டத்தின் ஒரு பகுதியாக இருந்தது. பின்னர் வங்கா ளத்தில் ஹூக்ளி மாவட்டத்தின் ஆரம்பாக் (Arambagh) துணைப்பிரி வின் ஒரு பகுதியாக மாற்றப்பட்டது. கனகுள் கிருஷ்ண நகர் என்ற செல்வமும் செழிப்பும் உடைய ஊரின், வடக்குப் பகுதியை ராதா நகர் எனும் இச்சிற்றூர் சார்ந்திருந்தது. அந்நாட்களில் கனகுள் கிருஷ்ணநகர் இந்துப் பண்பாட்டின் வளர்ப்புப் பண்ணையாகச் சிறப் புற்று விளங்கியது. ராம்மோகன்ராய் வைதிக நெறி வழுவாத பிராம ணர் குடும்பத்தில் பிறந்தார். அக்குடும்பத்தின் முன்னோர்கள் நெடுங் காலம் மூர்ஷிதாபாத்தைச் சேர்ந்த முஸ்லீம் ஆட்சியாளர்களிடத் துப் பணிபுரிந்து வந்தனர். ராம்மோகன் ராயினுடைய தகப்பனார் ராமகாந்தராய் எனப்படுபவராவர். அவர் சாத்திரங்களை முறைப் பிறழாமல் கடைப்பிடித்த வைதிகப் பிராமணர். ராஜாராமி னுடைய தாயின் பெயர் புல்தகுராணி (Phulthakurani) என்ப தாகும். அவர் மதிநுட்பமும் சிறந்த பண்புநலனும் உடையவ ராவர்.

புல்தகுராணிக்கு இரண்டு ஆண் பிள்ளைகளும், ஒரு பெண்ணும் இருந்தனர். ராம்மோகன், ஜகன்மோகன் என்பவர் ஆண்பிள்ளைக ளாவர். ராதா நகரிலிருந்த தொடக்கப்பள்ளியில் முதன்முதலாக அவர் அடிப்படைக் கல்வியினைக் கற்றார். அதே சமயத்தில் அவர்

ஒரு மௌல்வியிடத்து பாரசீக மொழியையும் கற்று வந்தார். சில ஆண்டுகள் ராஜாராம் சொந்த ஊரில் கல்வி கற்றார். பின்னர், பாட்னாவிற்கு அவருடைய தந்தை ராம்மோகனை அனுப்பிவைத்தார். அவ்வூர் இஸ்லாமியப் பண்பாட்டின் நிலைக்களனாக விளங்கியது. அங்கு அராபிய மொழியையும், பாரசீக மொழியையும், குர்ரானையும், இஸ்லாமிய இறையியலையும் அவர் நன்கு கற்றார். அவற்றுடன் அராபிய மொழிபெயர்ப்பின் மூலம் கிடைத்த யூக்கிளிட்டின் (Euclid) ஜியோமிதியும், அரிஸ்டாட்டலின் சிந்தனைச் செல்வங்களும் அவருடைய அறிவுக்கு விருந்தாக அமைந்தன. குர்ரானின் ஜனநாயகப் பண்புகள் நிறைந்த போதனைகள் பெரிதும் அவருடைய உள்ளத்தைக் கவர்ந்ததோடு நிலையான சுவடுகளையும் பொறித்துவிட்டன. அராபியச் சிந்தனையில் தருக்கநெறி பெற்றுள்ள சிறப்பிடமும் ராஜாராமைப் பெரிதும் கவர்ந்தது. இஸ்லாமியச் சிந்தனையாளர் குழுக்கள் சிலவற்றின் பகுத்தறிவுப் பண்பும் அவருடைய உள்ளத்தில் ஆழப்பதிந்துவிட்டது. சிறப்பாக முதாஸிலாக் (Mutazilas)களின் கொள்கையும்[1] சூப்பிய (Sufis)த் தத்துவமும் ராம்மோகன்ராயின் உள்ளத்தில் அழியாப் பேரிடத்தைப் பெற்றன.

பாட்னாவிலிருந்து திரும்பியதும், உருவ வழிபாட்டைப்பற்றியும் இந்து சமூகத்தில் நிலவிய மூடப்பழக்க வழக்கங்களைப் பற்றியும் ஓர் ஆராய்ச்சி நூலை ராம்மோகன் எழுதத் தொடங்கினார். சனாதன தருமத்தை மிகக் கடுமையாகப் போற்றிப் பின்பற்றிய அவருடைய தகப்பனார், ராஜாராமை வீட்டை விட்டு வெளியேறுமாறு கட்டளையிட்டார். அவர் வீட்டை விட்டு வெளியேறினார். சில ஆண்டுகள் ஊர்ஊராகச் சென்று அவர் அலைந்து திரிந்தார். இவ்வாறு அலைந்து திரிந்த காலத்தில், அவர் திபெத்திற்குச் சென்றார். அங்குப் புத்த சமயத்தினுள் உருவ வழிபாடு நுழைந்துவிட்டதை அவர் கண்டித்துப் பேசினார். அதனால், திபெத்தின் மதகுருமார்களான லாமாக்களின் வெறுப்பினை அவர் தேடிக்கொண்டார்.

தம் வாழ்க்கையின் அப்பகுதியைப் பற்றி ராஜாராம் தம்முடைய 'தன் வரலாற்றுக் குறிப்பு' நூலில், பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார் : " என்னுடைய பதினாறும் வயது அளவில், இந்துக்களின் உருவ வழிபாட்டு முறை ஏற்றதுதானா என்பதை ஆராய்ந்து நான் ஒரு நூல் எழுதினேன். இந்நூலும், இப்பொருள்பற்றி வெளிப்படையாக நான் கொண்டிருந்த உணர்ச்சிக்கனிவான கருத்துக்களும் சேர்ந்து எனக்கும், எனக்கு மிக நெருக்கமான உறவினருக்கும் இடையே பகைமையை உண்டாக்கியது. நான் என்னுடைய பயணத்தைத் தொடங்கினேன். இந்துஸ்தானத்தின் எல்லைக்குட்

---

1. பாஸ்ராவில், கி.பி. எட்டாம் நூற்றாண்டில் வாசில்-பி-அதா (Wasil-b-Ata) என்பவரும், அமிர்-பி-உபய்த் என்பவரும் முதாஸிலாக்கின் பகுத்தறிவு இயக்கத்தைத் தொடங்கிவைத்தனர்.

பட்ட பல்வேறு நாடுகள் வழியாகப் பெரிதும் நான் பயணம் செய்தேன். இந்தியாவிற்கு வெளியிலுள்ள சில நாடுகளுக்கும் நான் சென்று வந்தேன்.''

சில ஆண்டுகள் அலைந்து திரிந்ததற்குப் பின்னர், ராம்மோகன் வாரணாசி (காசி)க்குச் சென்றார். அங்கு இந்து சமயத் தத்துவ ஞானத்தைப் பல ஆண்டுகள் அவர் கற்றுத் தேர்ந்தார். 1803-ஆம் ஆண்டு, ராம்மோகனின் தந்தை இயற்கை எய்தினார். சிறிது காலத்திற்குப் பிறகு, அவர் மூர்ஷிதாபாத்திற்குத் தம் இருப்பிடத்தை மாற்றிக்கொண்டார்.

மூர்ஷிதாபாத்தில் இருந்தபொழுது ''ஒரே தெய்வக் கோட்பாட்டினருக்கு ஒரு பரிசு'' (Tuhfut - ul - Muwiah - hidin) என்ற ஆராய்ச்சி நூலை, பாரசீக மொழியில் அராபிய முன்னுரையோடு அவர் எழுதி வெளியிட்டார்.

மனித இனம் முழுவதிலும் 'ஒன்று பரம்பொருள்' என்ற சிந்தனை ஒருமைப்பாடு பொதுவாக இழையோடிச் செல்லுவதைத் தம்முடைய நூலின் முன்னுரையில் அவர் சுட்டிக் காட்டினார். ஆனால், அப் பரம்பொருளுக்குச் சிறப்புப் பண்புகளாகிய அடைகளைக் கொடுக்கத் தொடங்குகின்றபொழுது, வேற்றுமைகள் தோன்றுவதையும் அவர் அம்முன்னுரையில் அறிவுறுத்தியுள்ளார். சமயவாதிகளின் குறுகிய மனப்பான்மையைக் கண்டிக்கும் வகையில் ''நான் உலகின் தொலைவான பகுதிகளில் உள்ள மலைகளிலும், பள்ளத்தாக்குகளிலும் பயணம் செய்துள்ளேன். அங்கு வாழும் மக்கள் எல்லாரும் பரம்பொருள் ஒன்று என்பதைப் பொதுவாக நம்பி வருகின்றனர். அப் பரம்பொருளே படைப்பின் மூலாதாரம் என்றும், அப் படைப்பினை ஆளுவதும் அப் பரம்பொருளே என்றும் அவர்கள் கருதுகின்றனர். ஆனால், அப் பரம்பொருளுக்குத் தனிப்பட்ட பண்புகளை அடைகளாக்கிக் கூறுவதை, அவர்கள் எல்லாரும் ஒப்புக்கொள்ளுவதில்லை. அதைப் போன்றே சமயத்தின் கோட்பாடுகளைக் கொண்ட பல்வேறுபட்ட கிளை நெறிகளைப் போற்றுவதையும், கடிந்தொதுக்கப்பட்ட கட்டளைகளையும் சட்டங்களையும் பின்பற்றுவதையும் அவர்கள் வெறுக்கின்றனர். இந்தப் பகுப்பாய்விலிருந்து நான் ஒரு முடிவிற்கு வந்தேன். என்றும் நிலைபெற்று விளங்கும் பரம்பொருளை நாடிச் செல்லுவது மக்களிடத்தில் இயல்பாகக் காணப்படும் மனப்போக்காகும். இம்மனப்போக்கு ஒவ்வொரு தனிமனிதனிடத்திலும் ஒத்த நிலையில் காணப்படும் மனவியல்பாகும். மனித இனத்தின் பல்வேறு சமயங்களைச் சேர்ந்தவர்களும் குறிப்பிட்ட ஒரு கடவுளிடத்தோ, கடவுளரிடத்தோ ஈடுபாடுடையவர்களாக இருப்பதும், குறிப்பிட்ட சில சிறப்பியல்களையுடையவராகக் கடவுளைக் கருதுவதும், சில புதுமையான வழிபாட்டு முறைகளை மேற்கொள்ளுவதும் அல்லது பக்தியோடு வழி

படுவதும் மனித இனத்திடத்து, பழக்கத்தாலும் பயிற்சியாலும் உண்டான இயற்கைக்கு மாமுன பண்புகளாகும்,'' என்று அவர் மொழிந்துள்ளார்.

இந்நூலில் சமயத்தையும், சமய அனுபவத்தையும் பகுத்தறிவு கண்ணேட்டத்துடன் அணுகுவது பற்றி ராம்மோகன் விரிவாக விளக்கியுள்ளார். ''அடிக்கடி தொடர்புகொள்ளுவதால் உண்டாகக்கூடிய விளைவுகளையும், மக்கள் சமூகத்திடத்தும் தனிமனிதரிடத்திலும் இயற்கையின் உந்துதலால் உண்டாகும் உள்ளார்ந்த பண்புகளையும் வேறுபடுத்தியறியும் ஆற்றல்வாய்ந்த மனிதர்களுடைய நிலை மகிழ்ச்சிக்குரியதாகும். அவர்கள், பல்வேறுபட்ட மக்கள் மேற்கொண்டொழுகும் பலதிறப்பட்ட சமயங்களின் கொள்கைகளிலும், கோட்பாடுகளிலும் காணப்படும் உண்மை இயல்புகளையும் பொய்ம்மைப் பண்புகளையும் பாகுபடுத்தி உணருவார்களானல், அச் சமயங்களுள் எவற்றிடத்தும் நடுவுநிலைமை பிறழாது நடந்துகொள்ளுவார்களானல், யாரால் எடுத்தியம்பப் படுகிறதோ அவருடைய நிலையையும் தகுதியையும் பற்றிக் கவலையுருமல், எல்லாராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்துரைகளை ஆராய்ந்து பார்ப்பார்களானல், என்றும் மகிழ்ச்சிமிக்க மனநிலையோடு அவர்கள் வாழ்வர்'' என்று ராஜாராம் குறிப்பிட்டுள்ளார்.

பல்வேறு சமயங்களை ஒப்பிட்டு ஆராயவேண்டியதன் முக்கியத்துவத்தை அவர் நன்கு வற்புறுத்தியுள்ளார் மேலும், உலகம் முழுவதிலும் 'ஒன்று பரம்பொருள்' என்ற கோட்பாட்டினர் சாதித்துள்ள சாதனைகளைக் கண்டறியுமாறு மக்களுடைய கருத்தை அப்பக்கத்தில் அவர் திருப்பியுள்ளார். ''மனித இனத்தின் இயற்கையில், என்றும் உள்ளார்ந்த செயல்திறன்கள் பொதிந்து கிடக்கின்றன'' என்று அவர் கருதினர். மற்றும், ''நல்லதொரு மனநிலையை உடைய மனிதன் குறிப்பிட்ட ஒரு சமயத்தின் கொள்கைகளை—அவை முதன்மையானவையாக இருந்தாலும், இரண்டாம் நிலையானவையாக இருந்தாலும் ஏற்றுக்கொள்ளுவதற்கு முன்னரோ, பின்னரோ அவற்றைப்பற்றி நடுவுநிலை பிறழாமல், நேர்மை உணர்வுடன் அவன் ஆராய்ந்து, மதிப்பீடு செய்து பார்க்கிருன். அவன் உண்மையைப் பொய்ம்மையிடமிருந்து வேறுபடுத்தியும், உண்மைக் கருத்துரையைத் தவமுன எண்ணங்களிலிருந்து வேறுபடுத்தியும் உணருவான் என்ற அசைக்கமுடியாத நம்பிக்கை நம்மிடம் இருக்கிறது. மேலும், அவன் சமயத்தில் பயனற்ற கட்டுப்பாடுகளுக்கு அடிமையாகாமல் உரிமையுடன் செயல்படவும் முடியும். பயனற்ற அச்சமயக் கட்டுப்பாடுகள் சில வேளைகளில், ஒரு சமயத்திற்கும் மற்றொரு சமயத்திற்கும் இடையே வெறுப்புணர்ச்சியையும் பகைமையுணர்ச்சியையும் தோற்றுவிப்பதற்குரிய ஊற்றுக்களாக விளங்குகின்றன. மேலும், உடல்சார்ந்த துன்பங்களுக்கும்

மன நோய்களுக்கும் காரணமாக அவை அமைந்துவிடுகின்றன. எனவே, அவற்றின் கட்டுப்பாட்டிற்கு அடிமையாகாதவன் பரந்த நோக்கத்துடன் பிற சமயங்களை அணுகமுடியும். அவன் இப்பேரண்டத்தின் இயைபிணைக்க அமைப்பிற்கு மூலாதாரமாக இருக்கும் ஒப்பற்ற பரம்பொருளை நாடவும், சமூகத்தின் நலத்திடத்துக் கருத்தைச் செலுத்தவும் முடியும்'' என்று அவர் மொழிந்துள்ளார்.

அறியாமையும் மூடநம்பிக்கையும் மக்களிடத்தில் மண்டிக்கிடப்பதற்குரிய காரணம் கண்மூடித்தனமான நம்பிக்கையும், காரண காரியத் தொடர்புகளையும் அதன் விளைவுகளையும் பகுத்தறியுந் திறமை யின்மையுமேயாகும். இதை அவர் மிக நயமாக எடுத்தியம்புகிறார்: ''பழக்கவழக்கங்களின் செல்வாக்கினாலும், காரண காரியத் தொடர்புகளின் விளைவுகளைப் பகுத்தறிய இயலாமையாலும் அவர்கள் புனித நதியில் நீராடுவதும், குறிப்பிட்ட ஒரு மரத்தை வழிபடுவதும், ஒரு துறவியைப் போற்றி வணங்குவதும், மோட்சத்திற்குரிய செயல்முறைகள் என்று நம்புகின்றனர். இதைப் போன்றே உயர்ந்த மத குருமார்களிடம் தாங்கள் செய்த கொடிய செயல்களுக்குக் கழுவாயாகப் பொருள் கொடுத்து பாவமன்னிப்புப் பெறவும் அவர்கள் முயலுகின்றனர். (பல்வேறு சமயங்களின் சிறப்பியல்புகளுக்கேற்ப இப்பழக்கம் சிற்சில வேறுபாடுகளுடன் இருந்து வருகிறது.) இதன் மூலம் வாழ்நாள் முழுவதும் செய்த பாவங்களைக் கழுவிவிட்டு, வீடுபேற்றை அடையமுடியும் என்று மக்கள் நம்புவது வியப்பிற்குரிய செய்தியாகும். தாங்கள் கொண்டிருக்கின்ற நம்பிக்கைகளின் விளைவாக இத்தகைய பாவமன்னிப்பைப் பெற்றுத் தூய்மையடைந்து விடலாம் என்று அவர்கள் நம்புகின்றனர். அப் பாவமன்னிப்பைத் தங்களுடைய மதகுருமார்கள் புரியும் அற்புதச் சித்து விளையாட்டாகவே அவர்கள் கருதுகின்றனர். ஆனால், உண்மையில், அது அவர்களுடைய உள்ளத்தில் உண்டாகும் விருப்புவெறுப்புகளுக்கும் நம்பிக்கைகளுக்குமேற்ப அமைகிறது என்ற உண்மையை அவர்கள் உணருவதில்லை. மேலும், இவற்றை நம்பாதவர்களிடத்திலும், ஏற்றுக் கொள்ளாதவர்களிடத்திலும் அவை எத்தகைய விளைவுகளையும் உண்டாக்குவதில்லை என்பதை அவர்கள் அறிந்தவர்களும் அல்லர் இத்தகைய கற்பனைப் பொருள்களால் உண்மையான விளைவுகள் அல்லது பயன்கள் உண்டாகியிருக்குமானால், அது வேறுபட்ட சமயங்களைச் சார்ந்து ஒழுகுகின்றவர்களுக்கும் பொதுவான ஒன்றாக இருக்க வேண்டுமேயொழிய, குறிப்பிட்ட ஒரு நாட்டில் வாழும் குறிப்பிட்ட ஒரு சமயத்தினருடைய நம்பிக்கைக்கும் பழக்கத்திற்கும் உரியதாகமட்டும் இருக்க முடியாது. மனிதர்களுடைய வேறுபட்ட திறமைகளுக்கேற்ப விளைவுகளின் ஆற்றலும் வேறுபடுகின்றது. எனினும், அது குறிப்பிட்ட ஒரு நம்பிக்கையாளரின் நம்பிக்கையைமட்டும் சார்ந்திருக்க

வில்லை. ஒருவர் நஞ்சினை, இனிப்புப் பண்டமென நம்பி உண்பாராஞல், அது அவரிடத்துத் தன் ஆற்றலைக் காட்டிக் கொன்றுவிட வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கின்றோம் அல்லவா ?''

இயற்கை இகந்த நிகழ்ச்சிகளைப் பற்றியும் அற்புதங்களைப் பற்றியும் மக்களிடையே இருந்துவந்த கோட்பாடுகளை ராம்மோகன் வன்மையாக மறுக்கின்ருர். ''சாதாரண மக்களிடத்து சட்டெனத் தோன்றும் எண்ணங்களின் உந்துதலால் தங்கள் அறிவுத்திறனுக்கு அப்பாற்பட்ட அல்லது தங்களால் காரணம் கூற இயலாத செயலையோ, சாதனையையோ காணுகின்றபொழுது அவர்கள் அதை இயற்கை இகந்த நிகழ்ச்சி அல்லது அற்புதச் செயலின் விளைவு என்று கூறுகின்றனர். இந்த உலகில் ஒவ்வொரு பொருளும் காரண காரியத் தொடர்புடையதாக ஒன்ருேடொன்று தொடர்பு கொண்டிருப்பதில் அதனுடைய மறைபொருள் மறைந்துகிடக்கிறது. உலகிலுள்ள ஒவ்வொரு பொருளும் நிலைத்து நிற்பதற்குக் குறிப்பிட்ட சில காரணங்களையும் கட்டுப்பாடுகளையும் அவை சார்ந்துள்ளன. எனவே, எளிதில் புலனுகாத காரணங்களையும், தொடர்பில்லாக் காரணங்களையும் கருத்தில் கொள்ளுவோமானுல், இயற்கையில் உள்ள எந்த ஒரு பொருளானுலும் இப் பேரண்டத்தோடு தொடர்புடையதாக இருப்பதை நாம் உய்த்துணரலாம். ஆனுல், குறிப்பிட்ட ஒருவருடைய அனுபவக் குறைவினுலோ, சட்டெனத் தோன்றும் எண்ணங்களின் எழுச்சியினுலோ ஒரு பொருளினுடைய காரணம் வெளிப்படையாகப் புலனுகாமல் போகலாம். மற்ருெரு மனிதன் அதைக் காண்பானுனுல், அதைத் தன்னுடைய நோக்கத்திற்கு உதவுமாறு பயன்படுத்திக்கொள்ள நல்லதொரு வாய்ப்பாக அதைக் கருதுகிருன். எனவே, அதற்கு அவன் இயற்கை இகந்த இயல்புகள் இருப்பதாகக் கூறத் தொடங்குகிருன். அதன்மூலம் மக்களைத் தன்னை நாடித் திரண்டு வருமாறு அவர்களை அவன் கவர்ந்துவிடுகிருன்'' என்று அவர் கூறும் கருத்துக்கள் பொருள் பொதிந்தனவாகும்.

''இயற்கையிகந்த சக்திகளிடத்தில் தவருன நம்பிக்கை கொள்ளாமல் இருப்பதற்குப் பாதுகாப்பாகத் தொகுப்புவழிப் பகுத்தறிவு ஆராய்ச்சி (Inductive reasoning) முறையினை நாம் போற்றி வளர்க்க வேண்டும். அத்தகைய இயற்கையிகந்த நூல்களால் மதிநுட்பமுடைய மக்கள் ஏமாற்றப்படாமல் இருப்பதற்குத் தொகுப்புவழிப் பகுத்தறிவு ஆராய்ச்சி முறையே தக்கப் பாதுகாப்பாக அமையும்'' என்று அவர் குறிப்பிடுகிருர். நாம் அதைப்பற்றிச் சிறப்பாகச் சொல்லக் கூடியது இதுதான். கூர்த்த மதியுடனும் எதையும் ஊடுருவிச் சென்று ஆராய்ந்து பார்க்கும் திறனுடனும் நோக்கிய போதிலும், சில சமயங்களில் சில அற்புதப் பொருள்களுக்கும் நிகழ்ச்சிகளுக்கும் உரிய காரணம் சிலரால் அறிந்து

கொள்ள முடிவதில்லை. அத்தகைய நிலைகளில் நாம் நம்முடைய அகவுணர்வின் உதவியை நாடவேண்டும். ‘இயற்கைச் சட்டத்திற்கு இயைந்துவராத ஒரு நிமித்த காரணத்திடத்து தொடர்புபடுத்திக் கூறுவது, அல்லது நம்மால் அதற்குரிய காரணத்தை அறிந்து கொள்ளும் ஆற்றலின்மையை இயற்கை இகந்த செயல் என்று சொல்லத் துணிவது அறிவுடைமையாகுமா என்று நம்மை நாமே கேட்டுக் கொள்ளவேண்டும்’’.

‘‘உலகியல் வாழ்க்கைச் செயல்முறைகளில், மக்கள் ஒரு பொருளுக்கும் மற்றொரு பொருளுக்கும், அல்லது ஒரு நிகழ்ச்சிக்கும் மற்றொரு நிகழ்ச்சிக்கும் இடையே உள்ள தொடர்பினை அறிவதில்லை. ஆயினும், அவற்றுள் ஒன்று காரணமாக அமைய, மற்றொன்று அதனுடைய காரியமாக விளைகின்றது என்பதை அவர்கள் நம்புவதில்லை. ஆனால், அதில் சமயத்தின் செல்வாக்கோ, மூடப் பழக்க வழக்கங்களின் செல்வாக்கோ உண்டானால், அவற்றிடையே தொடர்புகளிருக்க இயலாது, அல்லது அதையடுத்து நிகழ்வதற்கு இயலாது என்பது வெளிப்படையாகத் தோன்றினாலும், அவர்கள் ஒன்றைக் காரணம் என்றும், அவற்றுள் மற்றொன்றை அதன் விளைவு என்றும் கூறத் தயங்குவதில்லை. சில சமயங்களில் வாழ்க்கையில் பெருந்துன்பம் உண்டாகாமல் தவிர்க்கச் செய்யப்படும் சாந்திச் சடங்குகளையோ, குறிப்பிட்ட சில வழிபாட்டு வேண்டுகோள் களையோ நாம் இதற்குச் சான்றாகக் காட்டலாம். அல்லது பெருங் கொள்ளை நோயிலிருந்து விடுதலை பெறுவதற்காகக் குறிப்பிட்ட மாயமந்திரங்கள் செய்தல், தாயத்துக் கட்டுதல், பேய் ஓட்டுதல் போன்ற செயல்களில் ஈடுபடுவதையும் இங்கு நாம் குறிப்பிடலாம்’’ என்று அவர் சமயத்தின் பேரால் நடைபெறும் முறைகேடுகளைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

அற்புத நிகழ்ச்சிகளைப் பற்றிய வாதங்களையும், சாதனைகள் பற்றிய பேச்சுக்களையும் ராம்மோகன் முற்றிலும் மறுத்துரைத்தார். சட்டங்களை மீறுவதற்குக் கடவுளுக்குக்கூட ஆற்றல் கிடையாது என்பதை நிலைநாட்டும் அளவிற்கு அவர் சென்றுவிட்டார். ‘‘இயற்கையின் போக்கிற்கு மாறாகச் செய்ய இயலாத பொருள்களைச் செய்வதற்கு இவ்வுலகைப் படைத்தவனுக்குக்கூட ஆற்றல் கிடையாது. எடுத்துக்காட்டாகக் கடவுளோடு கூட்டுப்பங்கு கொள்ளுதல் அல்லது கடவுள் என்று வேறொன்றும் இல்லை; தாமே கடவுள் என்று மதகுருமார்கள் கூறுவது அல்லது முரண்பட்ட இரண்டு மாறுபாடுகள் ஒன்றாக இணைந்திருப்பதாகச் சொல்லுவது போன்றவற்றை நாம் குறிப்பிடலாம்’’ என்று அவர் மொழிந்துள்ளமை இங்குக் கருதத்தக்கது.

தீர்க்கதரிசிகள் மூலம் கடவுள் உலகிற்கு வழிகாட்டுகிறார் என்ற பொதுவான நம்பிக்கையையும் அவர் வன்மையாக எதிர்த்தார்.

இயற்கையில் உள்ள பிற பொருள்களைப் போன்றே தீர்க்கதரிசிகள் தோன்றுவதும், அருள்வெளிப் பாடுகள் உண்டாவதும் கடவுளோடு தொடர்பு இல்லாத புறச்சூழல் காரணங்களிலேயே நடைபெறு கின்றன. அதாவது, 'அவை புதிய பொருள்களைப் படைப்போனின் முயற்சியால் படைக்கப்படும் புதிய பொருள்களைச் சார்ந்துள்ளன' என்பதை, பகுத்தறிவு வாதங்களைக் கொண்டு மெய்ப்பிக்க அவர் முயன்றார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ராம்மோகன் சமயத்தைப் பற்றிக் கொண்டிருந்த அடிப்படைக் கருத்துக்களைத் தெளிவாக எடுத்துரைக்க வேண்டும் என்பதற்காக நான் அவருடைய 'ஒரே தெய்வக் கோட்பாட்டினருக்கு ஒரு பரிசு' என்ற நூலின் கருத்துக்களைப் பேரளவிற்கு மேலே விளக்கிக் கூறியுள்ளேன். அக்காலத்திலேயே 'ஒன்றே கடவுள்' என்ற கோட்பாட்டின் அடிப் படையில் அனைத்துலகச் சமயத்தைப் பற்றிய கருத்துக்களை அவர் நன்கு வகுத்துக்கொண்டார்.

அச்சமயத்தில்தான், கிழக்கிந்தியக் கம்பெனியின் வருவாய்த் துறையில் ராம்மோகன் ஒரு வேலையில் அமர்ந்தார். முதலில் பகல் பூர், ராம்கர் போன்ற இடங்களில் அவர் பணிபுரிந்தார். பின்னர் 1809ஆம் ஆண்டு வடக்கு வங்காளத்தில் உள்ள ரங்கபுரியில் திரு. ஜான் திக்பி (John Digby) என்ற வருவாய்த்துறை அதிகாரியின் உதவியாளராக அவர் பணிபுரியத் தொடங்கினர். 1809 முதல் 1914 வரை அவர் அங்கு வாழ்ந்தார். அப்பொழுது அவருக்குக் கிடைத்த ஓய்வு நேரத்தை ஆழ்ந்து படிப்பதிலும், கலந்து உரை யாடுவதிலும் கழித்துவந்தார். அச்சமயத்தில் தாந்திரிகச் சமயப் பேரறிஞரான ஹரிஹரானந்த தீர்த்த சுவாமிகள் என்ற பெரியா ரோடு அவர் நெருங்கிய தொடர்புகொண்டார். அவருடைய உதவியின் மூலம் ராம்மோகன் தாந்திரிக சமய இலக்கியங்கள் அனைத்தையும் நன்றாகக் கற்றுத் தேர்ந்தார். அக்காலத்தில் ரங்க புரி ஒருவகை உலகொன்றிய நோக்கு (Cosmopolitanism) டையதாக இருந்தது. அங்கு வாணிகத்தின்பொருட்டு முஸ்லீம்களும், சமணர் களும் ஒருங்கு திரண்டிருந்தனர். ராம்மோகன் சமணர்களோடு தொடர்புகொண்டார். அவர்களுடைய திருநூலான 'கல்பசூத் திரத்தையும் சமணசமயத்தின் வேறு நூல்கள் பலவற்றையும் ராஜாராம் கசடறக் கற்றார்.

அவர் ரங்கபுரியில் வாழ்ந்தபொழுது, இங்கிலாந்திலும் ஐரோப்பாவிலும் உண்டான அரசியல் வளர்ச்சியில் எழுச்சிமிக்க ஆர்வம் கொண்டார். இங்கிலாந்திலிருந்து திக்பிக்கு வந்து கொண்டிருந்த செய்தித்தாள்கள், இதழ்கள், ஆராய்ச்சி ஏடுகள் ஆகிய அனைத்தையும் அவர் பேரார்வத்தோடு படித்து வந்தார். அதன் மூலம் தம்முடைய இருபத்திரண்டாம் வயதில் முதன்முதலா

கக் கற்கத் தொடங்கிய ஆங்கில மொழியின் அறிவைமட்டும் அவர் வளர்த்துக் கொள்ளவில்லை; குறிப்பிடத்தக்க அளவிற்கு ஐரோப்பிய அரசியல் சிந்தனையைப் பற்றிய அறிவையும் அவர் பெற்றார். அக் காலத்திய ஐரோப்பாவில் மேம்பட்டு விளங்கிய அரசியல் முற் போக்குக் கொள்கைகள் அவர் உள்ளத்தைக் கவர்ந்ததாக டிக்பி குறிப்பிடுகிறார்.

கல்கத்தாவில் ஆற்றிய அரும்பணி

*1814*ஆம் ஆண்டு டிக்பி இந்தியாவைவிட்டுத் தாயகம் சென்றார். அது நன்மை தரத்தக்க செயலாக அமைந்தது. அதுவரை கிழக்கிந்தியக் கம்பெனியில் பணிபுரிந்து வந்த ராம்மோகன், அப் பணியிலிருந்து விலகினார். அக்காலத்தில் அவர் கல்கத்தாவில் நிலையாகத் தங்கியிருந்தார். பல நூற்றாண்டுகளாகச் சடங்குகளாலும், மூடநம்பிக்கைகளாலும், பழக்கவழக்கங்களாலும் மூடி மறைக்கப் பட்டிருந்த இந்தியாவின் ஆழ்ந்த மெய்யுணர்வுக் கருத்துக்களை அழிவிலிருந்து மீட்கவேண்டும் என்ற வேட்கையுடையவராக ராம் மோகன் வாழ்ந்து வந்தார். இன்றைய உலகின் உயிரோட்டமிக்க சிந்தனையின் போக்கிற்கும், புதுமைக் காலத்தின் இயல்பிற்கும் ஏற்ற வகையில் அவ்விழுமிய கருத்துக்களையும் கொள்கைகளையும் இசையுமாறு செய்யவேண்டும் என்ற குறிக்கோளுடையவராக அவர் இருந்தார். அத்திருப்பணியைச் செய்வதற்கு அவருக்கு இப்பொழுது நல்லதொரு வாய்ப்புக் கிடைத்தது.

ராம்மோகன் பின்பற்றிய ஆராய்ச்சி முறை பெரிதும் அவருக்கே தனிச் சிறப்புடையதாக அமைந்த முறையாகும். சாத்திரங்களின் சான்று வலிமையை அவர் மேற்போக்காகவும் உடனடியாகவும் மறுத்துவிடவில்லை. சாத்திரங்களைச் சான்றாகக் கொண்டுமட்டும் மனிதனின் மிக உயர்ந்த மெய்யுணர்வுக் கருத்துக்களை நாம் நிலைநாட்டக்கூடாது என்பது அவருடைய உள்ளக்கிடக்கையாகும். அவற்றை மனிதனுடைய உணர்வையும், பகுத்தறிவையும் ஓரளவிற்குக் கருத்தில் கொண்டு நாம் நிலைநாட்டவேண்டும் என்பது அவருடைய எண்ணமாகும். இவ்வாராய்ச்சிக்கு மீமாம்சை வாதிகள் உண்மையைக் காண்பதற்கு மேற்கொண்ட ஆராய்ச்சி முறையை அவர் பின்பற்றினார். சாத்திரத்தில் காணப்படும் குறிப்பிட்ட ஒரு சான்றினை எடுத்துக்கொண்டு, அதன் மெய்ம்மையை

ஐயுறுவதும், அதன் நம்பத்தக்க நிலையைக் கேள்வி கேட்பதும், பின்னர் அதைப் புதிதாகச் சோதித்துப் பார்ப்பதும், பிறகு ஒரு முடிவிற்கு வருவதும் மீமாம்சைவாதிகள் போற்றிய ஆராய்ச்சி முறையாகும். இம்முறையையே நம் ராம்மோகன் பின்பற்றினார்.

கி. பி. 1815ஆம் ஆண்டில், ராம்மோகன் வங்காள மொழியில் 'வேதாந்தம்' என்ற நூலை மொழி பெயர்த்தார். அந்நூலின் முன்னுரையில் அவர், 'சாத்திரங்களும் அறிவாராய்ச்சியும் வரையறுக்கும் வழியை நாம் பின்பற்ற வேண்டும். அதன் மூலம், இவ்வுலகிலும் மறு உலகிலும் நாம் முழுமையான மனநிறைவு அடைய முடியும்' என்று அவர் குறிப்பிட்டுள்ளார். கேனோ உபநிடதத்தின் ஆங்கிலப் பதிப்பின் முன்னுரையில், ஓர் உண்மையை வரையறுப்பதற்குச் சாத்திரங்கள், பகுத்தறிவு, இறையருள் என்ற மூன்று ஆக்கக் கூறுகள் இன்றியமையாதவை என்று அவர் அறிவுறுத்தியுள்ளார். "நம்மை நாமே சாத்திரங்களுக்கும் பகுத்தறிவு வாதத்திற்கும் அடிமையாக்காமல் ஆராய்வதே சிறந்த ஆராய்ச்சி முறை என்று நாம் கூறலாம். ஆனால், நாம் அவற்றின் ஒளியினைக்கொண்டு சிந்தனையையும் இயற்கை உளச் சார்பையும், ஒழுக்கத்தைப்பற்றிய அறிவையும் ஒளிபெறச் செய்து கொள்ளவேண்டும். பின்னர் ஆண்டவனுடைய அன்புதவியை நாம் நாடவேண்டும்" என்று ராம்மோகன் மொழிந்துள்ளமை இங்குச் சிந்திக்கத்தக்கது.

'அறிவுக்குப் பொருந்திய கருத்தினைக் குழந்தை ஒன்றுசொல்லுமானால் கூட நாம் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். அறிவுக்குப் பொருந்தாத ஒன்றைப் பிரமனே சொன்னாலும் அதை நாம் வெறும் பதர் என்று தள்ளிவிட வேண்டும்' என்ற வசிஷ்டரின் அறிவுரையைத் தாம் எழுதியுள்ள சாத்திரங்களைப் பற்றிய ஆராய்ச்சி நூல்களிலும், வேறு பல நூல்களிலும் ராம்மோகன் பல இடங்களில் மேற்கோளாகக் காட்டியுள்ளார்.

முழுமுதற் பொருளை அறிவதற்குப் புலன்களும் மனமும், அறிவும் வழிவகைகளாக உள்ளன என்று உபநிடதங்கள் கூறுகின்றன. எனினும், பிரமதத்துவம் எனப்படும் கடவுளைப் பற்றிய அறிவு இயற்கையிகந்தது என்றோ, மனிதரின் புலனுணர்வுக்கு அப்பாற்பட்டது என்றோ அவை கூறவில்லை. அதைப் போன்றே, சாத்திரங்களின் அடிப்படையில்தான் கடவுளைப்பற்றிய அறிவைப் பெற்றுத் தேர்ச்சியுற வேண்டும் என்றோ உபநிடதங்கள் குறிப்பிடவில்லை. பிறப்பு, வாழ்க்கை, அழிவு என்ற மூன்றையும் ஆதாரமாகக் கொண்டு இப்பேரண்டத்திற்கு மூல காரணமான முழுமுதற் பொருளைப் பற்றிய கோட்பாட்டினை வேதாந்தம் வரையறுத்துக் கூறுகிறது. இதிலிருந்து பிரமத்தை அறிவதற்குரிய வழியை மனம், புத்தி, சோதனை என்ற மூன்றும் வகுத்துத் தருகின்றன என்ற உண்மை எளிதில் புலனாகின்றது. உண்மையை ஆய்ந்து காண்பதற்கும், முடிவிற்கு

வருவதற்கும் இப்பகுத்தறிவு ஆராய்ச்சி முறையையே ராம்மோகன் போற்றிப் பின்பற்றி இருக்கிருர். ஆனுல், என்றும் சாத்திரங்களின் ஆணையை அவர் மறுத்ததில்லை. சாத்திரங்களின் அறிவுரைகளை நாம் ஏற்றுக்கொள்ளுவதற்கு முன்பு, அவற்றை நாம் ஆராய்ந்து பார்க்கவேண்டும் என்பதைத்தான் அவர் வற்புறுத்திக் கூறுகிருர்.

1815ஆம் ஆண்டில் ராம்மோகன் ஒரு சங்கத்தை நிறுவினுர். அதற்கு 'ஆன்மிக சபை' என்பது பெயர். அதன் மூலம் சாதி முறைகளையும், பெண்களைக் கூலிகளாக விற்பதையும் (Kulinism) வன்மையாக எதிர்த்து, அவர் கிளர்ச்சி செய்தார். மேலும் அம் மன்றத்தின் மூலம் தந்தை, கணவர் ஆகியோருடைய சொத்துக் களில் இந்துப் பெண்களுக்குப் பங்கு உண்டு என்ற உரிமையை ஒப்புக்கொள்ளுமாறு செய்வதற்கு ஓயாது அவர் பாடுபட்டார். நான்கு ஆண்டுகளுக்கெல்லாம் இச்சபை மூடப்பட்டது. பிரிட்டிஷா ரின் பழைமைப்பற்றையும், காலனி ஆதிக்க வெறியையும் வெளிப் படுத்திய 'ஜான் புல்' (John Bull) என்ற இதழும், இந்து சமய வைதிகர்களின் வெறியை வெளிப்படுத்திய 'சமாசார சந்திரிகை' என்ற இதழும் ராஜாராமுடைய முற்போக்குக் கருத்துக்களை எதிர்ப்பதில் ஒன்ருகச் சேர்ந்து நின்றன. பிற வகைகளில் முரண் பாடு கொண்ட, அவ்விதழ்கள், இத்திருப்பணிக்கு மட்டும் ஒன்ருகச் சேர்ந்து ராம்மோகனை ஓயாது தாக்கிவந்தன. அவைமட்டுமல்லா மல், வைதிக இந்துக்களின் 'தரும சபையும்' அவரை மிகக் கடுமையாக எதிர்த்துப் போரிட்டது.

ராம்மோகன், "நான் என்றுமே இந்து சமயத்தைத் தாக்கியது இல்லை; மூட நம்பிக்கைகளையும் குருட்டுப் பிடிவாதங்களையுமே தாக்கினேன்" என்று அறுதியிட்டு உறுதியாகக் கூறியும், வைதிக இந்துக்கள் அவருடைய இரத்தத்தைக் குடித்துத் தங்கள் வெறி யைத் தணித்துக்கொள்ளத் துடித்தனர். அவர் உடன்கட்டை யேறுதலாகிய 'சதியை' ஒழிப்பதற்கு அல்லும் பகலும் அயராது பாடுபட்டு வந்த காலத்தில், 'தரும சபை' அவரை மிகவும் மும்முர மாகத் தாக்கி வந்தது. இந்நிலையில் இங்குச் சிறப்புமிக்க செய்தி ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். கீழ்த்திசைப் பண் பாட்டு ஆராய்ச்சியாளர்களுள் சிறப்புமிக்கவரான ஹொரேஸ் ஹெய்மன் வில்சன் (Horace Heyman Wilson) என்பவர், சதியை ஒழிப்பது இந்து சமயச் செயல் முறைகளில் தலையிடுவதாகும் என்ற முடிவிற்கு வந்தார். இது முற்றிலும் தவறு என்பதை ராம்மோகன் மெய்ப்பித்துக் காட்டினுர். கல்கத்தா உயர்நீதிமன்றத்தின் வழக் குரைஞராகப் பிரான்சிஸ் பத்தியே (Francis Bhathie) பணியாற்றி வந் தார். அவரைத் தரும சபையினர், தங்கள் சார்பில் 'சதி' ஒழிப்பை எதிர்த்து வழக்காடப் பயன்படுத்திக் கொண்டனர். விதவைகளை உயிருடன் கணவன்மார்களுடைய சிதைகளில் வைத்துத் தீயிட்டு

எரிக்க அனுமதி அளிக்கவேண்டும் என்ற விண்ணப்பத்தை, அந்த வழக்குரைஞர் மூலம் இங்கிலாந்தின் பாராளுமன்றத்தில் சமர்ப் பிக்க வைதிக இந்துக்கள் முனைந்து நின்றனர். 'நான் உங்கள் சார்பில் இப்பொழுது இங்கிலாந்திற்குப் போகிறேன். உங்களுடைய விருப்பத்தை எப்பாடு பட்டேனும் நான் நிறைவேற்றி வைப்பேன்; என் உடலால், உள்ளத்தால், உரையால் இயன்ற வகையெல்லாம் அதற்காக நான் முயன்று பார்ப்பேன்; என்னுடைய கவனக் குறைவால் தவறொன்றும் நடைபெறாமல் பார்த்துக்கொள்ளவே நான் இப்பொழுது இங்கிலாந்திற்குப் போகிறேன்' என்று இங்கி லாந்திற்குப் புறப்படுவதற்கு முன்பு, கல்கத்தாவில் நடைபெற்ற கூட்டமொன்றில் அவர் பேசியுள்ளார். ஆனால், மதிப்புவாய்ந்த பிரிட்டிஷாரான பத்தியேவின் அரும்பெரும் முயற்சிகள் எல்லாம் வீணாயின. ராம்மோகன்ராயின் துணிச்சல்மிக்க தீவிர முயற்சி களால் சதி ஒழிக்கப்பட்டது.

1815-இல், வேதாந்த சூத்திரத்தை ராம்மோகன் வங்காள மொழியில், மொழி பெயர்த்தார். 1816-இல் அவர் 'வேதாந்த சாரத்தை' வங்காள மொழியிலும், 'வேதாந்தத்தை' ஆங்கில மொழியிலும், மொழி பெயர்த்து வெளியிட்டார். அதே ஆண்டில், அவர் ஆங்கிலத்திலும் வங்காளியிலும் ஈசோ, கேனோ உபநிடதங் களை மொழிபெயர்த்தார். 1817-இல் கதோ, மாண்டூக உபநிடதங் களை அவர் வங்காளியில் வெளியிட்டார். வேதாந்த சூத்திரத்தை யும், உபநிடதங்களையும் ஆங்கிலத்திலும், வங்காள மொழியிலும் மொழிபெயர்ப்பதற்குச் செய்யப்பட்ட முதல் முயற்சிகளென இவற்றை நாம் குறிப்பிடலாம். 1823-ஆம் ஆண்டில், "இந்துப் பெண்களின் உரிமைகளில் தலையீடு" என்ற சிற்றேடு ஒன்றை ராம் மோகன் எழுதி வெளியிட்டார். அச்சுவடியில் தந்தை, கணவன் மாருடைய சொத்தில் பங்கு பெறுவதற்கு இந்துப் பெண்களுக்கு உரிமை தரப்படவேண்டும் என்று அவர் கோரினார். 1827-ஆம் ஆண்டு மிருதியுஞ்சயன் எழுதிய 'வச்சரசூசி' என்ற சமஸ்கிருத நூலை வெளியிட்டார். அந்நூல் 'சாதி' என்ற சமூக அமைப்பு முறையை எதிர்த்து எழுதப்பெற்ற ஆராய்ச்சி நூலாகும்.

கிறித்துவ மிஷனரியாரோடு கருத்து மாறுபாடு

கி. பி. 1821-ஆம் ஆண்டில் கல்கத்தாவின் யூனிடேரியன் சங்கம் தொடங்கப்பெற்றது. அச்சங்கத்தின் வழிகாட்டியாக இருந்து பொருளுதவி செய்தவர் ராம்மோகன். இந்நாட்டு மக்களின் வாழ்க்கைநிலை எல்லா வகையிலும் முன்னேற்றம் அடையப் பாடு படவேண்டும் என்பதே அச்சங்கத்தின் இலட்சியமாக இருந்தது. அச்சங்கத்தின் நோக்கங்களையும் குறிக்கோள்களையும் வரையறுத்துக் கொடுத்தவர் நம் ராம்மோகன்ராய். பெரும்பான்மையான மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்தும் பிரச்சினையைத் தீர்ப்பதற் குரிய குறிப்பிடத்தக்க பதிவேடாகவும், வியக்கத்தக்க வகையில் புதுமை நோக்குடையதாகவும் அச்சங்கத்தின் நோக்கங்களும் கொள்கைகளும் வகுக்கப்பெற்றமை போற்றுதற்குரியதா கும். ஆழ்ந்த ஆன்மிகவாதியான ராம்மோகன், வாழ்க்கையில் உலகியல்சார்ந்த பகுதிகளையும் பொருளாதார இயல்புகளையும் புறக்கணிக்காமல் போற்றியமை நம் கருத்தைக் கவருகின்றது. வாழ்க்கையை ஆன்மிக நோக்கொடு பார்க்கின்றவர்கள் என்று சொல்லிக் கொள்ளுகின்றவர்களுள், பெரும் பான்மையானவர்கள் பெரிதும் இவற்றைப் பற்றிக் கவலைப்படாததை நாம் இன்றும் காண்கிறோம். தனிமனிதன் ஒருவனுடைய வாழ்க்கையின் பகுதி களில் உள்ளார்ந்த பண்புகளினுடைய ஒற்றுமையை அவர் முற்றி லும் நன்குணர்ந்திருந்தார். அத்துடன் மனிதனின் கடைத் தேற்றம் என்பது சிறுசிறு துணுக்குகளால் உண்டாவதன்று; அது முழுநிறைவு பெற்றதாகத் தானிருக்க முடியும் என்பதையும் அவர் புரிந்து கொண்டிருந்தார்.

அச்சங்கத்தின் ‘நோக்கங்களும் குறிக்கோள்களும்’ என்ற தலைப்பில், “எனவே, எவையெவை கல்வியறிவை எங் கும் பரப்புகின்றனவோ, அறியாமையையும் மூடநம்பிக்கையையும், குருட்டு நம்பிக்கைகளையும் வெறியுணர்ச்சியையும் அழித்தொழிக் கின்றனவோ, அறிவுத்திறனை உயர்த்துகின்றனவோ, ஒழுக்கநெறிக் கொள்கைகளைத் தூய்மைப்படுத்துகின்றனவோ, அனைத்துலக அன் பையும் செயல்முறை அருளுணர்வையும் போற்றி வளர்க்கின் றனவோ......அவையெல்லாம் இச்சங்கத்தின் நோக்கங்களையும் குறிக்கோள்களையும் கொண்ட அமைப்புத் திட்டத்தில் தழுவிக்

கொள்ளப்படும். இந்நாட்டின் எண்ணற்ற மக்களின் வாழ்க்கை நிலைகளை மேம்படுத்தவும், பயன் கலைகளைப் போற்றி வளர்க்கவும், அவர்களிடையே ஓயாது உழைக்குந் திறனை வளர்க்கவும், அதன் விளைவாக அவர்களுடைய சமூகக் குடும்ப வசதிகளைப் பெருக்கவும் முயலுவதையே இக்குழு தன்னுடைய முக்கிய நோக்கங்களாகக் கொண்டிருக்கிறது. மேலும், இயற்கை சமூகம் ஆகிய இரண்டின் அடிப்படைத் தேவைகளை முழுமையும் பூர்த்தி செய்தால்தான் அறிவுத் திறனிலும், ஒழுக்கமுறைகளிலும், சமயத்துறையிலும் உயர்ந்த அளவு முன்னேற்றம் தொடர்ந்து உண்டாகும் என்று எதிர்பார்க்கக் கூடாது என்பதை நம்முடைய அனுபவம் அறிவிக்கிறது'' என்று ராம்மோகன் தெரிவித்துள்ள கருத்துக்கள் நம் சிந்தனையைத் தூண்டுவனவாகும்.

அச்சமயத்தில் கிறித்துவ சமயத்தொண்டர் குழுக்களின் சிறப்பு மிக்க நிலைக்களனாக வங்காளத்திலுள்ள செராம்பூர் விளங்கியது. இந்தியாவிற்கு முதன்முதலில் வந்த இச்சமயத் தொண்டர் குழுக்களில் சிறந்த கல்விமான்களும், பக்திமான்களும் பலர் இருந்தனர். அவர்களுள் சிலருக்கு வங்காளம் நன்றிசெலுத்தக் கடமைப்பட்டிருக்கிறது. அவர்களுள் தவத்திரு வில்லியம் கேரே (Rev. William Carey) போன்றவர்களை என்றும் வங்காளம் மறக்கமுடியாது. ஆனால், அவர்கள் அனைவரும் மதமாற்றஞ் செய்வதில் ஈடுபட்டிருந்தமையால், அன்றைய சூழலில் அவர்களும் சமயப்பூசலில் சிக்கிக் கொள்ள வேண்டியவர்களாயிற்று. தங்களுடைய சமயமே சிறப்பு மிக்கது என்ற ஒருதலைச் சார்பான கருத்துடையவர்களாக அவர்கள் வாழவும் நேர்ந்தது. இந்துசமயத்தை எதிர்த்துத் தாக்கியபொழுது அடிக்கடி அவர்களுடைய ஒருதலைச்சார்பும், இந்துசமயத்தைப் பற்றிய தெளிந்த அறிவின்மையும் புலனாயின. ராம்மோகன் வங்காள மொழியில் ஓர் இதழையும், ஆங்கிலத்தில் ஓர் இதழையும் வெளியிடத் தொடங்கினார். வங்காளியில் வெளியிடப்பட்ட இதழிற்கு 'பிரமன் சபதி' (பிரமத்தைப் பற்றிய ஆராய்ச்சி) என்பதாகும். ஆங்கில இதழிற்கு 'பிரமானிகல் மேகசின் (Brahmanical Magazine) என்று அவர் பெயரிட்டிருந்தார். செராம்பூர் சமயத் தொண்டர்களின் தாக்குதல்களுக்கு எதிராக அவ்வாங்கில இதழில் இந்துசமய ஒருமைக் கோட்பாட்டினைப் போற்றிக் காக்கும் வகையில் அவர் எழுதிவந்தார்.

கிறித்துவ சமயத்தின் மூவொருமைக் (Trinitarianism) கோட்பாட்டை ராம்மோகன் மிகவும் வன்மையாகக் கண்டித்தார். மூவொருமைக் கோட்பாட்டைப் பற்றி மிகவும் கடுமையான வாத எதிர்வாதங்கள் நடைபெற்றன. ராம்மோகனும் அவருடைய நண்பரான தவத்திரு ஆதாம் (Rev. Adam) என்பவருக்கும் இடையே ஒருபுறம் சுவையான சர்ச்சை நடந்தது. மற்றொருபுறம் ராம்

மோகனுக்கும் தவத்திரு. டாக்டர் ரைலண்டு (Dr. Ryland), லெப்டினன்ட் ஒயிட் (Lt. White) என்பவர்களுக்கும் இடையே கடுமையான வாத எதிர்வாதங்கள் நடைபெற்றன. 'ஆசியக் குறிப் பேடு' எனப்பட்ட 'ஏஷியாடிக் ஜர்னலில்' (Asiatic Journal), கிறித்துவ சமயத்தொண்டர் ஒருவர் மூவொருமை தத்துவத்தை எண்பிக்க மேற்கொண்ட கணக்கியல் வாதங்களை எதிர்த்து, ராம் மோகன் தம் கருத்துரைகளை எழுதுவதில் ஈடுபட்டார். "சிறிது காலத்திற்கு முன்பு மூவொருமைக் கொள்கைக்கு ஆதரவாகக் கணக் கியல் சார்பான வாதங்களைத் தெய்விகச் சான்றோர் ஒருவர் சான் ருகக் காட்டியுள்ளார்......ஒரு முக்கோணத்தை மூன்று கோடுகள் சேர்ந்து உருவாக்குவதைப் போன்று, மூன்றுபேர் சேர்ந்து ஒரு தெய்வமாகத் தோன்றுகின்றனர் என்பது அவருடைய வாதமாகும். சர் ஐஸாக் நியூட்டனைப்போன்று கணக்கியலில் பேரறிவும் பேரீடு பாடும் கொண்டிருந்தவர்கள் வேறு யாரும் இருக்கமுடியாது. ஆனால், அவருடைய அறிவுத்திறன் கண்டறியாத ஒன்றை—மூவொருமைக் கோட்பாட்டிற்கு ஆதரவாகக் காணுத இக்கருத்தை—மூவொரு மைக் கோட்பாட்டினர் உலகிற்கு அறிவிக்க முன்வந்தமை நமக்கு வியப்பை அளிக்கிறது. அவருக்கு இக்கருத்து உண்மையென்று தோன்றியிருந்தால், இதைப்பற்றிக் கூருமல் இருந்திருப்பாரா என்ற எண்ணம் எழுகிறது. கடவுளின் தலைமையையும் முக்கோணத்தை யும் ஒப்புமைப்படுத்திக் கூறுவது முதலில் கடவுளின் இருப்பையே மறுப்பதாகும். ஏனெனில், குறிப்பிட்ட நிலைகளிலிருந்து அல்லது சார்புநிலைகளிலிருந்து கடவுளின் இருப்பையும், இயல்பையும் வேறு வகையில் விரித்துரைப்பது என்பது கருத்தளவில் ஒப்புக்கொள்ளக் கூடியதேயொழிய, மெய்ம்மையான இயல்புடையதாகக் கொள்ள இயலாது".

"இரண்டாவதாக, தந்தைக்கும் திருக்குமரனுக்கும், புனித ஆவிக்கும் இடையே அவர்கள் உண்டாக்க விரும்பும் ஒற்றுமை நயத்தை—ஒருமைப்பாட்டை அக்கருத்து அழித்துவிடுகிறது. ஒரு முக்கோணத்தின் மூன்று பக்கங்கள் தனித் தனியாக இருப்பன வென்று கருதப்படுகின்றன. அவற்றை 'மூவரும் ஒருவரே' என்ற கோட்பாட்டிற்குச் சான்ருகக் காட்டுவது பொருந்தாமல் போகிறது."

"மூன்ருவதாகக் கடவுளின் மூன்று கூறுகளாக உள்ள மூவரை யும் அது மறுக்கிறது. ஏனெனில், முக்கோணத்தின் ஒவ்வொரு பக்கத்தையும் தனித்தனியே நாம் முக்கோணம் என்று சொல்லுவ தில்லை. அதைப் போன்றே 'கடவுள்' என்ற ஒன்றை உருவாக்கும் மூவரையும் நாம் 'கடவுள்' என்ற அடையால் குறிப்பிடுவதற்கு இயலாது."

"நான்காவதாக இந்து சமயத்தின் ஒரு கிளையினர் கடவுளை

நான்கு பேர்களின் வடிவத்தைக் கொண்டவர் என்னும் பொருளில் 'சதுர்புகத்மோக்' என்று அழைக்கின்றனர். அவர்கள் இந்த வாதத்தை அடிப்படையாகக் கொண்டு நான்கு பக்கங்களைக் கொண்ட சதுர வடிவத்தைப் போன்று கடவுள் இருப்பதாக வாதாடுவதற்கு இக்கருத்து வாய்ப்பு அளிக்கிறது."

"ஐந்தாவதாக இத்தகைய வாதம் இந்துக்களுக்கே பெரிதும் பொருத்தமுடையதாகத் தோன்றும். ஏனெனில், ஒரு கடவுளின் தலைமையின்கீழ், பல்வேறு தெய்வங்களைப் பெரும்பாலும் போற்றி வழிபடுகின்றவர்கள் இந்துக்களே. அவர்கள் தங்கள் கொள்கையை நிலைநாட்டுவதற்கு இவ்வாதத்தைப் பின்பற்றுவதே மிகவும் பொருத்தமாகும்" என்பன ராம்மோகன் மூவொருமைக் கோட்பாட்டினருடைய கருத்துக்களுக்கு எதிராக எழுதிய மறுப்புரைகளாகும்.

கி. பி. 1820 முதல் 1823 வரை கிறித்துவ சமயத் திருத்தொண்டர்களிடத்து இக்கோட்பாட்டைப்பற்றி அவர் கலந்து உரையாடி வந்தார். 1820இல் அமைதிக்கும் இன்பத்திற்கும் வழி காட்டும், 'இயேசு பெருமானின் அறவுரைகள்' என்னும் சிறு நூல்' ஒன்றை அவர் வெளியிட்டார். அந்நூலின் முன்னுரையில், விவிலியத்தின் புதிய ஏற்பாட்டில் காணப்பெறும் கோட்பாட்டு பகுதிக்கு எதிராகத் தம்முடைய கருத்துக்களை அவர் தெரிவித்தார். அப்பகுதியில் பிடிவாதக் கருத்துரைகளும், தெய்விக அருள் நிகழ்ச்சிகளும், மறைமெய்ம்மைகளும் இடம் பெற்றுள்ளன. அவற்றின் மெய்ம்மையில் ராம்மோகன் ஐயுறவு கொண்டார். கிறித்தவ சமயத்தொண்டரான தவத்திரு டியோகர் ஸ்கிமிட் (Deocar Schmidt) என்பவர் ராம்மோகனை 'சமய நம்பிக்கையற்ற பாவி' என்றும், 'உண்மைக் கோட்பாட்டிற்கு ஊறு விளைவிப்போன்' என்றும் தாக்கினர். 'இயேசுவின் அறவுரைகளுக்குச் சார்பாகக் கிறித்துவப் பெருமக்களுக்கு வேண்டுகோள்' என்ற துண்டு வெளியீடு ஒன்றின்மூலம் ராம்மோகன், அப்பாதிரியாருக்குத் தக்க பதில் உரைத்தார். இதை எதிர்த்து "இந்தியாவின் நண்பன்" (The Friend of India) என்ற இதழில் டாக்டர் ஜொஷுவா மார்ஷ்மன் என்பவர் மறுப்பு எழுதினர். ராம்மோகன் 'கிறித்துவப் பெருமக்களுக்கு இரண்டாவது வேண்டுகோள்' என்ற துண்டு வெளியீட்டின் மூலம், அதற்கு மறுமொழி பகர்ந்தார். "புதிய ஏற்பாட்டில் காணப்பெறும் பல்வேறு வகைக் கருத்துக்களிலிருந்து, அறநெறிக் கருத்துக்களைத் தனியே பிரிப்பதனல், பலதிறப்பட்ட சமயங்களைப் பின்பற்றுகின்றவர்களும், பல நிலைகளில் புரிந்து கொள்ளக் கூடிய ஆற்றல் உடையவர்களும், விரும்பிப் படிப்பதன் மூலம் அவர்களுடைய உள்ளங்களைச் செம்மைப்படுத்தி உயர்த்தும் விரும்பத்தக்க பணியைச் செய்ய முடியும் என்று நான் நம்புகிறேன்.

விவிலியத்திலுள்ள வரலாற்றுக் கருத்துக்களும், பிற செய்திகளும் கட்டற்ற சிந்தனையாளர்களுடைய உள்ளத்தில் ஐயுறவை எழுப்ப லாம்; அல்லது கிறித்துவின் போதனைகளுக்கு மாறுபட்டதாகத் தோன்றலாம். சிறப்பாக அற்புத நிகழ்ச்சிகள் பற்றிய கதைகள் ஆசியாவின் பழங்குடி மக்களிடம் பல தலைமுறைகளாக வழங்கி வரும் சுவைமிக்க கற்பனைக் கதைகளைவிட கவர்ச்சியுடையனவாக இருக்கின்றன. அவற்றால், புதிய ஏற்பாட்டிலுள்ள சிறந்த போதனை களுக்கு மாசுண்டாகக்கூடாது என்ற நோக்கத்திலேயே நான் அவற்றை வேறுபடுத்திக் காட்டினேன். அறநெறிக் கொள்கைகள் மனித இனம் முழுவதிலும் அமைதியையும், ஒற்றுமையையும் நிலை நாட்டக் கூடியனவாக இருக்கின்றன. அவை கல்லார்க்கும் கற்றார்க் கும் எளிதில் புரியக்கூடியனவாக உள்ளன. அவற்றைப் புரிந்து கொள்ளுவதற்குப் புலன்கடந்த அறிவு தேவை இல்லை. இதில் சமயத்தைப்பற்றியும் ஒழுக்கத்தைப்பற்றியும் தெளிவுறுத்தும் கருத் துக்கள் அடங்கியுள்ளன. அவற்றில் கடவுளைப்பற்றி மனிதன் கொண்டிருக்கின்ற உயர்ந்ததும், முற்போக்குத் தன்மைவாய்ந்தது மான கடவுள் கொள்கை போற்றத்தக்க வகையில் அமைந் துள்ளது......மனித இனம் தங்களுக்காகச் செய்யும் கடமைகளையும், சமுதாயத்திற்காகச் செய்யும் கடமைகளையும் செம்மையாகச் செய் வதற்கு ஏற்ற வகையில் நெறிப்படுத்துவதற்கு மிகவும் பொருத்த மானவையாக அவை உள்ளன. எனவே, அவற்றை இந்த வடிவில் மக்கள் மன்றத்தில் உலவவிடுவதால் மிகச் சிறந்த பயன்களே உண்டாகுமென நான் நம்புகிறேன்.''

செராம்பூரிலிருந்து வெளிவந்த கிறித்துவ மிஷனரிப் பத்திரிகை வேதாந்தத்தையும், இந்துக்களின் ஒருமைக் கோட்பாட்டை (Unitarianism)யும் தொடர்ந்து தாக்கி வந்தது. இதனால் ராம் மோகன் அக்கருத்துக்களை எதிர்த்து 'பிரமானிகல் மேகசினின்' நான்காவது இதழில், 1823ஆம் ஆண்டு நவம்பர் திங்களில், பல கட்டுரைகள் எழுதவேண்டிய நெருக்கடி உண்டாயிற்று.

அந்த இதழின் முன்னுரையில் பின்வருமாறு அவர் எழுதினார்: "இவ்விதழின் மூன்றாவது பகுதியில் சமயக் கருத்துக்களை ஆராய் வோர் கடுமையான சொற்களைப் பயன்படுத்துவது பொருந்தாது என்பதை மிகவும் பணிவுடன் நான் விளக்கியிருந்தேன். ஆனால், வியப்பும் கவலையும் தரத்தக்க வகையில் மிஷனரியார் துண்டு வெளியீடு ஒன்றை வெளியிட்டுள்ளனர். அதை மிஷனரித் தொண்டர் ஒருவரே பலருக்கும் வழங்கியதை நான் கண்டேன். அதில் வேதங்களின் கொள்கைகளுக்கு எதிராக நாத்திகப் பிரசாரம் செய்யப்பட்டுள்ளமையும், அவற்றைக் கடைப்பிடிக்கின்ற நம்மைப் பற்றித் தகுதியற்ற வசைக் குறிப்புகள் தொடுக்கப்பட்டுள்ளமையும் மன வேதனையை உண்டாக்குகின்றன. இரண்டு ஆண்டு இடை

வெளிக்குப் பின்னர், மீண்டும் இவ்விதழை வெளியிடுமாறு அக் கொடுஞ்செயல் என்னைத் தூண்டியது எனலாம்.''

''இந்து சமயத்தின் அடிப்படைக் கொள்கைகளுள், 'அனைத்தையும் பொறுத்துக் கொள்ளுதல்' என்பது முதன்மையானதாகும். அந்த மிதமானதும் முற்போக்குத் தன்மை வாய்ந்ததுமான கொள்கையுணர்வில் ஊறிப்போன நான், எத்தகைய சமய அமைப்பினையும் எதிர்க்க விரும்பவில்லை; சிறப்பாகக் கிறித்துவ சமயத்தை எதிர்க்க நான் சிறிதுகூட விரும்பவில்லை. அதைப் பின்பற்றுகின்றவர்களுடைய உள்ளத்து உணர்ச்சிகளிடத்து எனக்குள்ள மதிப்பு அச்சமயத்தின் குறைபாடுகளை வெளிப்படுத்திக் காட்டவொட்டாமல் என்னைக் கட்டுப்படுத்துகின்றது. கிறித்துவ எழுத்தாளர்கள் இந்து சமயத்தைப்பற்றி இழித்தும் பழித்தும் எழுதுகின்றனர். அவை என்னைக் கடுமையாகத் தாக்கி எழுதுமாறு தூண்டுகின்றன. ஆயினும், நான் அதைச் செய்யப் போவதில்லை. கிறித்துவ எழுத்தாளர்கள் நம்முடைய சமயங்களை ஒப்பிட்டு ஆராய்வதை இலக்கியப் பண்பிற்கும், நேர்மையாக உண்மையை நாடும் நோக்கிற்கும் பொருந்தக்கூடிய வகையில், மிதமான நாகரிக மொழியில் எழுத இசைவார்களானால், நான் சமய ஆராய்ச்சியில் அளவுகடந்த மகிழ்ச்சியுடன் ஈடுபடத் தயாராக இருக்கிறேன்''.

கடவுளின் மூவொருமைக் கோட்பாட்டைப் பற்றிய ராம் மோகனின் கருத்தினை நேர்மையான முறையில் எதிர்த்து வாதிட இயலாத டாக்டர் மார்ஷ்மன், மிகவும் இழிந்த முறையில் இந்து சமயத்தைத் தாக்கலானார். 'பொய்ம்மை' என்ற தந்தையிடமிருந்து இந்துசமயம் தோன்றியது என்று அவர் குறிப்பிட்டார். அதற்கு ''நாம் மிகவும் புனிதமான சமய சர்ச்சையில் ஈடுபட்டுள்ளோம்; ஒருவரையொருவர் இழிவாகத் தாக்கும் பணியில் ஈடுபடவில்லை என்பதை நினைவுபடுத்த விரும்புகின்றேன்'' என்று ராம்மோகன் மறுப்பு எழுதினார். இச்சமயத்தில் 'இந்தியா கெஸட்' என்ற இதழின் பதிப்பாசிரியர் கிறித்துவ மிஷனரியாருக்கும் ராம்மோகனுக்கும் இடையே நடைபெற்றுவரும் வழக்கெதிர் வழக்குகளைப் பற்றித் தம் இதழில் பின்வருமாறு எழுதினார்: ''இக்கருத்து மாறுபாட்டினால் உண்டான போராட்டம் ராம்மோகனிடத்துக் கூர்த்த மதியும், அளவையியல் அறிவுத் திறனும், ஒப்பற்ற அமைதியான மனநிலையோடு எதையும் வழக்கிடும் ஆற்றலும் அமைந்திருப்பதை மிகத் தெளிவாக உலகிற்கு எடுத்துக் காட்டுகிறது.''

இவ்வாறு சமயக்கொள்கை மாறுபாட்டு வழக்கு முழுவதிலும் ராம்மோகனருடைய உயர்ந்த பண்பாடு ஒளிர்வதை நாம் காணலாம். மிகுந்த அடக்க உணர்வோடு கூடிய பெருந்தன்மைப் பண்பிலிருந்து, சிறிதும் பிறழாது அவர் நடந்து கொண்டார். இதனால், எப்பொழுதும் திறந்த உள்ளத்தோடும் நேர்மையோடும்

தம் எதிரிகளிடத்தில் அவர் பழக முடிந்தது. வாதத்தில் ஈடுபட்ட பொழுது - சிறப்பாக அவருடைய எதிரிகள் அவரைத் தூற்றிய பொழுது - அவர் அதிர்ச்சியும் மனக்கொதிப்பும் அற்றவராகவே இருந்தார். இத்தகைய முறையில் பல ஆண்டுகளுக்கு வைதிக இந்துக்களையும் கிறித்துவ மிஷனரியாரையும் எதிர்த்து அவர் போராட நேரிட்டது. அவர் மொழிந்த ஒவ்வொரு சொல்லிலும், அவர் எழுதிய ஒவ்வோர் எழுத்திலும் பகுத்தறிவுப் பண்பும், அனைத்துலகப் பொதுமை யுணர்வும், அறநெறி வேட்கையும் பொதிந்துகிடந்தன.

ராம்மோகனிடத்துக் காணப்பெற்ற மற்றொரு சிறப்புமிக்க பண்பு நேர்மையாகும். ஒருமுறை அவர் கிறித்துவ மிஷனரியாரோடு கலந்துரையாடிக் கொண்டிருந்தார். அப்பொழுது விவிலியத்தை மூலப் பதிப்பில் படிக்காது மொழிபெயர்ப்புகளைப் படித்துவிட்டு அவர் வாதிடுவதாகக் குறை கூறப்பெற்றது. அக் குற்றச்சாட்டை அவர் ஏற்றுக்கொண்டார். இரண்டு ஆண்டுகளுக்கு மிஷனரி யாரிடம் எத்தகைய வாதத்திலும் ஈடுபடாமல், அவர் கிரேக்க, இலத்தீன் மொழிகளைக் கற்றுத் தேர்ந்தார். அவற்றுடன் எபிரேய மொழியையும் ஆர்வத்தோடு அவர் கற்றார். இதனால் இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னரே இந்தப் 'பிரமானிகல் மேகசினை வெளி யிடுமாறு என்னைத் தூண்டியது' என்று அவர் குறிப்பிட்டுள்ளார். இக் குறிப்பிலிருந்து, அவர் இரண்டு ஆண்டுகள் அமைதியாக இருந்தமைக்குரிய காரணத்தை நாம் புரிந்துகொள்ளலாம். ராம் மோகன் தொடங்கிய மறுமலர்ச்சி இயக்கத்தினால் உருவாக்கப் பட்டவர் இரஹல்தாஸ் ஹல்தார் என்பவராவர். அவர் 'இந்தியன் டயரி' என்ற பத்திரிகையில் 1852ஆம் ஆண்டு, ஜூலை பத்தொன்ப தாம் நாள் பின்வருமாறு எழுதினார் : 'இன்று நான் ஒரு யூதரைச் சந்தித்தேன். அவருடைய தாய்மாமன் சிறந்ததோர் எபிரேய மொழிப் புலவராம். விவிலியத்தை மூல முதல்மொழியில் தாமே படிப்பதற்காக, ராம்மோகன் அவரிடம் எபிரேய மொழியைக் கற்று வருவதாக அந்த மனிதர் குறிப்பிட்டார்'.

பிரமானிகல் மேகசினுடைய நான்காவது இதழில் சிவபிரசாத் சர்மா என்ற புனைபெயரில், ஒரு கட்டுரையை ராம்மோகன் எழுதி இருந்தார். அக்கட்டுரை 1823ஆம் ஆண்டு, நவம்பர் பதினைந்தாம் நாள் வெளியிடப்பெற்றது. அக்கட்டுரை, 'கிறித்துவ சமயக் கோட் பாடுகளை இந்து சமயத்தைச் சேர்ந்தவர்கள் மறுப்பதற்குரிய காரணங்கள்' என்ற தலைப்பில் எழுதப்பெற்றதாகும். அக்கட்டுரை யில் கிறித்துவர்களால், தங்கள் சமயத்தின் முதன்மையான கோட் பாடுகள் என்று கருதப்பெற்ற மூவொருமைக் கோட்பாட்டையும் கிறித்துவின் கழுவாய் வழங்கும் முறையையும் அவர் நன்கு ஆராய்ந்து அதிலுள்ள குற்றங்களைச் சுட்டிக் காட்டினார். அவருக்குப்

பழகிப் போன அளவையியல் பகுப்பாய்வு முறையும், அவருடைய பகுத்தறிவுப் பண்பும் அவ்விரு கோட்பாடுகளை அறிவுக்குப் பொருந்தாதவை என்பதை உலகிற்கு உணர்த்த உறுதுணையாக இருந்தன.

மிஷனரியைச் சேர்ந்த பாதிரிமார்கள் தொடர்ந்து வேதாந்தக் கோட்பாடுகளை மட்டமான முறையில் தாக்கி வந்தனர். அவர்களுடைய தாக்குதல்களுக்கு எதிராக வேதாந்த தத்துவத்தின் உண்மை இயல்புகளை அவர் நிலைநாட்ட அரும்பாடுபட்டார். அத்துடன் கிறித்துவ சமய தத்துவத்தில் காணப்பெறும் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி அவற்றிற்குப் பொருத்தமான விளக்கத்தைத் தருமாறு அவர் வேண்டினார். **'அமைதிக்கும் இன்பத்திற்கும் வழி காட்டும் இயேசுநாதரின் அறவுரைகள்'** என்ற நூலின் முன்னுரையில் அவர் கீழ்க்காணுமாறு எழுதினார்: "இக் காரணங்களினால் அக் கருத்துக்களைப் பற்றிய ஆராய்ச்சியில் நான் ஈடுபடுவதை நிறுத்திக்கொள்ளுகின்றேன். தற்சமயம் என்னுடன் படைக்கப் பட்ட உயிர்களின் முன்னால் இயேசு பெருமானின் கருத்துரைகளை வைப்பதோடு என்னுடைய பணியை நிறுத்திக் கொள்ளுகிறேன். அதற்காக ஆங்கிலத்திலிருந்து விவிலியத் திருமறையை சமஸ்கிருதத்திலும், வங்காள மொழியிலும் நான் மொழி பெயர்த்துத் தருகிறேன்".

எதிர்பாராததோர் இடத்திலிருந்து ராம்மோகனருக்கு இச் சமய சர்ச்சையில் ஆதரவு கிடைத்தது. பாப்டிஸ்ட் மிஷனரி (Baptist Missionary) சங்கத்தைச் சேர்ந்த திருத்தொண்டரான தவத்திரு வில்லியம் ஆதாம் என்பார், மூவொருமைக் கோட்பாட்டிற்கு எதிராக ராம்மோகன் தெரிவித்த 'தெய்வவொருமைக்' (Unitarianism) கோட்பாடே சாலவும் சிறந்தது; பொருத்தமானது; போற்றத்தக்கது என்று பாராட்டினார். தம்முடைய தனியொருமைக் கிறித்துவக் கோட்பாட்டிற்கு எல்லா வகையிலும் பொருத்தமானது அவருடைய மறுப்புக்கள் என்பதை எடுத்துரைப்பதன் மூலம், ஆதாம் பாதிரியாரும் 'மூவொருமைக் கோட்பாட்டை' வெறுத்து ஒதுக்கினார். இச்செயல் கல்கத்தாவிலிருந்த ஐரோப்பிய சமூகத்தினரிடத்து சலசலப்பை உண்டாக்கியது. விரைவில் தவத்திரு ஆதாமிற்கு "வீழ்ச்சியுற்ற இரண்டாவது ஆதாம்" என்ற பட்டம் சூட்டப்பெற்றது. அவர்மீது ஐரோப்பியருக்கு வெறுப்புணர்ச்சி பொங்கி எழுந்தது. ஒரு சமயம் கல்கத்தாவிலிருந்த கிறித்துவ சமயத் தலைமைக்குரு, ஆதாமின் மீது 'நாத்திகர்' என்ற குற்றத்தைச் சாட்டி இந்தியாவிலிருந்து நாடு கடத்தவும் துணிந்தார். ஆனால், அவருடைய முயற்சி தோல்வியுற்றது. கிறித்துவ சமயத்தின் கட்டுத்திட்டங்களுக்கு அடங்கி நடக்காதவர்களை நாடு கடத்துவது பழைய வழக்கம். அத்தகைய தண்டனை கொடுக்கப்பட்ட பொற்காலம் மலையேறிவிட்டதை இங்கி

லாந்தின் அட்டர்னி ஜெனரல் கல்கத்தாவின் தலைமைக் குருவிற்குத் தெரிவித்தார்.

கிறித்துவ சமய இறையியல் கோட்பாடுகளை மறுத்துரைத்து, இயேசு கிறித்துவின் அறவுரைகளும் போதனைகளும் சிறந்தவை என்பதை நிலைநாட்ட செராம்பூர் மிஷனரியாரால் ' இந்தியாவின் நண்பன் ' (The Friend of India) என்ற பத்திரிகை நடத்தப் பட்டுவந்தது. அதனுடைய இருபதாம் இதழில் ஒரு கட்டுரை வெளிவந்தது. அதை ' ஒரு கிறித்துவ மிஷனரியார் ' எழுதியதாக அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. ராம்மோகனைத் தாக்கும் வகையில் அக்கட்டுரை அமைந்திருந்தது. கிறித்துவ சமயத்தினருக்கு இருக்கலாகாத கொடிய பகைமையுணர்ச்சி அதில் பொங்கி வழிந்தது. தேவையற்ற வெறுப்பும், பகைமையும் கொண்டு எழுதப் பெற்ற அக்கட்டுரைக்கு, பதில் விடுக்க ராம்மோகன் முன்வந்தார். அமைதியாகவும் அருளுணர்வோடும் அழகியதொரு சிறு புத்தகத்தை அவர் வெளியிட்டார். அது ' இயேசுபெருமானின் அறவுரைகள் ' என்ற நூலிற்கு ஆதரவாகக் கிறித்துவசமயப் பெருமக்களுக்கு விடப்பட்ட வேண்டுகோளாகும். தெளிவான சிந்தனையும், பகுப்பாய்வு முறைத்தீர்ப்பும், பெருந்தன்மையான அடக்கமும் கொண்ட தலைசிறந்த புத்தகமாக அது சிறப்புற்று விளங்குகிறது.

" ' இந்தியாவின் நண்பன் ' என்ற ஏட்டின் இருபதாம் இதழைக் கூர்ந்து நான் படித்தேன். அதில் காணப்பெற்ற குறிப்புக்கள் சில எனக்கு ஒரே சமயத்தில் ஏமாற்றத்தையும் வியப்பையும் அளித்தன. அண்மையில் பதிப்பிக்கப்பெற்ற ' இயேசு பெருமானின் அறவுரைகள் ' என்ற என்னுடைய நூலைப்பற்றி, ' ஒரு கிறித்துவ மிஷனரியார் ' என்ற புனைபெயரில், ஒரு பண்பாளர் அவ்வாறு பண்பற்ற வகையில் எழுதி இருந்தார். அத்துடன் அவ்வேட்டின் பதிப்பாசிரியரும் அதே போக்கில் அந்நூலைப் பற்றித் தம் கருத்துக்களை எழுதியுள்ளார் " என்று ராம்மோகன் தம் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், "அவர்கள் தெரிவித்துள்ள மறுப்புரைகளின் உண்மையை ஆராய்ந்து வெளியிடுவதற்கு முன்னர், நான் பொது மக்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்புகின்றேன். நூலாசிரியரை நாகரிகமற்ற முறையில்—கிறித்துவ சமயத்தினருக்கு ஒவ்வாத வகையில் அவ்வேட்டின் பதிப்பாசிரியர் தாக்கியுள்ளார். கருத்துக்களைத் தாக்காது, கருத்துக்களை வெளியிட்ட மனிதனைத் தாக்குவது நாகரிகமற்ற செயல். அந்நூலாசிரியனைப் ' புறச்சமயப் பேய் ' என்று இழித்துரைப்பது வருந்தத் தக்கதாகும். இதைப் பொது மக்கள் அருள்கூர்ந்து சிந்தித்துப் பார்க்க வேண்டுகின்றேன். கிறித்துவ சமயத்திற்கு இன்றியமையாத உண்மை, அன்புக்கனிவு, பரந்த உள்ளம் என்ற பண்புகளுக்குப் புறம்பாக அப்பதிப்பாசிரியர்

எழுதி இருக்கின்றார். அப்பண்புகள் ஒவ்வொன்றும் கிறித்துவ சமயத்தின் அடிப்படைக் கொள்கைகளாகும். இவ்வாறு நான் கூறுவதற்குரிய காரணம் வாசகர்களுக்கு எளிதில் புரியுமென நான் நம்புகிறேன். உண்மையான கிறித்தவன், மற்ற மனிதர்களைப் "புறச்சமயப் பேய்கள்" என்று தூற்றுவதற்குத் தயங்குவான்...... விவிலியத்தின் புதிய ஏற்பாட்டில் காணப்பெறும் அறநெறிக் கொள்கைகளைத் தேர்ந்தெடுத்துத் தொகுத்து, 'அமைதிமிகு இன்ப வாழ்க்கைக்கு வழிகாட்டி' என்ற நூலை உலகிற்கு அளித்த ஆசிரியரைப் "புறச்சமயப் பேய்" என்று பழிப்பது பொருந்துமா? அவ்வேட்டின் பதிப்பாசிரியருக்கோ கட்டுரையாசிரியருக்கோ இது அறமாகுமா? 'இயேசுபெருமானின் அறவுரைகள்' என்ற நூல், சமயம் அறநெறி ஆகியவற்றின் சிறந்த உண்மைகளைக் கொண்டதாகும். அவ்வுண்மைகளை உரைத்தவர் இப்பேரண்டத்தினைப் படைத்துக் காக்கும் இறைவன் என்று அந்நூலாசிரியன் கருதுகிறான். மனித இனத்தின் ஒழுகலாற்றிற்குத் தேவையான நெறிமுறைகளைப் போதிக்கும் அறவுரைகளாகவே அவற்றைத் தொகுத்த ஆசிரியன் கருதுகிறான். அத்தகைய ஒருவனைப் 'புறச்சமயப் பேய்' என்று பழிப்பது பொருந்துமா? இதை வாசகர்கள் அருள்கூர்ந்து சிந்தித்துப் பார்க்குமாறு வேண்டுகின்றேன்."

புதிய ஏற்பாட்டில் காணப்பெறும் கிறித்துவின் அறநெறிக் கொள்கைகளைச் சமயக்கோட்பாடுகளிலிருந்து ராம்மோகன் தனியே பிரித்தெடுத்தார். மேலும், அவர் விவிலியத்தில் உள்ள வழிபாட்டு முறைகளைப் புறக்கணித்து அறநெறிக்கொள்கைகளை மட்டும் ஒரு நூலாகத் தொகுத்தார். இச்செயல், கிறித்துவ மிஷனரியாருக்கு மாபெரும் 'பாவச்' செயலாகத் தோன்றியது. கிறித்துவின் போதனைகள் மட்டுமே மனித இனம் முழுமைக்கும் வழங்கப்பெற்ற நற்செய்திகள் என்பது ராம்மோகனுடைய நம்பிக்கை. அதை அவர் அழுத்தந் திருத்தமாக எடுத்துரைத்தார். ஆனால், கிறித்துவின் சிறப்புமிக்க அறவுரைகளை ஏற்றுக்கொள்ளுவதற்கு அச்சமயக் கொள்கைகளும் வழிபாட்டுமுறைகளும் இடையூறாக இருந்து வருகின்றன என்று அவர் அறிவித்தார். இச்செயல் கிறித்துவ மிஷனரியாருக்கு ஆத்திரத்தை உண்டாக்கியது. இம்முயற்சிக்காக "உண்மையினை மறைத்து தீங்கு செய்கின்றவர்" என்ற அவதூறான பட்டத்தை மிஷனரியார் அவருக்குக் கொடுத்தனர்.

இவ்வேண்டுகோளை, ராம்மோகன் என்றும் நாம் மறக்க இயலாத இனிய சொற்களைக் கொண்டு பின்வருமாறு முடித்தார்: "மனிதர்களுக்கு இடையே உள்ள வேற்றுமைகளையும் வெறுப்பையும் அழிக்கும் ஆற்றல் உடையதாகச் சமயத்தை நமக்குக் கடவுள் அளிக்கட்டும். அது மனித இனத்தின் அமைதிக்கும் ஒருமைப்பாட்டிற்கும் இயைந்ததாக இருக்குமாறு செய்க!" என்பது அவ

ருடைய விழைவும் விருப்பமுமாகும். 'அனைத்துலக சமயத்தின்' கருமுதல் தொடக்கத்தை நாம் முதன்முதலாக இங்குத் தெளிவாகக் காணுகிறோம். ராம்மோகன் கழுவாய் வழங்கல், மூவொருமைக் கோட்பாடு போன்றவற்றை நுட்பமாக ஆராய்ந்து, விளக்கியுள்ளார். கிறித்துவசமய இறையியலில் அவருக்கு இருந்த ஆழ்ந்த அறிவை இச்செயல் புலப்படுத்துகின்றது. இந்த அறிவினைத் தமக்கு நல்லதொரு கருவியாகக் கொண்டே, குறுகிய மனப்பான்மையோடு கிறித்துவப் பாதிரிமார்கள் வேதாந்தத்திற்கும் இந்துசமயத்திற்கும் எதிராகத் தாக்கியபொழுது அவர் எதிர்த்துப் போராடினார்.

இந்தியாவிலிருந்த கிறித்துவ மிஷனரிமார்கள் ராம்மோகனைக் காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கி வந்தனர். எனினும், அவருடைய நூல்களையும், துண்டு வெளியீடுகளையும் ஐரோப்பாவும் அமெரிக்காவும் மிகவும் மகிழ்ச்சியோடு வரவேற்றுப் போற்றின. வேதாந்தத்தைப்பற்றி அவர் எழுதிய ஆங்கில நூல் 1816ஆம் ஆண்டில் வெளிவந்தது. இங்கிலாந்திலிருந்து வெளிவந்த இதழ்களும், ஐரோப்பாவின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வெளிவந்த இதழ்களும் அதைச் சிறந்ததொரு முயற்சி என்று போற்றிப் பாராட்டின. அவற்றுள் '**இறையியலும் பொது இலக்கியமும் பற்றிய களஞ்சியம்**' (The Monthly Repository of Theology and General Literature) என்ற திங்களிதழான ஆராய்ச்சி ஏடு, ராம்மோகனின் வேதாந்தத்தைப் பற்றிய ஆராய்ச்சி நூலிற்கு மிக விரிவானதொரு மதிப்புரையை மற்றவற்றிற்கு இடையில் எழுதியது: "பிராமணரான ராம் மோகன்ராய் ஓர் இந்து. அவர் அருள்வெளிக்கோட்பாட்டை ஏற்காத இறையுண்மைக் கோட்பாட்டாளர். கல்கத்தாவில் இவ்வாண்டு சிறியதொரு நூலினை அவர் வெளியிட்டுள்ளார். அதன் பெயர் 'வேதாந்த தத்துவத்தின் சுருக்கம்' என்பதாகும். அதில் சிறப்புமிக்க வேதங்களின் குறிப்பிடத்தக்க பகுதிகள் அனைத்தும் ஒன்றாகத் தொகுக்கப்பெற்றுள்ளன. அவை அனைத்தும் கருத்தாழமிக்க அறிவுச்சுடர்களாகும். அவற்றில் இயற்கைச் சமயத்தின் கொள்கைகள் மிகவும் பெருந்தன்மையோடு எடுத்துரைக்கப் பெற்றுள்ளன; சிறு தெய்வங்களுக்குச் செய்யப்படுகின்ற எல்லாவகையான வழிபாடுகளையும், சடங்குகளையும், விழாக்களையும், உணவு வேற்றுமைகளையும் அந்நூல் குறைபாடுமிக்க சமயத்தின் கருவிகள் என்று கூறுகிறது. இறைவனைப் பற்றிய மெய்யுணர்வும், இறைவனிடத்தில் உண்மையான பக்தியும் கொண்டவர்கள், அவற்றைத் தேவையற்றவை என்று புறக்கணித்துள்ளனர்."

பிளாய்சின் (Blois) தலைமைக் குருவாக அபே கிரிகோரி (Abbe Gregorie) என்பவர் சிறப்புற்று விளங்கினார். அவர் பிரஞ்சு மொழியில் சிறிய நூல் ஒன்றை வெளியிட்டார். அதில் ராம்மோகனைப்

பற்றிச் சுவையான குறிப்புக்கள் காணப்பெறுகின்றன. "ஆறு மாதத்திற்கு ஒருமுறை வங்காள மொழியிலும், ஆங்கிலத்திலும் தம்முடைய இறையியல் கொள்கையை விளக்கியுரைக்கும் சிறு நூல் ஒன்றை அவர் வெளியிட்டு வருகிறார்......கருத்து மாறுபாட்டால் பிறர் தாக்கி எழுதுவதையெல்லாம் தமக்கு இன்பம் அளிப்பதாகக் கருதுகிறார். அறிவிலோ, தத்துவ ஞானத்திலோ அவர் குறைபாடு உடையவர் அல்லர். எனினும், அவருடைய பொதுவான கருத்துக் களைக் காட்டிலும் அளவையியல் அடிப்படையில் சிந்திக்கும் முறை களில் அவர் தனிச் சிறப்புடையவராகத் தோன்றுகிறார்.....அதைப் போன்றே இந்துக்களின் அறிவுநலமிக்க தத்துவக் கோட்பாடு களுக்கு இணையான கருத்துக்களை ஐரோப்பியருடைய நூல்கள் ஒன்றிலும் காணமுடியவில்லை என்று அவர் அறுதியிட்டு உறுதி யாகக் கூறுகிறார்."

லண்டன் மாநகரில் இருந்த டாக்டர் ரீஸ் (Rees) என்பவருக்குக் கல்கத்தாவிலிருந்து ராம்மோகன் 1824ஆம் ஆண்டு, ஜூன் மாதம் நான்காம் நாள் ஒரு கடிதம் எழுதியுள்ளார் :

" தவத்திரு ஐயா,

கடந்த ஜூன் பதினாறும் நாளிட்ட தங்கள் கடிதம் கிடைத்தது. அத்துடன் ஒரு புத்தகக்கட்டும் என் பெயருக்கு வந்தது. அவற்றை மகிழ்ச்சியுடனும் மனநிறைவுடனும் தாங்கள் அனுப்பி யுள்ளதைக் கண்டேன். நான் தொகுத்த 'இயேசு பெருமானின் அறவுரைகள்' என்ற நூலையும், அதற்கு ஆதரவாக என்னால் எழுதப் பெற்ற துண்டு வெளியீடுகளையும் மறு பதிப்பாக வெளியிட்டதன் மூலம், தங்கள் குழுவினர் என்னையும் ஒரு பொருட்டாக மதித்துப் பாராட்டியுள்ளமைக்கு நான் பெருமைப்படுகிறேன்.

தங்கள் பாராட்டுதலைச் சிறப்புமிக்க செயலின்மூலம் எனக்குத் தெரிவித்துக்கொண்ட அக்குழுவின் உறுப்பினர்களுக்கு, என்னுடைய உளங்கனிந்த நன்றியினைத் தெரிவிக்குமாறு மிகவும் பணிவுடன் தங்களை வேண்டுகின்றேன்.... கிறித்துபெருமானின் அறவுரைகள் எளிமையும் தூய்மையும் உடையன ; தெளிவுமிக்கவை ; நடைமுறை வாழ்க்கைக்குப் பொருந்திவருவன. பிற்கால ரோமானிய ஆதிக் கத்தின் கீழ், அறிவிற்குப் பொருந்தாத கருத்துக்களும் புறச்சமயக் கோட்பாடுகளும் அவற்றில் புகுத்தப்பெற்றன. அதனால், அவ ருடைய உண்மையான அறவுரைகளைக் கண்டறிய முடியாமல் போயிற்று. நான், இப்பொழுது அவருடைய அறவுரைகளை மட்டும் ஆராய்ந்தறிந்து அவற்றை உலகிற்கு உணர்த்த முயலும் அரும்பணி யில் ஈடுபட்டுள்ளேன். இப்பணியில் இங்கிலாந்திலும் அமெரிக்கா விலும் உள்ள நண்பர்கள் பலர் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் உண் மையை நாடும் வேட்கை யுடையவர்களாக உள்ளனர். இவற்றை அறிந்து நான் பெருமகிழ்ச்சி யடைகிறேன். அம்மகிழ்ச்சியை எடுத்

துரைக்க எனக்குச் சொற்களே கிடைக்கவில்லை. அத்தகைய பெரிய மனிதர்கள் அடையும் வெற்றி, சமய உலகில் சீர்திருத்தத்திற்கு அடிகோலிய மார்ட்டின் லூதரும் மற்றவர்களும் அடைந்த மாபெரும் வெற்றியோடு (அதைக் காட்டிலும் சிறப்புடையதாக இல்லையென்றாலும்) ஒப்புமையுடையதாக அமையவேண்டுமென்று நான், உண்மையில் இறைவனை வேண்டி வழிபடுகின்றேன். அச்சமயச் சீர்திருத்தக்காரர்களே, முதன் முதலில் முறைப் படுத்தப்பெற்ற சமயக்கோட்பாடுகளிலிருந்து தெய்வீக ஆணையை வேறுபடுத்தி அறிவதற்கு வழிகாட்டியுள்ளனர். அறிவிற்குப் பொருந்தாத வகையில் வெளிவேடமாகச் செய்யப்பெறும் சடங்கு களிலிருந்து வேறுபட்ட அறச்செயல் விருப்பத்தைக் கடைப்பிடிப்ப தற்குரிய நெறி முறைகளையும் அவர்களே முதன்முதல் வகுத்துத் தந்தவராவர். அவ்வழியில் செல்லும் என்னைப் போற்றிப் பாராட் டும் இப்பெருமக்கள், தங்கள் முயற்சியில் பெருவெற்றி அடைய வேண்டுமென இறைவனிடம் முறையிடுகின்றேன்.''

கிறித்துவ சமயத்தைப் பற்றியும், வேதாந்தத்தைப் பற்றியும் ராம்மோகன் ஆராய்ச்சி நூல்களை வெளியிட்டார். அவை அமெரிக்க ரால் பெரிதும் வரவேற்கப் பெற்றன. சிறப்பாகத் தோரோ (Thoreau) என்ற சான்றோராலும் கடந்தநிலை தத்துவ அறிஞர் களாலும் (Transcendentalists) ஆர்வத்தோடு அவை போற்றப் பெற்றன. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் 'இராயின் கொள்கைக் குழு' செழித்தோங்கத் தொடங்கியது. 1894இல் 'திறந்த மன்றம்' (Open Court) என்ற இதழில் மான்கியூர் டேனியல் கான்வே (Moncure Daniel Conway) என்பவர், ''பிரிட்டனிலும், மற்ற வெளிநாடுகளிலும் 'ஒருமைக் கோட்பாட்டு' சங்கத்தை அமைப்ப தற்குரிய அடிப்படையை உண்மையில் அமைத்துத் தந்தவர் ராம் மோகனரே யாவார். அந்த இந்து ஆசாரியரின் பற்றாளர்கள் பல்வேறிடங்களில் இறைமைக் கோட்பாட்டு இயக்கங்களைத் தொடங்கியுள்ளனர். அவற்றுள் மதராசில் திரு. பாக்ஸ் (Fox) என்பவர் தொடங்கிய மன்றம் சிறப்புமிக்கதாகும். 1820ஆம் ஆண்டு, செப்டம்பர் மாதத்தில் 'பாராளுமன்ற சங்கம்' (Parliament Court), சென்னையில் பணிபுரியும் இந்திய ஒருமைக் கோட்பாட்டினருக்கு ஐந்து கினி (சற்றேறக் குறைய ரூ. 150)யை அனுப்பி வைத்தது. 1824இல் கல்கத்தாவில் ஆங்கிலேய இந்தியரின் ஒருமைக்கோட்பாட்டுத் தொழுகை மன்றத்தைக் கட்டு வதற்கு 24 பவுன்களை (ரூ. 360) அச்சங்கம் உதவியது. இவ்வுண்மை களும், ராம்மோகன்ராய் மொழிபெயர்த்து அளித்த இந்து சமயப் பாசுரங்களும், ஒருமைக்கோட்பாட்டு நெறியைக் காட்டிலும் உலகில் விரிந்த ஒற்றுமையைக் காண திரு. பாக்சை விழித்தெழுமாறு செய்தன. அந்த இந்து, உண்மையிலேயே சிறந்ததொரு சிந்தனை

யாளர் ஆவார். அவருக்கு இணையாகக் கிறித்துவ உலகில் ஒருவரு மிலர். முதன் முதலாக அவரிடமே கீழ்நாடுகளின் சிந்தனை மேனாட்டுச் சிந்தனையோடு மோதத் தொடங்கியது. அது இன்று வரை நல்ல பயனை அளித்து வந்திருக்கிறது. 1831 ஆம் ஆண்டு, மே 25ஆம் நாள் 'தெற்குத் தொழுகை மன்றத்தில்' (South Palace Chapel) அச்சங்கத்தின் ஆறுவது ஆண்டு நிறைவு விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. குறித்த காலத்தில் ராம் மோகன் அவ்விழாவில் கலந்துகொண்டார். அவ்விழாவிற்குப் பிரான்சு, டிரான்சில்வேனியா போன்ற நாடுகளிலிருந்து ஒருமைக் கோட்பாட்டு இயக்கப் பிரதிநிதிகள் வந்திருந்தனர். அவர்களோடு ஹார்வார்டு பல்கலைக் கழகத்தின் தலைவரான டாக்டர் கிர்க்லண்டும் (Dr. Kirkland) வந்திருந்தார். ராம்மோகன் சுருக்கமாக, ஆனால், பிறருடைய கருத்தைக் கவரும் வகையில் பேசினார். அவருடைய கவர்ச்சிமிகு ஆளுமை வந்திருந்தோர்க்குப் பேரார்வத்தை ஊட்டியது'' என்று எழுதியுள்ளார்.

கிறித்துவ சமயத்தின் சடங்கு நெறிகளைக் குறை கூறியதைப் போன்ற முறையிலேயே, ராம்மோகன் இந்துக்களின் சமயக் கொள்கைகளை மூடிமறைத்திருந்த கோட்பாடுகளையும் வழிபாட்டு முறைகளையும் சாடினார். கிறித்துவ சமயத் தொண்டர்கள் இந்து சமயத்தையும் வேதாந்தத்தையும் தாக்குவதை எதிர்த்துத் தற்காப் புடன் இந்து சமயச் சடங்குகளும் கொள்கைகளும் சிறந்தவை என்று போராடியவர்களுள் ராம்மோகன் ஒருவரன்று. இத்தகைய ஒருதலைச் சார்பான குறை அவரிடம் என்றுமே இருந்ததில்லை. இது உண்மை நாடுவோரிடம் இருக்கலாகாத குறை என்பதை அவர் நன்கு அறிவார். ஆனால், சமயப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்குச் சமயம், கட்சி ஆகியவற்றின் சார்புடையவர்கள் இக்குறுகிய ஒருதலைச் சார்பான முறையிலேயே பிரச்சினைகளை அணுகினர். இந்துக்களின் மிகச் சிறந்த சமயச் சிந்தனைகளுக்கு முரண்பட்ட கோட்பாடுகளையும், வழிபாட்டு முறைகளையும் அவர் மிக வன்மையாகக் குற்றஞ்சாட்டிக் கண்டித்து வந்தார். ஆனால், அவருக்கேயுரிய சிறப்புமிக்க பணிவோடும் கண்ணியத்தோடும் அவற்றைத் தாக்கினார். எனினும், என்றும் சமய வெறியோடு அவற்றைத் தவறற்றவை என்று அவர் தற்காப்புணர்ச்சியோடு போற்றி ஆதரிக்கவில்லை.

அனைத்துலக சமயத்தை நாடுவோராக ராம்மோகன் விளங் கினார். இந்து சமயம், இஸ்லாம், பௌத்தம், கிறித்துவம் ஆகியவை உலகத்தின் நான்கு பெரிய சமயங்களாகும். இந்நான்கு வகைச் சமயங்களையும் முதன்முதல் ஒப்பிட்டு ஆராய்ந்தவர் நம் ராம் மோகன் ராயாவார். அவற்றின் அடிப்படையில் இழையோடிச் செல்லும் ஒற்றுமைப் பண்புகளைக் கண்டறிவதில் அவர் பேரீடுபாடு

கொண்டிருந்தார். உலகச் சமயங்களைச் சமரசப் பண்போடு அணுகாது, தொகுப்புமுறை ஆராய்ச்சி நோக்கோடு அவர் அணுகினர். சமயங்களின் ஒப்பியல் ஆராய்ச்சி முறைக்கு அவர் முன்னேடியாக விளங்கினர் என்று பேராசிரியர் மோனியர் வில்லியம்ஸ் குறிப்பிட்டுள்ளார். கிழக்கிற்கும் மேற்கிற்கும் இடையே தொகுத்துக் காணும் முறையை முதன்முதல் செயல்படுத்தியவர் ராம்மோகன் என்று மாக்ஸ்முல்லர் கருதுகிறார். இச்சமயங்களுக்கு இடையே அனைத்துலக இசைவினை உண்டாக்குவதற்குச் சமயங்களில் சீர்திருத்தங்கள் பல செய்யவேண்டும் என்பதை அவர் நன்குணர்ந்திருந்தார். ராம்மோகன் ராயின் சிந்தனைகள், செயல்முறைகள் முதலியவற்றுள் சிறப்புற்று விளங்கும் இவ்வியல்பைப்பற்றி டாக்டர் பிரஜேந்திரநாத சீல் தம்முடைய விரிவுரையில் குறிப்பிட்டுள்ளார். ராம்மோகன் எவ்வாறு "முன்னேடியாகவும், உண்மை நிலையில் புதிய இந்தியாவின் தந்தையாகவும்" விளங்குகிறார் என்பதை அவர் தெளிவுறுத்தியுள்ளார்.

ராம்மோகனருடைய நண்பராகவும், உடன் பணிபுரிந்தவருமாகவும் கல்கத்தாவில் விளங்கியவர் தவத்திரு. வில்லியம் ஆதாம் என்பவராவார். ராயைப்பற்றி அப்பெரியார் தெரிவித்துள்ள பாராட்டுரைகள் இங்குக் குறிப்பிடத் தக்கன. "அவர் உரிமையோடு இருப்பார்; அல்லது உரிமையே அற்றவராக இருப்பார். அவர் உரிமைமிக்க சூழ்நிலையில் வாழ விரும்பினர். அதற்கேற்ற சூழ்நிலை இல்லாதபொழுது அவர் அத்தகையதொரு சூழ்நிலையைப் படைத்துக் கொண்டார். 'என் மனமே என்னுடைய இராச்சியம்' என்று பழைய ஆங்கிலக் கவிஞன் ஒருவன் கூறியதை அவர் முற்றிலும் உணர்ந்திருந்தார். இவ்வுரிமைமிக்க இராச்சியத்தில் இருந்து கொண்டு முறைகேடான ஆன்மிக, சமூக, அரசியல் கொடுமைகளுக்கு எதிராக ஓயாது, சோர்வு அடையாது அவர் தாக்குதல்கள் நடத்தி வந்தார். சூழ்நிலைகளின் உந்துதலால் அத்தாக்குதல்களின் முழுவடிவமாக அவர் விளங்கினர். அவற்றைச் சுட்டிக் காட்டும் நடிகராகவோ, அவற்றல் உண்டாகும் விளைவுகளை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ளும் அறவோராகவோ அவர் விளங்கினர். அவற்றின் மத குருவாகவோ, அக்கொடுமைகளுக்குப் பலியிடப்பெறும் பலிப் பொருளாகவோ அவர் வாழ நேர்ந்தது. மிகவும் நேர்மையாகச் சொல்லுவதென்றல்—அவருடைய பெருமதிப்பிற்குரிய நிலையில் பேசுவதென்றல்—ஆன்மிக, சமூக முறைகளால் உண்டான கொடுமைகள் அவரிடத்துப் புதுமையானதும், மனக்கசப்பை உண்டாக்கக் கூடியதும், பெருங்கேடு பயக்கத் தக்கதுமான வேறுபாட்டுப் பண்புகளையும், சிறப்புரிமைகளையும் அவருக்கு அளித்திருந்தன என்று நாம் கூறலாம். அவருடைய ஆன்மாவின் ஆற்றல் மிக்க உணர்ச்சியாக, விடுதலை வேட்கை கலந்து இருந்தது என்று

நாம் கூறலாம். ஆனால், அது வெறும் உடல் சார்பான விடுதலை வேட்கை அன்று. உள்ளத்திற்குத் தேவைப்படும் உரிமை வேட்கை யாகும் அது! அதாவது செயல்புரிவதற்கு மட்டும் தேவையான உரிமை வேட்கையன்று! சிந்தனைக்குத் தேவைப்படும் உரிமையையே அவர் நாடினார். தம்முடைய சொந்த சமயத்தைச் சேர்ந்த மக்களும் தம்முடைய சொந்த நாட்டின் பழக்கவழக்கங்களும், தம்முடைய குடும்பம், கால்வழி, தம்முடைய சொந்த நிலைமை ஆகியவற்றின் தளைகளைப் பெரிதும் இயல்பூக்கத்தினால் அவர் பிய்த்து எறிந்தார். மேலும், அவற்றைத் தம் கால்களினால் மிதித்து அழித்தார். அவரு டைய பாதையில் இடையூறுகள் உண்டாகுமானால், அவர் சிறிதும் கவலையுறாமல் அவற்றைத் தலைகீழாக மாற்றி அமைத்தார். அவரு டைய சிந்தனை உரிமையின்மீது, மறைமுகமாகவேனும் தாக்குதல் நடைபெற்றால், கட்டுப்படுத்த முடியாத ஆழ்ந்த மனவருத்தத் துடனும், மானக்கேட்டுடனும் அதை அவர் எதிர்க்கலானார் ..... தனியுரிமையில் அவர் கொண்டிருந்த இந்த அசைக்கமுடியாத பற்றுதலும், அவருடைய சிந்தனை உரிமையில் சிறிது பறிக்கப்படும் என்பதை உணர்ந்த அளவில் அவரிடத்து உண்டான உணர்ச்சி வயமான பொறுமை இயல்பும், பிறருடைய ஒத்த உரிமைகளை உணர்ந்து போற்றும் பண்பும் அவருடைய சிறப்புமிக்கப் பண்பு களாகும். அவர் சமயத்திலும், அரசியலிலும் தம்முடைய கருத் திற்குப் பெரிதும் வேறுபட்டவர்களையும் மதித்துப் போற்றினார். இயற்கைச் சட்டங்களையும், சமூக நியதிகளையும் தம்முடைய எதிர்ப் பற்ற தலைமையின் கீழ்ப் படிந்தொழுகுமாறு செய்த மக்களுடைய உரிமைகளையும் அவர் என்றும் மதித்துப் போற்றினார்.........இந்த உரிமை வேட்கை அந்த மனிதரின் தனிச் சிறப்புவாய்ந்த பண்பாக விளங்கியது.......இந்த உரிமை வேட்கை, நன்கு ஒழுங்குபடுத்தப் பெற்றதும், தன்னடக்கம் வாய்ந்ததுமாக அவரிடத்து இருந்தது. தனி மனிதனுக்கும் சமூகத்திற்கும் மிகச் சிறந்த பணிகள் பலவற்றை ஆற்றவல்லது 'தன்னுரிமை' என்பது அவருடைய அசைக்கமுடியாத அறிவுநலம் கனிந்த நம்பிக்கையாகும். அதிலிருந்தே அவருடைய உரிமை வேட்கை ஊற்றெடுத்தது. ஒரு குறிப்பிட்ட சமூகத்தினரோ, நிறத்தினரோ, இனத்தினரோ, தேசிய இனத்தவரோ, சமயத் தினரோ மட்டும் தன்னுரிமையுடையவர்களாக இன்புற்று வாழ வழிவகை செய்ய அவர் முயலவில்லை. அவருடைய பரிவுவுணர்ச்சி மனித இனம் முழுவதையும் தழுவியதாகும்". இவை ராம்மோகனை ரைப்பற்றி தவத்திரு. ஆதாம் அவர்கள் கொண்டிருந்த கருத்துக் களாகும்.

கல்விச் சீர்திருத்தம்

பல நூற்றுண்டுகளாக ஆழ்ந்த உறக்கத்தில் மெய்ம்மறந்து கிடக்கும் இந்திய தேசிய இனத்தை, விழிப்புறச் செய்வதற்குக் கல்விமுறையில் மாற்றம் செய்யப்பெற வேண்டும் என்பதை ராம்மோகன் மிக நன்ருக உணர்ந்திருந்தார். எனவே, அன்றைய இந்தியாவில் நிலவிய கல்விமுறையைப் புரட்சிகரமாக மாற்றியமைக்க வேண்டும் என்று அவர் கருதினர். "அனைத்துநாட்டுச் சட்ட ஒப்புரவுப் பண்புகளில் இந்தியா மீண்டும் தனக்கு உரிய இடத்தைப் பெறவேண்டும் என்ருல், அதற்குத் தேவையானது பகுத்தறிவுக்குகந்ததும், அறிவியல் நெறியில் அமைந்ததுமான கல்வி முறையேயாகும் என்பதை அவர் எடுத்தியம்பினர். சமஸ்கிருத மொழிக் கல்வி நெடுங்காலமாக இந்தியாவில் நிலவி வந்தது. கம்பெனியாரின் அரசு இந்துப் பண்டிதர்களைக் கொண்டு சமஸ்கிருதப் பள்ளிகளை அமைத்துப், பழைய கல்வி முறையை வளர்ப்பது என்று முடிவுசெய்தது. இதை, ராம்மோகன் மிக வன்மையாக எதிர்த்தார். இயற்கை அறிவியல், பௌதிகம், வேதியல், கணிதம் போன்ற பல புதிய அறிவியல் கலைகளைக் கற்பிக்கவேண்டும் என்று அவர் விரும்பினர். கவர்னர் ஜெனரலாகப் பணிபுரிந்த ஹாம் ஹெர்ஸ்ட் பிரபுவிற்கு, அவர் 1823ஆம் ஆண்டு, திசம்பர் 11ஆம் நாள் ஒரு கடிதம் எழுதினர். அக் கடிதத்தில் பின்வருமாறு அவர் குறிப்பிட்டிருந்தார் :

" இந்தியாவில் நெடுங்காலமாக வழக்கத்தில் இருந்துவருகின்ற கல்வி அறிவைப் பரப்புவதற்கு, இந்துப் பண்டிதர்களைக்கொண்டு சமஸ்கிருதப் பள்ளிகளை அரசினர் நிறுவி வருகின்றனர். இத்தகைய கல்விக்கூடம் (பேகன் பிரபுவின் காலத்திற்கு முன்பு ஐரோப்பாவில் இத்தகைய கல்விக் கூடங்கள் இருந்தன) இலக்கண நுட்பங்களையும், அப்பாலைத் தத்துவ வேறுபாடுகளையும் இளைஞர்களின் மனத்தில் பெருஞ்சுமையாக ஏற்றிவைக்குமே ஒழிய, சமுதாயத்திற்கு எவ்வகையிலும் அவை பயன்படா. அப்பள்ளிகளில் பயிலும் மாணவர் ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பு அறியப்பட்டவை எவையோ, அவற்றை அறிவதுடன், கற்பனைக் கோட்டையில் வாழ்ந்த மக்கள் சிலருடைய, பயனற்ற வெறும் சொற்சிலம்ப வாதங்களையும் தெரிந்து கொள்ளுவர். இத்தகைய கல்வி இந்தியாவின் பல்வேறு பகுதி

களிலும் நெடுங்காலமாகக் கற்பிக்கப்பட்டு வருகின்றது......உண்மை அறிவின் ஒளியைப் பெறவொட்டாமல், அறியாமை இருளில் மூழ்கிக் கிடக்குமாறு பிரிட்டிஷ் இனத்தைச் செய்யவேண்டும் என்பது நோக்கமாக இருந்து இருக்குமானால், பள்ளிப் பயிற்சி முறையைப் பேகனின் தத்துவ விளக்கத்தினால் மாற்றியமைத்திருக்க வேண்டியதில்லை. ஏனெனில், பழைய முறையே, அறியாமையை மிகச் சிறந்த முறையில் நிலைபேறுடையதாகச் செய்ய முடியும். இதே முறையில், இந்நாட்டு மக்களை அறியாமை இருளில் ஆழ்ந்துகிடக்கச் செய்வது பிரிட்டிஷ் சட்டமன்றத்தின் நோக்கமாக இருக்குமானால் சமஸ்கிருதக் கல்விமுறையே அதற்குப் போதியதாகும். ஆனால், பிரிட்டனின் குடி மக்களினுடைய கல்வித் தரத்தை உயர்த்தவேண்டும் என்பது அரசின் குறிக்கோளாக இருக்குமானால், அது உடன்டியாக மிகவும் முற்போக்கு இயல்பும், அறிவுநலமும் கனிந்த பயிற்சி முறையும் கொண்டதாக அமையவேண்டும். அம்முறையில் கணக்கியல், இயற்கைத் தத்துவம், வேதியல், உடற்கூற்று இயல் முதலியவற்றோடு, மற்றும் பயன்தரும் அறிவியல் கலைகளைப் பயிற்றுவிப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். இவற்றை நடைமுறையில் சாதிப்பதற்கு இப்பொழுது வகுத்துள்ள திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள நிதி வசதி போதியதாகும். ஐரோப்பாவில் கல்வி பயின்றவர்களுள் நுண்மாண் நுழைபுலமும், பரந்துபட்ட கல்வியறிவும் உடைய பண்பாளர் சிலரை நாம் பயன்படுத்திக் கொள்ளலாம். அதற்குத் தேவையான புத்தகங்களையும், கருவிகளையும் வேறுபல சாதனங்களையும் கொண்ட கல்லூரி ஒன்றை நிறுவவேண்டும்.''

இந்திய நாட்டின் தலைமைக் குருவான பிஷப் ஹீபர் (Heber) இக்கடிதத்தை ஹாம்ஹெர்ஸ்ட் பிரபுவிடம் கொண்டு சேர்த்தார். மக்கள் கல்வி அமைப்புப் பொதுக்குழுவின் தலைவரான ஜே. எச். ஹாரிசன் ''பதில் எழுதுவதற்குத் தகுதியற்றது இக்கடிதம்'' என்று குறிப்பிட்டுக், குப்பைக் கூடையில் அதை வீசியெறிந்தார். 1882ஆம் ஆண்டில் ரிப்பன் பிரபு 'கல்விப் பொறுப்பாண்மைக் குழு'வினை நியமித்தார். அக்குழு ஓர் அறிக்கையை அனுப்பியது. அதில் 'பன்னிரண்டு ஆண்டுகளாக நடைபெற்ற வாத எதிர் வாதங்களுக்குப் பிறகு, மெக்காலேயின் ஆதரவான வாதத்தைத் துணையாகக்கொண்ட புதிய கவர்னர்-ஜெனரலின் உறுதியான முடிவிற்குப் பின், அவர் (ராம்மோகன்) வேண்டும் என்று வற்புறுத்திய கல்வி முறையைச், செயல்படுத்த வேண்டுமென இவ்வாணைக்குழு முழு மனத்துடன் பரிந்துரைக்கிறது' என்று குறிப்பிட்டுள்ளமை இங்குக் கருதத்தக்கதாகும். பண்டைக் கல்வி முறைக்கு மாறாக அறிவியல் சார்பான கல்விமுறையை ராம்மோகன் போற்றி ஆதரித்தார். மரபுவழி வந்த கல்விமுறையில் ஊறித் திளைத்தவர்கள் இதற்குத் தவறான விளக்கம் கொடுத்தனர்;

தூற்றவும் செய்தனர்; கயமைத்தனத்தோடு அவர்மீது கண்டனக் கணைகளைத் தொடுத்தனர். உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ராம் மோகனுக்கு எதிராகப் பலர் பொய்க் குற்றச்சாட்டுகளைச் சாற்ற லாயினர். அவர் சமஸ்கிருதத்தை எதிர்ப்பதாகவும், நம்முடைய கல்வி முறையிலிருந்து அவர் சமஸ்கிருதத்தை அடியோடு ஒழித்து விட முயலுவதாகவும் பழிக்கப்பட்டார். கி. பி. 1825ஆம் ஆண்டில் சமஸ்கிருத இலக்கியங்களைக் கற்பதற்காகவும், இந்து சமய ஒருமைக் கோட்டைத் தற்காத்துக் கொள்ளுவதற்காகவும் ராம்மோகன் ஒரு வேதாந்தக் கல்லூரியை நிறுவி இருந்தார். அத்தகைய மனிதர்மீது, இத்தகைய கொடுமை நிறைந்ததும், முற்றிலும் தவறானதுமான குற்றம் சாற்றப்பெற்றமை சிந்திக்கத் தக்கதாகும். 1826ஆம் ஆண்டு, ஜுலை மாதம் 27ஆம் நாள் வில்லியம் ஆதாம் எழுதிய கடிதம் ஒன்றில்,

"அண்மையில் ராம்மோகன் ராய் சிறிய, ஆனால் தூய்மையும் நேர்த்தியும் வாய்ந்த கல்லூரி ஒன்றை நிறுவியுள்ளார். அதை அவர் 'வேதாந்தக் கல்லூரி' என்று அழைக்கின்றார். சமஸ்கிருத இலக்கியத்தில் சிறந்த முறையில் தேர்ச்சிபெற்றுள்ள புகழ்மிக்க பண்டிதர்கள் அக்கல்லூரியில் பணிபுரிகின்றனர். அக்கல்லூரியில் இப்பொழுது சில மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். அக் கல்லூரி இந்துசமயக் கோட்பாட்டைப் பரப்புவதற்கும், தாக்குதல் களிடமிருந்து இந்து சமயத்தைத் தற்காத்துக் கொள்ளுவதற்கும் நடத்தப்பெறுகிறது. இக்கல்வி நிலையத்தில் ஐரோப்பிய கல்வி முறையையும், அறிவியல் கலைகளையும் தொடர்புபடுத்த அவர் பெரு விருப்பு உடையவராக இருக்கிறார். இவற்றோடு கிறித்துவ ஒருமைக் கோட்பாட்டுத் தத்துவத்தையும் அவர் அங்குக் கற்பிக்க விரும்பு கிறார். ஆனால், அவை அனைத்தையும் வங்காளி அல்லது சமஸ்கிருத மொழியின் மூலமே பயிற்றுவிக்க விரும்புகிறார்" என்று குறிப்பிட் டுள்ளமை இங்குக் கருதத்தக்கது.

இந்தியாவில் அறிவியல் கலைகளைக் கல்வித் திட்டத்தில் புகுத்த வேண்டும் என்பதில் ராம்மோகன் கண்ணுங் கருத்துமாக இருந்து வந்தார். அறிவியல் கல்வியைக் கற்பதனால், மக்கள் அறியாமை யின் வளர்ப்புப் பண்ணையாக உள்ள மூடநம்பிக்கைகளிலிருந்து விடு பட்டு, அறிவொளி பெறுவதற்குரிய பாதையில் பயணம் செய்ய இயலும் என்று அவர் நம்பினார். ஐரோப்பிய நாடுகளில் 'திருச் சபைக் கல்விமுறையை' மாற்றி, அறிவியல் கல்விமுறையைப் புகுத்தியமையால் மக்கள் அறிவொளி பெற்றுவருவதை நினைத்து, அவர் இத்திட்டத்தில் பேரீடுபாடு கொண்டிருந்தார். 1816ஆம் ஆண்டு இந்துக் கல்லூரி நிறுவப்பெற்றது. அப்பொழுது, அவர் அக்கல்லூரியை நிறுவ முயன்ற டேவிட் ஹேர் (David Hare) முதலி யோருக்குப் பேருதவியாக இருந்தார். ஆனால், இந்துக்களுள்

வைதிகப் புற்றுடையோர், ராம்மோகன் இந்தக் கல்லூரி நிறுவு வதைக் கடுமையாக எதிர்த்தனர். எனவே, அக்கல்லூரியை நிறு வும் பணியிலிருந்து தாமாகவே அவர் விலகிக்கொண்டார். ஆனால், இந்துக் கல்லூரியை நிறுவ வேண்டும் என்ற திட்டத்தை வகுத்து, ஆர்வத்தோடு அத்திட்டத்தைச் செயல்படுத்திய ஒரு சில சிந்தனை யாளர்களுள், ராம்மோகன் முதன்மையானவர் என்பதில் யாருக் கும் சிறிதளவுகூட ஐயம் இருக்கமுடியாது.

தலைமை நீதிமன்றத்தின், தலைமை நீதிபதியாக சர் ஹைடி ஈஸ்ட் (Sir Hyde East) என்பவர் அக்காலத்தில் விளங்கினார். அவருடைய வீட்டில் 1816ஆம் ஆண்டு, மே மாதம் 14ஆம் நாள், இந்துக் கல்லூரி ஒன்றை நிறுவவேண்டும் என்ற முடிவினைச் செய் வதற்கு ஒரு கூட்டம் கூட்டப்பெற்றது. நான்கு நாட்களுக்குப் பின்னர், அத்தலைமை நீதிபதி இங்கிலாந்தில் நீதிபதியாக உள்ள திரு. ஜே. ஹாரிங்டன் என்பவருக்குச் சுவைமிக்க கடிதம் ஒன்றை எழுதியுள்ளார். அதில், "கவர்ச்சிமிகுந்த, ஆனால் புதுமையான தொரு காட்சி இங்கு அண்மையில் உருவாக்கப்பட்டுள்ளது. 'உரிய பருவத்தில் எல்லாமே மாற்றமுறுவதற்கு ஏற்றவகையில் அமையும்' என்பதை அது காட்டுகிறது. மே மாதத்தின் தொடக்கத்தில் கல்கத்தாவைச் சேர்ந்த பிராமணர் (ராம்மோகன் ராய்) ஒருவர் என்னைத் தேடிவந்தார். அவரை நான் அறிவேன். அவர் மதி நுட்பம் வாய்ந்தவர்; சுதேச மக்களிடத்து எதையும் எடுத் துரைத்துச் செயலாற்றுவதில் வல்லவர். மேலும், நம்முடைய சிறப்புமிக்க பெரியமனிதர்கள் பலரிடத்தும் அவர் மிகநெருக்கமான தொடர்பு கொண்டுள்ளவராவார். சிறப்புமிக்க ஐரோப்பியர்கள் முற்போக்கு முறையில் கல்வி கற்பதைப் போன்று, தங்கள் குழந்தை களுக்குக் கல்வி வசதி செய்து தரவேண்டும் என்பது அவருடைய விருப்பமாகும். இத்தகைய எண்ணம் உடையவர்கள் இந்து சமூகத்தின் மேல்மட்டத்தில் பலர் உள்ளனர். அதற்குத் தேவை யான கல்வி நிலையத்தை நிறுவுவதற்கு அவர்கள் ஆர்வம் கொண் டுள்ளனர். இச்செய்திகளை அவர் என்னிடம் தெரிவித்தார். அக் கருத்துடையவர்களுக்குத் தலைவனாக இருந்து, ஒரு கூட்டத்தைக் கூட்டி, அதில் கல்வி நிலையம் ஒன்றை நிறுவுவதற்கு உதவிபுரியுமாறு என்னை அவர் வேண்டிக் கொண்டார். ...... அவர் சென்ற பிறகு, நான் இச்செய்தியைக் கவர்னர்-ஜெனரலுக்குத் தெரிவித்தேன். நான் அனுப்பிய செய்தியை, தலைமைக் கவுன்சிலின்முன் கவர்னர்-ஜெனரல் வைத்தார். அக்குழுவைச் சேர்ந்த எல்லா உறுப்பினர் களும் நான் அப்பணியைச் செய்ய இசைவளித்தனர். என்னு டைய இல்லத்தில் அந்தக் கல்விக் குழுவினர் கூடுவதற்கு எத்தகைய எதிர்ப்பும் இல்லை என்பதைக் கவர்னர் ஜெனரலின் மூலம் கவுன்சில் உறுப்பினர்கள் சிறப்பாக எனக்குத் தெரிவித்தனர். திட்டமிட்டபடி

1816ஆம் ஆண்டு மே மாதம், 14ஆம் நாள் என்னுடைய இல்லத்தில் அக்கூட்டம் நடைபெற்றது. இந்துக் குடிமக்களுள் அறிவாலோ, பொருள் வளத்தாலோ சிறப்புமிக்கவர் ஐம்பதிற்கும் மேலாக அக்கூட்டத்திற்கு வந்திருந்தனர். அவர்களுள் புகழ்மிக்க பண்டிதர்களும் இருந்தனர். அப்பொழுது வந்திருந்தவர்களால் ஐம்பதினுயிரம் ரூபாய் நிதி உதவி அளிக்கப் பெற்றது. இன்னும் அதிகமான உதவித் தொகை அளிப்பதாக வந்திருந்தவர்களால் உறுதிமொழி அளிக்கப்பெற்றது......பின்னர், வந்திருந்தவர்களோடு நான் பேசிக் கொண்டிருந்தேன். சிறப்பாக அவர்களுள் செல்வமும் செல்வாக்கும் வாய்ந்த நல்ல சாதியினரான பிராமணர் ஒருவர் ராம்மோகன் ராய்க்குப் பெரிதும் எதிராகத் தம் கருத்தைத் தெரிவித்தார்.......ராம்மோகன் அண்மைக் காலத்தில் இந்துக்களின் விக்கிரக வழிபாட்டிற்கு எதிராக எழுதி வருவதோடு தம் நாட்டு மக்களை மிகக் கடுமையாகக் குற்றங் கூறியும் வருகிருர்''.

இந்துக் கல்லூரியை நிறுவுவதற்குத் திட்டம் வகுத்த முதன்மையான முன்னேடிகளுள் ராம்மோகன் ஒருவர் என்பதை, மேற்கண்ட மேற்கோள் ஐயத்திற்கு இடமின்றி அறிவிக்கிறது. ஆனுல், அம் முயற்சியில் தாம் கலந்துகொள்ளுவதால் அத்திட்டத்திற்கு இன்னலும் இடர்ப்பாடும் உண்டாகும் என்பதை அறிந்தவுடன், தாமே அத்திட்டக் குழுவோடு கொண்டிருந்த தொடர்பினை அவர் அறுத்துக்கொண்டார்.

ஒருமைக்கோட்பாட்டுச் சங்கத்தின் ஆதரவில், 1882ஆம் ஆண்டில் ராம்மோகன் உயர்தர ஆங்கிலப்பள்ளி ஒன்றைத் தொடங்கினுர். அதற்குரிய செலவை அவரே ஏற்றுக்கொண்டார். டேவிட் ஹேரும், தவத்திரு. ஆதாமும் இப்பள்ளியின் நிர்வாகக் குழுவில் இடம்பெற்றனர். . இந்தப் பள்ளியில் மகரிஷி தேவேந்திரநாத தாகூர் ஒரு மாணவராகக் கல்வி பயின்ருர். மற்றப் பள்ளிகளில் அறிவியல் பாடங்கள் ஆங்கிலத்தில் பயிற்றுவிக்கப்பட்டுவந்தன. ஆனுல், இந்தப் பள்ளியில் அறிவியல் பாடங்கள் வங்காளமொழியிலேயே பயிற்றுவிக்கப்பெற்றன. 1821ஆம் ஆண்டு, திசம்பர் மாதத்தில் ராம்மோகன் சம்பத கௌமுதி (Sambad Kaumudi) என்ற வங்காளமொழி வார இதழைத் தொடங்கினுர். அந்த இதழின் வெளியீட்டொன்றில், ஏழை இந்துக்களின் பிள்ளைகள் இலவசமாகக் கல்வி கற்பதற்கு அரசாங்கம் ஒரு பள்ளியை நிறுவ வேண்டுமென்ற வேண்டுகோளை அவர் விடுத்திருந்தார். 1821 24ஆம் ஆண்டுகளில் அவருடைய இதழில் அறிவியல் பொருள் பற்றிய பல கட்டுரைகளைத் தொடர்ந்து அவர் எழுதிவந்தார். அவற்றுள் "ஓசைப் புலனில் எதிரொலி" (Echo in Accoustics), 'காந்தத்தின் உட்கூறுகள்' (Properties of Magnets), 'மீன்களின் நடத்தை' 'வானக்குமிழின் (Baloon) விளக்கம்' போன்றவை

இங்குக் குறிப்பிடத்தக்கன. இலக்கணம், தரை நூல், வானவியல், ஜியோமிதி போன்ற பாடங்களுக்கு வங்காள மொழியில் ராம் மோகன் பாடப் புத்தகங்கள் எழுதியுள்ளார்.

கணக்கு, இயற்கை அறிவியல், வேதியல் போன்றவற்றைப் பாடங்களாக அமைக்கவேண்டும் என்ற அவருடைய வேண்டு கோள், அவர் இறந்த பிறகு நெடுங்காலம் கழித்துப் பயன் தந்தது. எனவே, இந்தியாவில் அறிவியல் கல்வியைப் புகுத்தவேண்டும் என்ற இயக்கத்தைத் தொடங்கிவைத்தவர் ராம்மோகன் என்று நாம் உறுதியாகக் கூறலாம்.

வங்காளமொழி உரைநடையின் தந்தை

பத்தொன்பதாம் நூற்ருண்டின் தொடக்கத்தில் வங்காள மொழி உரைநடை சமஸ்கிருத மொழிச் சொற்களைக் கொண்ட கூட்டுக் குவியலாக இருந்து வந்தது ; இரங்கத்தக்க அளவிற்கு ஒழுங் கற்ற வடிவத்தை யுடையதாயிருந்தது ; வங்காள மொழியில் சமஸ் கிருதச் சொற்களை மிகுதியாகப் புகுத்துவதில் பண்டிதர்கள் ஒரு வரோடொருவர் போட்டியிட்டுக் கொண்டிருந்தனர். அத்தகைய பண்டிதர்களின் முழு அளவான அருளிரக்கத்திற்குப் பாத்திரமாக வங்காள மொழி இருந்துவந்தது. பத்தொன்பதாம் நூற்ருண்டின் தொடக்கத்தில் சமஸ்கிருத மயமாக்கப்பட்ட வங்காளமொழி உரை நடை, வடிவத்தில்தான் வங்காள மொழியாகத் தோன்றியதே ஒழிய, மற்றெவ்வகையிலும் வங்காளமொழியின் இயல்புகளைக் கொண்டதாக விளங்கவில்லை.

செராம்பூரில் இருந்த கிறித்துவ சமயத் தொண்டர்களாலும், வில்லியம் கோட்டைக் கல்லூரியின் பண்டிதர்களாலும் முதன் முதல் வங்காள மொழி உரைநடை போற்றி வளர்க்கப்பட்டது. வங்காளத்தின் நாட்டு மக்களிடை கிறித்துவ சமயத்தைப் பரப்பு வதற்கு அதை ஒரு கருவியாக மிஷனரியார் பயன்படுத்தி வந்தனர். வில்லியம் கோட்டைக் கல்லூரி அரசினரால் நடத்தப்பெற்று வந்தது. அதனுல், ஆட்சிமுறைக்குப் பயன்படத்தக்க வகையில் வங்காளமொழி உரைநடையை வளர்க்க அக்கல்லூரியின் பண்டிதர் களுக்கு, ஆக்கமும் ஊக்கமும் அளிக்கப்பெற்றது. நாட்டுமக்க ளிடையே நேரடியான தொடர்பு கொள்ளுவதற்காக இளமைமிக்க பிரிட்டிஷ் அதிகாரிகளுக்கு அக்கல்லூரி வங்காள மொழியைக் கற்பித்து வந்தது.

ஹல்ஹெட் (Halhed) என்பவரால் ஆங்கிலத்தில் எழுதப்பெற்ற 'வங்காள மொழி இலக்கணம்' என்ற நூல் 1778ஆம் ஆண்டில் வெளியிடப்பெற்றது. அதனுடைய தலைப்புப் பக்கத்தில் 'பரங்கியரின் நன்மைக்காக இந்நூல் எழுதப்பெற்றது' என்ற ஒரு குறிப்பு காணப்பெற்றது. செராம்பூர் மிஷனைச் சேர்ந்த சிறப்புமிக்க சமயக் கொள்கைப் பரப்புநரான டாக்டர் வில்லியம் காரே (William Carey) என்பவர், இதற்குஅடுத்து இலக்கணம் எழுதும் முயற்சியில் ஈடுபட்டார். அவருடைய 'வங்காளமொழி இலக்கணம்' 1801ஆம் ஆண்டு வெளியிடப் பெற்றது. நாட்டு மொழியில் 'பிரிட்டிஷ்' அதிகாரிகள் பயிற்சி பெறுவதற்குப் பயன்படவேண்டும் என்ற நோக்கத்தோடு இந்நூலும் ஆங்கிலத்திலேயே எழுதப் பெற்றது.

ஆனால், வங்காளமொழி பேசும் மக்களுக்குப் பயன்படத்தக்க வகையில், முதன்முதல் வங்காளமொழியில் இலக்கணம் எழுதும் முயற்சியில் ஈடுபட்டவர் ராம்மோகன் ராய் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. இந்தியாவை விட்டு இங்கிலாந்திற்குப் புறப்படுவதற்கு முன்னர் 'கௌடிய வியாகரணம்' என்ற வங்காளமொழி இலக்கண நூலை அவர் எழுதினார். 1833ஆம் ஆண்டு கல்கத்தா பள்ளிப் பாடப்புத்தகச் சங்கத்தாரால் அந்நூல் வெளியிடப் பெற்றது. அறுபத்தெட்டுத் தலைப்புகளை யுடையதாகவும் பதினொரு அதிகாரங்களைக் கொண்டதாகவும் அந்நூல் எழுதப்பெற்றது. 'இலக்கணத்தின் தேவையும் நோக்கமும்' என்ற பொருள் முதற்கொண்டு, செய்யுளில் இடம்பெறும் எதுகை மோனை வரையில் உள்ள பல கருத்துக்களைப்பற்றி அந்நூல் விளக்கி யுரைக்கின்றது.

வங்காள மொழியில் முதன்முதல் உரைநடை நூல் ஒன்று 1801ஆம் ஆண்டு வெளியிடப் பெற்றது. வெளிநாட்டினருக்காக ராம்ராம்பாசு என்பவரால் அது ஒரு பாடப் புத்தகமாக எழுதப் பெற்றதாகும். பண்டிதர் மிருத்தியுஞ்சிய வித்தியாலங்காரர் 1802ஆம் ஆண்டில் 'பத்திரிய சிம்மாசனம்' (Batris Simasan) என்ற உரைநடை நூலை வெளியிட்டார். அது ராம்ராம்பாசுவினுடைய 'பிரதாபாதித்ய சரிதத்தை'க் காட்டிலும் திருத்தமான நடையுடையதாகக் காணப்பட்டது. எனினும், வித்தியாலங்காரருடைய நூல் பாடப்புத்தகமாக இருந்ததோடு, பேரளவில் சமஸ்கிருதச் சொற்களின் கலப்பு உடையதாகவும் காணப்பட்டது. அந்தக் காலத்தில் வங்காள மொழி உரைநடை என்பது பாடப் புத்தகங்களை எழுதுவதற்குமட்டும் பயன்படுத்தப்பெறும் கருவியாக இருந்துவந்தது.

வங்காள இலக்கியத் துறையில் ராம்மோகன் ராய் பணிபுரியத் தொடங்கியவுடன், வங்காளமொழி உரைநடையில் கருத்தைக் கவரத்தக்க அளவிற்குப் புரட்சிகரமான மாறுதல்கள் உண்டானதை

நாம் காண்கிறோம். அவருடைய முதல் உரைநடை நூலான 'வேதாந்த கிரந்தம்' என்பது 1815ஆம் ஆண்டில் வெளியிடப் பெற்றது. அன்று வழக்கிலிருந்துவந்த வங்காளமொழி உரை நடையிலிருந்து முற்றிலும் வேறுபட்ட முறையில் அந்நூல் எழுதப் பெற்றிருந்தது. அது பாடப்புத்தகம் அன்று. ஆனால், அது வங்காளமொழி உரைநடையில் எழுதப்பெற்ற மூலநூலாகும். மேலும், பொருள் புரியாத சமஸ்கிருதச் சொற்களைப் பேரளவில் கலந்து எழுதும் வழக்கத்தை ராம்மோகன் பின்பற்றவில்லை. அத னால், அந்நூல் எளிய, இனிய நடையுடையதாக விளங்கியது. அது 'வங்காளமொழி உரைநடை' என்று சொல்லத்தக்க வகையில் உண்மையான வங்காளமொழி உரைநடையில் அமைந்திருந்தது எனலாம். அந்நூலின் முன்னுரையில், தாம் எழுதியுள்ள 'வங்காள மொழி உரைநடையைப் படிப்பதற்குரிய நெறிமுறைகளை' ராம் மோகன் ராய் குறிப்பிட்டிருந்தார். மேலும், வங்காளமொழி உரைநடையில் சொற்றொடர்களை அமைப்பதற்குப் பின்பற்ற வேண்டிய விதிமுறைகளையும் அதில், அவர் வகுத்து அளித்திருந்தார்.

ராம்மோகனருடைய தெளிவுமிக்க சிந்தனைக்கும், படைப்புத் திறனுக்கும் சிறப்புமிக்க சான்றாக இம்முன்னுரை விளங்குகிறது. ராம்மோகன் ராய் அமைத்துத் தந்த வங்காளமொழி உரை நடையை அடிப்படையாகக் கொண்டதனால்தான் பங்கிம் சந்திர சாட்டர்ஜி, இரவீந்திரநாத தாகூர் ஆகியோருடைய படைப்புக் களில் வங்காளமொழி உரைநடை நேர்த்தியும், நயமும் வாய்ந்த இலக்கிய வடிவத்தைப் பெற்றது என்று நாம் கூறினால், அது மிகையாகாது.

வங்காளமொழியில் 'துருபத' இசைப்பாடல்கள்

இசைத் துறையில் ராம்மோகன் ஆற்றியுள்ள பணி, சிறப்பு மிக்கதாகும். பத்தொன்பதாம் நூற்றாண்டின் முதல் இருபது ஆண்டுகளில் வங்காள மொழியின் இசைப் பாடல்கள் பெரிதும் தும்ரி (Thumri), தப்பா (Tappa), கீர்த்தனை, ராமப்பிரசாதி பண் அமைப்புக்களிலும், மற்றும் பல்வேறு நாட்டுப் பாடல் பண்முறை களிலும் இயற்றப்பெற்று வந்தன. ஆனால், அக்காலத்தில் வங்காள மொழியில் துருபத இசைப் பாடல்கள் வழக்கிற்கு வரவில்லை. ஆனால், இந்தி மொழியில் அத்தகைய துருபத இசைப் பாடல்கள்

வழக்கில் இருந்ததாகத் தெரிகிறது. வங்காள மொழியில் முதன் முதல் துருபத 'இசைப் பாடல்களை இயற்றிய பெருமை ராம்மோகன் ராயையே சாரும். 1828ஆம் ஆண்டு துருபத இசைப்பாடல் தொகுதியை அவர் வெளியிட்டார். இந்த இசைப்பாடல்கள் பண் முறையில் எளிமையும், கருத்தாழமும், தெளிவுமிக்க இனிமையும் உடையனவாக இருந்தன. அத்துடன் மிகையான அலங்கார ஆரவார சுருதிமுறை அற்றதாகவும் இவை விளங்கின. அதனால், இதைச் சிறப்புமிக்க பண்ணிசைப் பாடல்களாக அவர் கருதினார். எனவே, அவருடைய பிரமசபைக் கூட்டங்களில் எல்லாம் இவ் விசைப் பாடல்களைப் பாடுமாறு செய்து, அதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்துவந்தார். இத்தகைய சிறப்புமிக்க நிகழ்ச்சிகளில் தப்பா, தும்ரி பண் முறையில் அமைந்த களியாட்ட உணர்ச்சியைத் தூண்டும் இசைப் பாடல்களைப் பாடுவது பொருத்தமற்றது என்று அவர் கருதினார். தம்முடைய பிரமசபைக் கூட்டங்களில் பாடுவதற் கென்றே, அவர் வங்காள மொழியில் துருபதப் பண் முறையில் முப்பத்திரண்டு இசைப்பாடல்களை இயற்றினார். அவருக்குப் பிறகு பிரம சமாஜம் இப்பாடல்களைப் பேணி வளர்த்தது. மகரிஷி தேவேந்திரநாத தாகூரின் வழித்துணையோடு சமாஜம் அளவிட் டுரைக்க முடியாத அளவிற்கு, வங்காள மொழியில் துருபத இசைப் பாடல்களைச் செழித்து விளங்குமாறு செய்தது.

அரசியல் சீர்திருத்தத்தில் பேரார்வம்

தம்முடைய தாய்நாட்டின் சமயத் துறையிலும், சமுதாய அமைப்பிலும் மாற்றங்கள் செய்ய ராம்மோகன் ராய் விரும்பினார். அம்மாற்றங்களைச் செய்தால் இந்தியாவின் அரசியல் முன்னேற்றத் திற்கு அவை செல்வாக்குமிக்கப் பயன்களைத் தாமாகவே தேடித் தரும் என்பதில் அவருக்குச் சிறிதளவு ஐயமும் கிடையாது. 1828ஆம் ஆண்டில், "இந்துக்களால் கடைப்பிடிக்கப் பெறும் இன்றைய இந்து சமயம், அரசியல் நலன்களைப் போற்றி வளர்க்கத் தக்க வகையில் அமைக்கப்பெறவில்லை. சாதி வேறுபாடுகளும், அச் சாதி வேறுபாட்டுள் எண்ணற்ற பிரிவுகளைப் புகுத்தியுள்ளமை யும் இந்து மக்களை அடியோடு அரசியலுணர்வு அற்றவர்களாகச் செய்துவிட்டது. எண்ணிறந்த சமயச் சடங்குகளும் விழாக்களும், புனிதப்படுத்தும் கழுவாய்க்குரிய விதி முறைகளும் இந்தியரைக் கடின

மான எந்தத் துணிச்சல் மிக்க செயல்களைச் செய்வதற்கும் தகுதியற்றவர்களாகச் செய்துவிட்டது. அவர்களுடைய அரசியல் முன்னேற்றத்திற்காகவும், சமுதாய நலவசதிகளுக்காகவும் அவர்களுடைய சமயத்தில் மாற்றங்கள் சிலவற்றைத் தவறுமல் செய்தாக வேண்டும் என்று நான் நினைக்கின்றேன்'' என்று அவர் எழுதியுள்ளார். இதனுல், சமயச் சீர்திருத்தத்திற்கும் அரசியல் சமுதாய முன்னேற்றத்திற்கும் இடையே நெருக்கமான தொடர்பு இருப்பதை ராம்மோகன் நன்குணர்ந்திருந்தார் என்பது புலனுகின்றது.

1821-22ஆம் ஆண்டுகளில், ராம்மோகன் இரண்டு வார இதழ்களைத் தொடங்கினர். வங்காள மொழியில் வெளிவந்த வார இதழிற்கு 'சம்பத கௌமிதி' என்பது பெயராகும். மற்றொன்று பாரசீக மொழியில் வெளிவந்தது. அதற்கு 'மீரட்-உல்-அக்பர்' என்பது பெயராகும். 'சம்பத கௌமிதி'யின் முதல் இதழில், அவர் 'முறைகாண் ஆயத்தின் வழக்கு விசாரணை முறையை'ப் (Trial by Jury) போற்றி ஆதரித்து, ஒரு கட்டுரை எழுதியிருந்தார். அத்துடன் பத்திரிகைகளின் உரிமைகளைப் பற்றியும் அவர் கருத்துத் தெரிவித்திருந்தார். 1726ஆம் ஆண்டு, மேயர் வழக்கு மன்றங்களை அமைத்ததோடு 'முறைகாண் ஆயத்தின் வழக்கு விசாரணை முறையும்' புகுத்தப்பெற்றது. 1774இல் மேயர் வழக்கு மன்றத்திற்கு மாற்றுகத் தலைமை நீதிமன்றம் அமைக்கப்பட்டது. எனினும், பழைய முறையே பின்பற்றப்பெற்றது. இங்கிலாந்தின் பாராளுமன்றத்தில் திரு. வைண் (Wynn) என்பவர் 'இந்திய ஜூரிகளின் மசோதா'வைக் கொண்டுவந்தார். அது 1826ஆம் ஆண்டு, மே மாதம், ஐந்தாம் நாள் சட்டமாயிற்று. ஆனுல், அச்சட்டத்தில் இந்தியருக்கு எதிராக ஒருதலைச்சார்பான விதிகள் காணப்பட்டன. இந்தியர்கள் சிறு முறைகாண் வழக்கு விசாரணை மன்றங்களில் (Petty Jury) பங்குகொள்ளுவதற்கு மட்டும் அச்சட்டத்தால் உரிமை வழங்கப்பெற்றனர். ஆனுல், 'பெரிய முறைகாண் மன்றங்களில்' அமர்வதற்கோ, கிறித்துவக் குற்றவாளிகளை வழக்கு விசாரணை செய்வதற்கோ இந்தியருக்கு உரிமைகள் அளிக்கப்பெறவில்லை. இந்தியருக்கு எதிராகச் செய்யப்பெற்ற இந்த ஒருதலைச் சார்பான முடிவினை எதிர்த்து, ஓயாது அவர் தம் கருத்துக்களைப் பரப்பிவந்தார்.

இந்துக்களாலும் முஸ்லீம்களாலும் கையொப்பம் இடப்பெற்ற மனு ஒன்றைப் பிரிட்டனின் பாராளுமன்றத்தின் முன் மோகன்ராய் வைத்தார். அவ்விண்ணப்பத்துடன் தாமே எழுதிய கடிதக்குறிப்பு ஒன்றையும் சேர்த்து அவர் அனுப்பினுர். 1829ஆம் ஆண்டு ஜூன் மாதம், ஐந்தாம் நாள் அம்மனு பாராளுமன்றத்தின் முன் வைக்கப்பெற்றது. 1832ஆம் ஆண்டு ஜூன் மாதம் பதினெட்டாம் நாள், கிராண்ட்டின் கிழக்கு இந்திய 'அமைதிகாண் நீதிபதிகளையும்' (Justices of Peace) 'முறைகாண் மன்ற நீதிபதிகளையும்' பற்றிய சட்டம் நிறை

வேற்றப்பெற்றது. செராம்பூரில் இருந்த கிறித்துவ மிஷனரியார் 'செய்திக் கண்ணுடி' (சமாச்சார் தருப்பன்) என்ற நாளிதழை நடத்திவந்தனர். அப்பத்திரிகையாளர் இச் சட்டம் நிறைவேறியதும் அதை இயற்றுவதற்குக் காரணமாக இருந்த ராம்மோகனைப் போற்றிப் பாராட்டினர்.

வெல்லஸ்லி பிரபுவின் ஆட்சிக்காலத்தில், முதன் முதலாக பத்திரிகை உரிமையைக் கட்டுப்படுத்தும் முறை புகுத்தப்பெற்றது. ஆனுல், 1818ஆம் ஆண்டு மோய்ரா பிரபுவினுல் அது நீக்கப் பெற்றது. தற்காலிகக் கவர்னர் ஜெனரலாகப் பணிபுரிந்த ஜான் ஆதாம் என்பவரால் 1823ஆம் ஆண்டு, பத்திரிகைகளின் உரிமைகளைப் பாதிக்கும் வகையில் ஓர் ஒழுங்குமுறை விதி செயற்படுத்தப் பெற்றது. கவர்னர் ஜெனரலின் கவுன்சிலில் W. B. பெய்லி என்பவர் ஓர் உறுப்பினராக இருந்தார். 'உள்நாட்டுப் பத்திரிகைகள் தங்களுக்கு வழங்கப் பெற்றுள்ள உரிமைகளைத் தவருன வகையில் பயன்படுத்துகின்ற காரணத்தால்' அவற்றின் உரிமைகளைப் பறிக்கும் சட்டத்தைத் தாம் ஆதரிப்பதாக அவர் தெரிவித்தார். உரிமைகளைத் தவருன முறையில் பயன்படுத்தும் பத்திரிகைக்குச் சான்ருக அவர் 'மீரட்-உல்-அக்பரை'க் குறிப்பிட்டார். 1822ஆம் ஆண்டு, ஆகஸ்டு மாதம் அவ்விதழில் மூவொருமைக் கொள்கையைப் பற்றிச் சில ஆய்வுரைகளை ராம்மோகன் எழுதி இருந்தார். அவற்றையே அவர்கள் மிகவும் 'கடுமையான வன்முறைத் தாக்குதலாக'க் கருதலாயினர்.

1822ஆம் ஆண்டு, அக்டோபர் பத்தாம் நாள் கூடிய தலைமைக் கவுன்சில் கூட்டத்து நிகழ்ச்சிக் குறிப்பில் "......மற்ருெரு பாரசீக பத்திரிகையான மீரட்-உல்-அக்பரின் பொருளடக்கம் மேலே கண்ட இதழின் போக்கிலேயே அமைந்து இருக்கிறது. ஆனுல், அதன் ஆசிரியர் சமயத்துறை கருத்துமாறுபாடுகளுக்குப் பேர்போனவராவர். அதனுல், மூவொருமைக் கொள்கையைப்பற்றி எழுதுவதற்கு வாய்ப்பாக அப் பத்திரிகையை அவர் பயன்படுத்திக் கொண்டுள்ளார். அதை அவர் ஒளிவுமறைவாகவும் நயவஞ்சகமாகவும் எழுதியுள்ளார். எனினும், அவை நமக்கு எல்லைகடந்த தாக்குதலாகவே தோன்றுகிறது" என்று குறிப்பிடப் பெற்றிருந்தது. 1833ஆம் ஆண்டு பிப்ரவரி 12ஆம் நாள், 'கல்கத்தா ஜர்னல்' என்ற இதழின் ஆசிரியரான பக்கிங்காமை இரண்டு மாதங்களுக்குள் இந்தியாவை விட்டு வெளியேறுமாறு ஆணை பிறப்பிக்கப்பெற்றது. அப்பத்திரிகையில் வெளிவந்த சில கருத்துரைகளை அரசு மிகக் கொடிய தாக்குதலாகக் கருதிற்று. அவற்றுள் ஸ்காட்லாந்து நாட்டுப் புதிய திருச்சபையில் தலைமை அமைச்சரான டாக்டர் பிரைசு (Dr. Bryce) கிழக்கிந்தியக் கம்பெனியில் எழுதுபொருள் துறை எழுத்தர் பதவியை ஏற்றுக்கொண்டதைத் தாக்கி எழுதியமை, அரசின்

மனத்தைப் புண்படுத்திவிட்டதாகக் கூறப்பெற்றது. ஒரு திருச் சபையின் அமைச்சர் ஓர் எழுத்தர் பதவியை ஏற்றுக்கொள்ளுவது மதிப்புக்குறைந்த செயலாகப் பக்கிங்காம் கருதினார். இக்கருத்தைத் தெரிவித்ததற்காகவே, பக்கிங்காம் இரண்டு மாதங்களுக்குள் இந்தியாவைவிட்டு வெளியேறுமாறு அரசினரால் அறிவிக்கப் பட்டார்.

ஹேஸ்டிங்ஸ் பிரபு இங்கிலாந்திற்குத் திரும்பியவுடன் தற் காலிகக் கவர்னர் ஜெனரலாகப் பணியாற்றியவர் ஜே. ஆதாம் என் பவராவர். அவரே, இந்த ஆணையைப் பிறப்பித்தார். 'கல்கத்தா ஜர்னல்' என்ற இதழை நடத்தாமல் அலுவலகத்தை மூடிவிடுமாறு அதன் நிர்வாகிகள் அச்சுறுத்தப்பெற்றனர். அதனுடைய துணை ஆசிரியரான திரு. சாண்ட்போர்ட் அர்னாட் (Sandford Arnot) சிறைப்படுத்தப்பெற்று, பின்னர் இந்தியாவிலிருந்து நாடுகடத்தப் பெற்றார். 1823ஆம் ஆண்டு மார்ச்சு 14ஆம் நாள், பத்திரிகை களின் ஒழுங்குமுறைச் சட்டத்தைப் புதிதாக ஆதாம் பிரகடனம் செய்தார். அச்சட்டத்தின்படி பத்திரிகை உரிமையாளர்களும் ஆசிரியர்களும் அரசிடமிருந்து உரிமத்தை (Licence)ப் பெற்றாக வேண்டும் என்ற நிலைமை உண்டாயிற்று. இச்சட்டம் நடைமுறைப் படுத்தப்பெற்ற இரண்டு நாட்கள் கழித்து, அதாவது 1823ஆம் ஆண்டு, மார்ச்சு 17ஆம் நாள், பதிவீட்டு உயர்நீதிமன்றத்தின் முன்னர் ராம்மோகன், துவாரகநாத தாகூர், பிரசன்னகுமார் தாகூர், மற்றும் மூவரும் சேர்ந்து ஓர் விண்ணப்பத்தைத் திருமுன் படைத்தனர். அதே விண்ணப்பத்தின் ஒரு படியை அரசரின் கவுன் சிலுக்கு அவர்கள் அனுப்பிவைத்தனர். அவ்விண்ணப்பத்தில் பத்திரிகை ஒழுங்குமுறை விதிக்கு மிகக் கடுமையான எதிர்ப்பை அவர்கள் தெரிவித்திருந்தனர். இச்சிறப்புமிக்க விண்ணப்பத்தை ராம்மோகனே வரைந்திருந்தார்—மற்றவற்றிற்கிடையில் பின்வரும் வாசகத்தை நாம் அவ்விண்ணப்பத்தில் காணுகிறோம் : "... ..அறிவு வளர்ச்சியையும் அறிவுப் பரப்புதலையும் அடியோடு தடைப்படுத்தி விடும். அத்துடன் இப்பொழுது பெருகிவரும் மனவளர்ச்சியின் விளைவுகளையும் அது தடைப்படுத்திவிடும். இப்பணியைக் கீழைநாடு களின் கல்விச் சிறப்புவாய்ந்த மொழிகளில் இருந்து நாட்டுமக்க ளிடத்துப் பெரு வழக்குள்ள கிளைமொழிகளில் மொழிபெயர்த்துத் தருவதையோ, அயல்நாட்டு வெளியீடுகளில் இருந்து உறிஞ்சப் பெறும் இலக்கிய நுண்ணறிவு நாட்டில் பரவுவதையோ அது தடைப் படுத்திவிடும்......நேர்மையான ஆட்சியாளர் கண்களுக்குப் புலனாகக் கூடிய மற்றோர் ஒத்த முக்கியத்துவம் வாய்ந்த தீமை யாதெனில், பரந்துபட்ட இந்நாட்டில் பல்வேறு பகுதிகளில் ஆட்சித்துறை அதி காரிகள் செய்கின்ற தவறுகளையும், மக்களுக்கு இழைக்கின்ற அநீதி களையும் அரசு உடனுக்குடன் அறியுமாறு செய்வதற்குரிய வாய்ப்

பிளே இந்நாட்டு மக்கள் இழக்குமாறு செய்கிறது. மேலும், இங்கிலாந்திலுள்ள அருள்நிறைப் பேரரசர்க்கும், அவருடைய கவுன்சிலுக்கும் அவருடைய பேரரசில் நெடுந்தொலைவில் வாழும் நன்றி ஈடுபாடு கொண்ட குடிமக்களின் உண்மையான நிலையையும், உள்ளாட்சி அரசினரால் அவர்கள் நடத்தப்பெறுகின்ற முறையையும் இந்நாட்டுமக்கள் நேர்மையாகவும், வெளிப்படையாகவும் எடுத்துரைப்பதற்குரிய வாய்ப்பையும் இழக்க நேரிடுகிறது. இதனால், இதுவரையில் செய்யப்பெற்று வந்ததைப்போல் இனி இத்தகைய செய்திகளை இங்கிலாந்திற்குத் தெரிவிக்க இயலாமல் போய்விடும். இதுவரை இந்நாட்டு மொழிகளில் வெளிவந்த செய்திகளை இங்கு அச்சிடப்பெறுகிற ஆங்கில இதழ்களில் இடையிடையே சேர்த்து ஐரோப்பாவிற்கு அனுப்பி வந்தோம். மேலும் நாட்டுமக்களே ஆங்கிலத்தில் செய்தித்தாள்களைக் கொண்டுவர, இவ்விதி நடைமுறைக்கு வருவதற்கு முன்பு எண்ணி இருந்தோம். இவ்வாய்ப்புக்களை இவ்விதிமுறையால் நாங்கள் இழக்க நேரிடுகிறது......

மனித இயல்பின் குறைபாடுகளை நன்குணர்ந்த ஒவ்வொரு நல்ல ஆட்சியாளரும், என்றும் உலகின் ஆளுநராக நிலைபெற்று விளங்கும் இறைவனைப் போற்றி வணங்குகின்ற ஒவ்வோர் ஆட்சியாளரும் பெரியதொரு பேரரசை நிர்வகிப்பதில் தவறுகள் செய்வதற்கு இடமிருக்கிறது என்பதை உணர்ந்தவர்களாக இருக்கவேண்டும். எனவே, அவருடைய தலையீட்டை எதிர்நோக்கி இருப்பனவற்றை, உடனடியாகவும், எளிதிலும் அறிவதற்குத் தம் பார்வைக்குக் கொண்டுவர ஒவ்வொரு தனிமனிதனுக்கும் வசதி செய்துதரும் ஆர்வத்தோடு அவர்கள் இருக்கவேண்டும். இத்தகைய முக்கியமான இலட்சியத்தை ஈடேற்றுவதற்குக் கடைப்பிடிக்கத்தக்க ஆற்றல் மிக்க சாதனம் கட்டுப்பாடற்ற பத்திரிகை உரிமையாகும்.''

இந்த விண்ணப்பத்தைத் தலைமை நீதிமன்றம் மறுத்துவிட்டது. இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் ராம்மோகன் ராய் பாரசீக மொழியில் தாம் வெளியிட்டு வந்த இதழை நிறுத்திவிட்டார்.

1831ஆம் ஆண்டு மக்கள் சபை (House of Commons) யினரால் தேர்ந்தெடுக்கப்பெற்ற குழுவின் முன்னர் ராம்மோகன் சான்று பகர்ந்தார். கிழக்கிந்தியக் கம்பெனியின் பட்டயத்தைப் புதுப்பிக்கும் பணித்தொடர்பாக அக்குழு அமைக்கப்பெற்றதாகும். அக்குழுவினிடத்து இந்தியர்களை இணை நீதிபதிகளாகவும், நீதிபதிகளாகவும், நீதிமுறை மதிப்பீட்டாளர்களாகவும் நியமிக்குமாறு அவர் வேண்டுகோள் விடுத்தார் ஒழுங்கான பொதுப் பதிவு ஏடுகள் அமைக்கவேண்டும் என்றும், குற்றவியல் சட்டத் தொகுப்புக்களையும், உரிமை வழக்குச் சட்டத்தொகுப்பையும் தயாரிக்க வேண்டும் என்றும் அவர் வேண்டிக்கொண்டார். மேலும், அரசின் செலவைக் குறைத்துக்கொள்ளுமாறும், நிலையான படையைக்

கலைத்துவிட்டு, உழவர்களைக் கொண்டதொரு படையை அமைத்துக் கொள்ளுமாறும் அவர் பணிவுடன் கேட்டுக் கொண்டார். இவை யாவற்றையும்விட ஆட்சித்துறையைச் சேர்ந்தோரிடமிருந்து நீதித்துறைச் செயல்முறைகளைப் பிரித்துவிட வேண்டும் என்பது அவருடைய சிறப்புமிக்க வேண்டுகோளாகும். மேலும், கிராமப் பஞ்சாயத்துக்களிடம் முறைகாண் ஆயத்தினரான ஜூரிகளின் அதிகாரத்தை ஒப்படைக்கலாம் என்ற கருத்தையும் அவர் தெரிவித்தார்.

1842ஆம் ஆண்டு 'வங்காளப் பார்வையாளர்' (Bengali spectator) என்ற இதழில் "அண்மையில் பிரகடனப்படுத்தப்பெற்ற (1833) பட்டயத்தால் வழங்கப்பெறும் சிறப்புரிமைகள் பற்றிய சலுகைகளுக்காக நாம் பேரளவிற்கு அவருக்கு (ராம்மோகனருக்கு) நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்" என்று குறிப்பிடப் பெற்றமை இங்கு நினைவுகூர்தற்குரியதாகும். 'செய்திக் கண்ணுடி' (சமாச்சார் தர்ப்பணம்) என்ற இதழ் "இத்தகைய நன்மைகளை யெல்லாம் நமக்காக அரும்பாடுபட்டு பெற்றுத் தந்த அவரை, இப்பொழுது வாழுகின்ற இந்தியர்மட்டுமல்லாமல், எதிர்கால இந்தியாவில் தோன்றக்கூடியவர்களும் 'நாட்டின் புரவலர்' என்று நேர்மையான எண்ணத்தோடு போற்றிப் பாராட்டுவர்" என்று தன் கருத்தைத் தெரிவித்தது. ராம்மோகனுடைய கருத்துக்களை இங்கிலாந்திலிருந்த அவருடைய செயலாளரான திரு. அர்னுட் குறித்துவைத்துள்ளார். இங்கிலாந்தின் பண்பாட்டு, அரசியல் நற்பணி இந்தியாவில் செயல்படுத்தப் பெறுவதற்கு நாற்பது ஆண்டுகளை எல்லையாக அவர் வகுத்துச் சென்றுர். இந்தக் கால வரையறைக்குள் உலகப் பண்பாட்டுடனும், மக்களாட்சி முறை யோடும் இந்தியாவைத் தொடர்புகொள்ளுமாறு இங்கிலாந்து செய்துவிடும் என்று அவர் நம்பினுர் என்பது அக்குறிப்பாகும்.

இங்கிலாந்தில் நடைபெற்ற சீர்திருத்த மசோதா (Reform Bill) கிளர்ச்சிக்கு ராம்மோகன் முழுமனத்துடன் ஆதரவு அளித்தார். சீர்திருத்தக்காரர்களுக்கும் சீர்திருத்த எதிர்ப்பு இயக்கத்தாருக்கும் இடையே நடைபெற்ற போராட்டத்தைப்பற்றி அவர் பின்வருமாறு எழுதியுள்ளார்: "உலகம் முழுவதிலும் கொடுங்கோன்மைக்கும் உரிமைக்கும் இடையே நடைபெறும் போராட்டம் இது; நீதிக்கும் அநீதிக்கும் இடையே நடைபெறும் போராட்டம்; நேர்மைக்கும் வஞ்சனைக்கும் இடையே நடைபெறும் போராட்டம். ஆனுல், அரசியலிலும், சமயத்துறையிலும் முன்னேற்றக் கொள்கைகள் பையப்பைய நெடுங்காலமாக, ஆனுல், நிலையாக வெற்றி பெற்று வருவதை நாம் தெளிவாகக் காண்கிறோம். கொடுங்கோலர் களும், குருட்டுப் பிடிவாதமுள்ளவர்களும் மூர்க்கத்தனமாக எதிர்த்த எதிர்ப்புகளையெல்லாம் புறமுதுகிடச் செய்து அம் முன்

னேற்றக் கொள்கைகள் வெற்றிபெற்று வருகின்றன.''

1832ஆம் ஆண்டு, ஜூன் மாதத்தில், பிரபுக்கள் அம் மசோதாவை இறுதியில் சட்டமாக நிறைவேற்றினர். அப்பொழுது அவர் பெரு மகிழ்ச்சியுற்றார். தம்முடைய நண்பர் ரத்போன் (Rathbone) என்பவருக்குச் ''செல்வக் குடியினருக்கு எத்தகைய இலட்சியமோ, கொள்கையோ கிடையாது. அந்நிலையில் வாழும் பிரபுக்கள் மிக வன்மையாக அந்த மசோதாவை எதிர்த்தபோதிலும், சீர்திருத்த மசோதா முழுவெற்றி பெற்றமைக்கு யான் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன். மக்கள் செலவில் - இல்லை மக்களைப் பாழாக்குவதன் மூலம் கடந்த 50 ஆண்டுக் காலத்திற்கும் மேலாகத் தங்கள் பணப்பைகளை நிரப்பிக் கொள்ளுவதில் ஈடுபட்ட ஒரு சிலருக்கு இத்தேசிய இனம் இனிமேல் இரையாகப் போவதில்லை. இச்சீர்திருத்த மசோதா தோற்கடிக்கப் பட்டால் நான் இந்நாட்டோடு கொண்டுள்ள தொடர்பினைத் துறந்துவிடுவதாகப் பொது மேடையில் சூளுரை செய்து இருந்தேன்......இறைவனுக்கு நன்றி. இப்பொழுது நான் தங்களுடன் வாழும் ஒரு குடிமகன் என்ற முறையில் பெருமைப் படுகிறேன். இத் தேசிய இனத்தின், இல்லை உலகம் முழுவதும், விடுதலை பெறுவதை நேரில் காணும் வாய்ப்பினைப் பெற்றமைக்கு எல்லையற்ற மகிழ்ச்சியும், மனநிறைவும் அடைகின்றேன்'' என்று அவர் கடிதம் எழுதியுள்ளமை இங்குக் கருதத்தக்கதாகும்.

இந்தியாவிற்கு மட்டும் அல்லாமல், உலகிலுள்ள ஒவ்வொரு நாட்டின் விடுதலைக்கும், ஜனநாயக உரிமைகளுக்கும் நடைபெற்ற போராட்டத்தைப் போற்றி ஆதரித்த பெருமை ராம்மோகனையே சாரும். 1823 ஆம் ஆண்டில், தென் அமெரிக்காவில் ஸ்பெயினின் ஆதிக்கத்தில் இருந்துவந்த குடியேற்ற நாடுகளுக்கு, ஸ்பெயினின் கொடுங்கோலாட்சியிலிருந்து விடுதலை கிடைத்தது. இச்செய்தி கிடைத்தவுடனே, ராம்மோகன் தம் நண்பர்களுக்கு விருந்து ஒன்று அளித்து விழாக்கொண்டாடினார். விருந்திற்கு வந்திருந்தவருள் ஒருவர் 'நீங்கள் ஏன் விழாக் கொண்டாடுகிறீர்?' என்று மோகனைக் கேட்டார். உடனே, ராம்மோகன் 'என்னுடைய உடன்வாழ் உயிரினங்களாகிய மக்கள் எங்கிருந்தாலும், விருப்பங்கள், சமயம், மொழி முதலியவற்றால் என்னுடன் அவர்கள் தொடர்பு இல்லாதவர்களாக இருந்தாலும் அவர்களுடைய துன்பங்களையும் துயரத்தையும் உணராதவனாக நான் இருக்கவேண்டுமா?' என்று அவர் கேட்டார். 1823ஆம் ஆண்டு 'எடின்பரோ மேகசின்' என்ற இதழில் அவருடைய ஆங்கிலேய நண்பர் ஒருவர் ''தென்னமெரிக்காவினுடைய விடுதலையிலும் அதன் முன்னேற்றத்திலும் அவர் எழுச்சிமிகு ஆர்வம் கொண்டமை சிறப்பாக அவருடைய பெருந்தன்மையையும், மாண்பையும், அறத்தின்பால் அவருடைய உள்ளம் கொண்ட ஈடுபாட்டையும் காட்டுகிறது என்று நாம் கூறலாம்'' என்று ராம்மோகன

ரைப் பாராட்டியுள்ளமை இங்கு நினைவுகூர்தற்குரியதாகும்.

இதைப்போன்று, போர்ச்சுகல் நாட்டில், அரசியல் அமைப்புக் குட்பட்ட அரசினை அமைத்தனர் என்பதை அறிந்தபொழுது ராம் மோகன் மிகுந்த மகிழ்ச்சியுற்ருர். துருக்கியருக்கு எதிராகக் கிரேக்கர்கள் உரிமைப் போர் தொடுத்த பொழுது, அவர் அதை மன மாரப் போற்றி ஆதரித்தார். 1815ஆம் ஆண்டிற்குச் சிறிது காலத்திற்கெல்லாம் கிரீசில் 'கார்பொனரி' (Karbcnari) என்ற சங்கம் தொடங்கப்பெற்றது. 1820-21ஆம் ஆண்டுகளில் அது மக்களிடத்தில் பெருஞ் செல்வாக்குற்றது. நேப்பிள்ஸை ஆண்ட போர்பன் அரசமரபைச் சேர்ந்த அரசர்களுக்கு எதிராக, நேப்பிள்ஸ் நகரத்தைச் சேர்ந்த 'கார்பொனரி' இயக்கத்தினர் கலகம் செய்தனர். அவ்வியக்கத்தினர் தங்களுக்கு ஓர் அரசியலமைப்புச் சட்டமும், அனைத்து வகுப்பினரிடையே சமத்துவமும், தங்கள் தலை விதியை நிர்ணயிக்கும் பொறுப்பினையும் தங்களுக்குரிய உரிமைகளாக அளிக்கவேண்டும் என்று அவர்கள் உரிமைப்போர் தொடுத்தனர். அவ்வெழுச்சி அடக்கி யொடுக்கப்பட்டது. ஆட்சிக்கெதிரான அவ்வெழுச்சிக்குத் தலைவர்களாக இருந்தவர்களுள் மொரெல்லி (Morelli), சில்வதி (Silvati) என்ற இரு தலைவர்களையும் அரசு தூக்கிலிட்டது. இச்செய்தி ராம்மோகனுக்குப் பெருந்துன்பத்தைத் தந்தது. இதனுல் திரு. பக்கிங்காம் என்பவரைச் சந்திப்பதற்குக் குறித்திருந்த பேட்டியினை அன்றைக்கு வேண்டாம் என்று அவர் தள்ளிவைத்துவிட்டார். 1821ஆம் ஆண்டு, ஆகஸ்டு பதிஞேராம் நாள், அவர் பக்கிங்காமிற்குப் பின்வருமாறு கடிதம் எழுதிஞர்: "இன்று பிற்பகல் தாங்கள் அளிக்கவிருந்த விருந்தில் கலந்து கொண்டு, மகிழ்ச்சியுறும் வாய்ப்பினை மறுக்கவேண்டிய நெருக்கடியில் நான் இருப்பதால், அதற்குப் பெரிதும் நான் அஞ்சுகின்றேன்; மிகச் சிறப்பாக அண்மையில், ஐரோப்பாவில் இருந்து வந்த செய்திகளால்—மிகவும் அண்மைக்காலத்தில் வந்த மகிழ்ச்சியற்ற செய்திகளால்—என் மனம் பெரிதும் சோர்வடைந்து துன்புறுகிறது. ஐரோப்பிய, ஆசிய நாடுகள் அனைத்தும் முற்றிலும் விடுதலையடைவதைக் காண்பதற்கு நான் கொடுத்துவைக்கவில்லை; அதுவரையில் நான் உயிர் வாழமாட்டேன் என்று கருதுகின்றேன். இத்தகைய தருணத்தில் நேப்பிள்ஸ் மக்களின் உரிமைப் போரை என்னுடைய உரிமைப் போராகவே நான் கருதுகிறேன். அதைப் போன்றே, அவர்களுடைய பகைவரை என்னுடைய பகைவராகவே நான் மதிக்கின்றேன். தன்னுரிமையின் எதிரிகளும், கொடுங்கோன்மையின் நண்பர்களும் என்றுமே முடிவாக வெற்றிபெற்றதில்லை; இனி என்றும் வெற்றிபெறப் போவதில்லை" என்னும் அவருடைய கடிதம் அவருடைய உள்ளத் துடிப்பினைப் படம்பிடித்துக் காட்டுவதாகும்.

அயர்லாந்தினைப் பிரிட்டிஷார் கைப்பற்றியபோது, அதை

ராம்மோகன் மிகவும் கடுமையாக எதிர்த்தார். மீரட்-உல்-அக்பார் என்ற இதழில், இதற்கெதிராகத் தம் கருத்துரைகளை அவர் எழுதினார். பஞ்சத்தால் அல்லற்பட்ட அயர்லாந்து மக்களுக்கு நிவாரண நிதி ஒன்றை அவர் அனுப்பிவைத்தார். பிரெஞ்சுப் புரட்சியைப் பற்றிய செய்திகள் அவருடைய உள்ளத்தைக் கிளர்ந்து எழச்செய்தது. பிரெஞ்சுப் புரட்சியாளரின் மூவண்ணக் கொடிக்கு வணக்கம் செலுத்தும்பொருட்டுத் தாம் பயணம் செய்த படகி லிருந்து கீழிறங்கியபொழுது, அவர் காலில் அடிபட்டுவிட்டது. தன்னுரிமையிடத்து ராம்மோகன் எல்லையில்லாக் காதல் கொண் டிருந்தார். அக் காதலே அவருடைய சமயவியல், சமூக வியல், அரசியல் செயல்முறைகள் அனைத்திற்கும் தலையூற்றாக இருந்தது. மேலும், அவருடைய இத்தன்னுரிமைக் காதல் மனித இனம் முழுவதையும் தழுவியதாக இருந்தது. பதினெட்டாம் நூற்றாண்டில் பன்னாட்டு தேசிய உணர்வைப்பற்றிக் கனவு கண்ட முதல் மனிதராக ராம்மோகன் விளங்கினார்.

1831ஆம் ஆண்டு திசம்பர் 26ஆம் நாள், லண்டன் மாநகரி லிருந்து இளவரசர் டெலிராண்டிற்கு (Prince Tallyrand) அவர் ஒரு கடிதம் எழுதினார். பிரான்சிற்கு வருவதற்குத் தமக்கு ஒரு 'நுழைவு உரிமைச் சீட்டு' (Passport) அளிக்குமாறு பிரான்சின் வெளிநாட்டு அமைச்சருக்கு அக்கடிதத்தில், அவர் வேண்டுகோள் விட்டிருந்தார். அக்கடிதம் ஒப்புயர்வற்ற முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பதி வேடாகும். அக்கடிதத்தில் 'நுழைவு உரிமைச் சீட்டு' முறையை ஒழிக்க வேண்டும் என்பது குறித்து, அவர் விளக்கமாக எழுதியிருந் தார்: "ஆசிய நாட்டினங்களிடத்து இத்தகையதோர் ஒழுங்குமுறை (சமயச் சார்பான கடும் வெறுப்புக்களாலும், அரசியல் தொடர் பான பல பிரிவுகளாலும் அவர்கள் எதிரிகளாக இருந்தபோதிலும்) இல்லவே இல்லை. அயல்நாட்டினரிடத்து எல்லைச் சார்பான பொறுமையும், புதிய கருத்துக்களும் பழக்கவழக்கங்களும் புகுத்தப் பட்டுவிடும் என்று அஞ்சும் இயல்புகொண்ட சீனநாடு ஒன்று தான் இதற்கு விதிவிலக்கு. எனவே, எல்லாவகையான செயல் களிலும் நயமிகு நடத்தையும், முற்போக்குக் கொள்கையும் கொண்ட புகழ்மிக்க பிரஞ்சு மக்களிடத்து, இத்தகைய கேடான வழக்கம் எவ்வாறு இருந்துவருகிறது என்பதை என்னால் புரிந்து கொள்ளவே முடியவில்லை. இப்பொழுது பொதுவாகச் சமயத் துறையின் ஆராய்ச்சியால் மட்டும் அல்லாமல், ஒருதலைச் சார்பற்ற பொதுவறிவினாலும், அறிவியல் ஆராய்ச்சியின் சரியான உய்த் துணர்வாலும் எல்லா மனித இனமும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தன என்றும், அவற்றின் பல்வேறு கிளைகளாகவே வேறுபட்ட தேசிய இனங்களும், பழங்குடிமக்கள் பிரிவுகளும் தோன்றியுள்ளன என்னும் முடிவிற்கு அறிஞர்கள் வந்துள்ளனர். எனவே, எல்லா

நாடுகளிலும் உள்ள அறிவொளிபெற்ற மக்கள், மனிதஇனம் முழுமையும் நன்மைகளை நுகர்ந்து மகிழ்வதையும் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளுவதையும் போற்றி வளர்க்க விரும்புகின்றனர்; இதற்குத் தடையாகவுள்ள எதையும் இயன்றவரை அப்புறப்படுத்தி வருகின்றனர். இதன்மூலம் எவ்வகையிலும் மனிதத் தொடர்பைப் பெருக்குவதற்கு வசதிசெய்து தருவதோடு, வளர்ப்பதற்குரிய வாய்ப்புக்களைப் பெருகச் செய்தும் வருகின்றனர்'' என்பது அக் கடிதத்தின் வாசகமாகும்.

பல்வேறு நாடுகளுக்கு இடையே உண்டாகும் வழக்குகளைத் தீர்ப்பதற்குத் தேசங்களுக்கு எல்லாம் மேம்பட்ட அமைப்பு (Supra-National Organisation) ஒன்றை நிறுவவேண்டும் என்னும் உலகிற்குப் புதுமையான கருத்தை, அவர் அந்தக் கடிதத்தில் முதன்முதலாகக் குறிப்பிட்டிருந்தார். அவர், ''எனக்குத் தோன்றுவதை நான் இங்குக் குறிப்பிடுகிறேன். இருநாடுகளுக்கு இடையே உண்டாகும் எல்லா வகையான அரசியல் வேற்றுமைகளையும் ஒவ்வொரு நாட்டினுடைய நாடாளுமன்றத்தின் உறுப்பினர்களுள் சம எண்ணிக்கை கொண்ட பேரவை ஒன்றை அமைத்து அதன்மூலம் தீர்த்துக் கொள்ள முயலலாம். அம்முறையே, அரசியல் அமைப்புச் சட்டத்திற்குட்பட்ட அரசின் இலட்சியங்களை அடைவதற்குரிய வழியாகும். அப்பேரவையைச் சேர்ந்த இருநாடுகளின் பெரும்பான்மை உறுப்பினருடைய முடிவினை இருதிறத்தினரும் உடன்பட வேண்டும். அப்பேரவையின் தலைவரை ஓராண்டுவிட்டு ஓராண்டு ஒவ்வொரு தேசத்திலிருந்தும் தேர்ந்தெடுக்க வேண்டும். ஓராண்டு அவ்விரு நாடுகளுள் ஒரு நாட்டின் எல்லையிலும், அடுத்த ஆண்டு மற்றொரு நாட்டு எல்லையிலும் அப்பேரவையின் கூட்டம் கூட்டப்பட வேண்டும்......அரசியல் அமைப்புச் சட்டத்திற்குட்பட்டு இயங்கும் நாகரிகம் அடைந்த இருநாடுகளின் நாட்டு மக்களைப் பாதிக்கக்கூடிய அரசியல் அல்லது வாணிக இயல்போன்ற துறைகளிலும் உண்டாகும் எல்லா வகையான கருத்து வேறுபாட்டையும் இத்தகையதோர் பேரவையின் மூலம் நேர்மையான முறையில், மனக் கசப்பு உண்டாகாமல் தீர்த்துக் கொள்ளலாம். அதனால், அந்நாடுகளுக்கு இடையே தலைமுறைதோறும் மனநிறைவு உண்டாவதோடு, ஆழ்ந்த அமைதியையும், நட்பு உணர்ச்சியையும் நாம் பேணி வளர்க்கலாம்'' என்ற புதுமையான கருத்துக்களை அவர் குறிப்பிட்டிருந்தார்.

என்றும் மறக்க இயலாத இந்த வரிகளிலிருந்து, 1831 ஆம் ஆண்டு அளவிலேயே, உலகில் அமைதியைப் போற்றி நிலைநாட்ட முயல்வதற்கும், நாடுகளுக்கு இடையே உண்டாகும் பூசல்களையும் வழக்குகளையும் தீர்ப்பதற்கும் 'தேசங்களுக்கு எல்லாம் மேம்பட்ட ஓர் அமைப்பின்' தேவையை ராம்மோகன் நன்குணர்ந்தமை தெளிவாகின்றது. உலகின் எப்பகுதியைச் சேர்ந்த அரசியல்

சிந்தனையாளரும் கனவில்கூடக் கருதாதப் பன்னெடுங்காலத்திற்குமுன்பே இத்தகையதொரு கருத்துடையவராக அவர் விளங்கினார். அனைத்து நாட்டுச் சங்கம் (League of Nations), ஐக்கியநாட்டு அமைப்பு (U. N. O.) ஆகியவற்றின் தோற்றத்தை முன்கூட்டியே அவர் எதிர்நோக்கினார் என்பது இதனால் நன்கு புலனாகின்றது.

பத்திரிகையாளரின் முன்னோடி

சமூகம், கல்வி, பொருளியல், அரசியல், சமயம் போன்ற துறைகளில் ராம்மோகன்ராய் தொடங்கிய பல்வகைச் சீர்திருத்தங்களால் நாட்டிலே விழிப்புணர்ச்சி உண்டாயிற்று. அதன் அடிப்படையில் முற்போக்குக் கொள்கைகளைக் கொண்ட பத்திரிகையின் தொண்டு உடனடியாகத் தேவைப்பட்டது. அக்காலத்தின் தேவையை ஒட்டி வங்காளத்திலும், சிறப்பாகக் கல்கத்தாவிலும் பத்திரிகை பொதுவான வளர்ச்சி பெறலாயிற்று.

கல்கத்தாவில் தொடங்கப்பெற்ற முதல் முற்போக்கு இதழ் 'பங்களா கெசட்' என்பதாகும். அவ்விதழ் 1816ஆம் ஆண்டில் தொடங்கப்பெற்ற வங்காள மொழி வார இதழாகும். அதை நடத்தியவர்கள் ராம்மோகனரின் 'ஆத்மிக சபையில்' பேரார்வம் கொண்டு விளங்கிய உறுப்பினர்களாவர். அவ்விதழ் 1820ஆம் ஆண்டு வரை தொடர்ந்து நடைபெற்றது.

1817ஆம் ஆண்டில் செராம்பூர் கிறித்துவ மிஷனரியார் "செய்திக் கண்ணாடி" (சமாச்சார் தருப்பணம்) என்ற வங்காள மொழி இதழைத் தொடங்கினர். அவர்கள் ஆங்கிலத்திலும் ஓர் இதழை நடத்தினர். அதற்கு "இந்தியாவின் நண்பன்" (Friend of India) என்பது பெயர்.

'கல்கத்தா ஜர்னல்' என்பதே ஆங்கிலத்தில் தொடங்கப் பெற்ற முதல் முற்போக்குத் தாளாகும். அதை 1818ஆம் ஆண்டு, அக்டோபர் மாதத்தில் ஜேம்ஸ் சில்க் பக்கிங்காம் என்பவர் வெளியிட்டார்.

'சம்பத கௌமிதி' என்ற வங்காளமொழி வார இதழ் 1820ஆம் ஆண்டு தாராசந்த் தத்தர், பாபனிசரண் பண்டியோபாத்தியாயர் என்ற இருவரால் தொடங்கப்பெற்றது. இவ்விதழின் ஆசிரியர் பதவியிலிருந்து பாபனி சரண் விலகியதும், ராம்மோகன் அப்பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.

ராம்மோகன்ராய் பாரசீக மொழியில் ' மீரட்-உல்-அக்பர் ' என்ற வார இதழைத் தொடங்கினர். அது 1823ஆம் ஆண்டிற்குப் பிறகு வெளிவரவில்லை.

வைதிக இந்து சமயத்தின் உறுப்பாக ' செய்திச் சந்திரிகை ' (சமாச்சார் சந்திரிகா) என்ற இதழ் இயங்கியது.

' வங்காள ஹெரால்ட் ' (Bengal Herald) என்னும் இதழை 1829ஆம் ஆண்டு, மே மாதத்தில் டாக்டர் ஆர். எம். மார்ட்டின் என்ற மருத்துவர் தொடங்கினர். அவர் துவாரகநாத தாகூரின் கொள்கைகளிலும் கோட்பாடுகளிலும் பேரீடுபாடு கொண்டவராக விளங்கினர். இத்தாளின் உரிமையாளர்களுள் ராம்மோகன் ராயும், துவாரகநாத தாகூரும் குறிப்பிடத் தக்கவராவர்.

ராம்மோகனின் கொள்கையைப் பின்பற்றியவர்களுள் ஒருவரான நில்ரதன் ஹல்தார் (Nilratan Haldar) என்பவர் ' வங்க தூதன் ' (பங்கதூத்) என்ற வாரத் தாளினை வங்காளமொழி, பாரசீகமொழி, நாகிரி ஆகிய மொழிகளில் பதிப்பித்து வந்தார்.

புத்தக வாணிகரும் வெளியீட்டாளருமான சாமுவெல் ஸ்மித் என்பவர், 'வங்காள ஹர்க்கரு'வைத் தொடங்கினர். அதற்கு துவாரகநாத தாகூர் பேரளவில் பொருளுதவி செய்துவந்தார்.

1831ஆம் ஆண்டில், ' இந்தியா கெசட் ' தொடங்கப்பெற்றது. அதன் உரிமையாளர்களுள் துவாரகநாத தாகூர் ஒருவராவர். அக் காலத்தில் சிறப்புற்று விளங்கிய ஆங்கிலத் தாள்களில் ' இந்தியா கெசட் ' ஒன்றாகும்.

1821ஆம் ஆண்டு ' ஜான்புல் ' (John Bull) என்ற இதழ் தொடங்கப்பெற்றது. அது அரைகுறைப் பணித்துறைச் சார்பான இதழாக இருந்தது. மேலும், முற்போக்குக் கொள்கைகளுக்கு எதிரான இதழ் என்ற கெட்ட பெயரை நாடறிய அது பெற்றிருந்தது. 1832ஆம் ஆண்டு அது விற்கப்பட்டது. துவாரகநாத தாகூரின் நண்பர்களுள் ஒருவரான ஸ்டாக்கூயிலர் (Stocqueler) என்பவர் அதை வாங்கினர். இதற்கு துவாரகநாத தாகூரிடம் அவர் நிதியுதவி பெற்றார். அதனுடைய பெயர் மாற்றப்பெற்றது. அதற்கு ' ஆங்கிலேயன் ' (Englishman) என்ற பெயர் சூட்டப் பெற்றது.

இங்கு ஒன்றைக் குறிப்பிட வேண்டும். ரவீந்திரநாத தாகூரின் பாட்டனரான துவாரகநாத தாகூர் தனிச்சிறப்பு வாய்ந்த மதி நுட்பத்தோடு, பெருஞ் செல்வமும், அளவிட்டுரைக்க முடியாத செல்வாக்கும் உடைய பெரிய மனிதராவார். அவர் முற்போக்குக் கொள்கைகளில் ஊறித் திளைத்தவர் ; ராம்மோகன் ராயிடத்து பேரீடுபாடும் பற்றுறுதியுமுடைய நண்பராவார். தம்முடைய சீர்திருத்தச் செயல் முறைகள் அனைத்திலும் துவாரகநாத தாகூரின் தாராளமான, பற்றுறுதியான ஆதரவை ராம்மோகன்

பெற்றிருந்தார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கப் பகுதியில் கல்கத்தாவில், முற்போக்கியல்புடைய பத்திரிகைகளை நிறுவுவதற்குத் துவாரகநாதர் பேரளவில் பொருளுதவி செய்து வந்தார். ராம் மோகன்ராய் தொடங்கியுள்ள இயக்கத்திற்குப் பொதுமக்களுடைய ஆதரவைத் திரட்டவேண்டும்; அவ்வியக்கத்தின் கருத்துக்களைப் பரப்பவேண்டும் என்ற நோக்கத்தோடு இவ்வாறு அவர் பொருளுதவி செய்து வந்தார். ஜார்ஜ் தாம்ப்சன் (George Thompson) பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் உறுப்பினரும் புகழ்மிக்க பேச்சாளரும், லிபரல் கட்சியைச் சேர்ந்த சிறப்புமிக்க இராசதந்திரியுமாவார். அவரை இந்தியாவிற்கு வரவழைத்த பெருமை துவாரகநாதரையே சாரும். அவருடைய வருகையின்மூலம் ராம்மோகன் ராய் தொடங்கியுள்ள அரசியல் முற்போக்குக் கொள்கையின் (Liberalism) அடிப்படையை வலுவுடையதாக்கிய சிறப்பு துவாரகநாத தாகூருடையதாகும்.

ராம்மோகன்ராய் தொடங்கிய இயக்கத்திற்கு, வங்காளத்தில் உள்ள பத்திரிகையுலகம் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறது. இதைப் போன்றே துவாரகநாத தாகூரின் அறிவொளிமிக்க முற்போக்குக் கொள்கைகளுக்கும், வருங்காலக் கூர்த்த நோக்குடைய தாராள மனப்பான்மைக்கும் வங்காளப் பத்திரிகையுலகம் நன்றி செலுத்த வேண்டும்.

பொருளாதாரச் சீர்திருத்தம்

இந்திய மக்களின் இரங்கத்தக்க பொருளாதார இடுக்கண்களைச் சீர்செய்வதற்கு ராம்மோகன் ஓயாது பாடுபட்டார். 1832ஆம் ஆண்டு பாராளுமன்ற ஆணைக் குழுவிடத்து அவர் தம் கருத்தைத் தெரிவித்தபொழுது, "உழவர்களுடைய நிலை மிகவும் இரங்கத்தக்கதாக உள்ளது. ஜமீன்தார்களின் பேராசைக்கும் பேரவாவிற்கும் இரையாகி அவர்கள் அல்லற்படுகின்றனர்......வரித் தீர்வையை நிர்ணயிக்கின்றபொழுது அரசாங்கத்திடமிருந்து சலுகைகள் பலவற்றை ஜமீன்தார்கள் பெறுகின்றனர். ஆயினும், அவற்றுள் ஒரு சிறு சலுகையை ஏழை உழவர்களுக்கு அவர்கள் அளிப்பதில்லை" என்று குறிப்பிட்டுள்ளார். 1793ஆம் ஆண்டு நடைமுறைக்குக் கொண்டு வரப்பெற்ற 'நிலையான நிலவரி ஏற்பாட்' (Permanent

Settlement)டினல் பேரளவிற்கு ஜமீன்தார்கள் நன்மை அடைந்ததையும், ஏழை உழவர்களின் நிலே அதனுல் சிறிது அளவும் உயரவில்லே என்பதையும் அவர் சுட்டிக் காட்டினர் வாரமோ அளவுக்கு மீறிய முறையில் வாங்கப்பட்டு வருகிறது. எனவே, வருவாயில் சிறிதளவுகூட மிஞ்சவொட்டாமல் வாரம் வாங்கப் பெறுகிறது. அதனுல், வயிற்றுக்குத் தேவையான உணவிற்குக்கூடப் போதிய வருவாய் இல்லாமல் ஏழை உழவன் அல்லற்படுகிருன். இதுவரை உள்ள வாரமுறையில் இனிமேல் சிறிது அளவு உயர்த்துவதைக்கூடக் கைவிட வேண்டும் என்று ராம்மோகன் வாதாடினர். நடைமுறையில் இருந்து வரும் வார வீதத்தை குறைக்கவேண்டும் என்றும் அவர் பரிந்துரைத்தார். ஜமீன்தார்கள் நிலத்தின் வாரத்தை உயர்த்த முடியாமல் இருப்பதற்கும், ஏழை உழவர்களே அடிக்கடி துன்புறுத்தாமல் இருப்பதற்கும் அரசு உழவர்களோடு நிலேயான நிலவரி ஏற்பாட்டினேச் செய்துகொள்வது நல்லதென்று ராஜாராம், தம் கருத்தைத் தெரிவித்தார். நிலேயான நிலவரி ஏற்பாட்டினல் அரசுக்குக் கிடைக்க வேண்டிய வருவாய்த் தொகை குறைந்துகொண்டு வருவதை சரிக்கட்டுவதற்கு, ஆடம்பர வாழ்க்கைக்குரிய போகப் பொருள்களின் மீது வரி விதிக்கலாம் என்றும், உயர்ந்த அளவு ஊதியத்தைப் பெறும் ஐரோப்பிய மாவட்ட ஆட்சித்துறைத் தலேவர்களுக்குப் (Collectors) பதிலாக இந்தியர்களேயே அப்பதவியில் அமர்த்திஞல் அரசின் செலவு கணிசமான அளவிற்குக் குறையும் என்பதையும் அவர் சுட்டிக் காட்டினர். ஜமீன்தார்களுக்கு உரிமையான கடைத் தெருக்களில் கிராமப்புறங்களிலிருந்து காய்கறிகளேயோ, தானியங்களேயோ கொண்டுவந்து ஏழை உழவர்கள் விற்பது வழக்கம். அதற்கு ஜமீன்தார்கள் 'செஸ்' எனப்படும் 'பிரதேச வரியை' விதித்துப் பேரளவில் பொருளேக் கைப்பற்றிக் கொள்ளுவதற்கு எதிராக அவர் ஒரு கிளர்ச்சியே செய்தார்.

உப்பு வாணிக விற்பனே முற்றுரிமை கிழக்கு இந்தியக் கம்பெனி ஊழியர்களுக்கே யுரியதாக இருந்து வந்தது. அதை எதிர்த்து ராம்மோகன் போராடினர். இயற்கையான அதனுடைய விலேக்கு மேலாக ஆயிரம் மடங்கு உப்பின் விலேயை அவர்கள் அதிகப்படுத்தி உயர்த்திக் கொண்டே சென்றனர். உப்பளத்தில் வேலே செய்தவர் 'மோலங்கீஸ்' (Molunghees) என்று அழைக்கப் பெற்றனர். வங்காளத்தில் உப்பு உற்பத்தி செய்யும் வேலேயில் ஒரு இலட்சத்து இருபத்தையாயிரம் கூலியாட்கள் ஈடுபட்டிருந்தனர். அவர்கள் அனைவரும் உண்மையில் அடிமைகளாகவே நடத்தப் பெற்றனர். உப்பை உற்பத்தி செய்வதற்கு அரசு பிரதிநிதிகளேப் பயன்படுத்தியது. பின்னர் உப்பு, கல்கத்தாவிற்குக் கொண்டு செல்லப் பெற்றது. அங்குப் பருவங்கள்தோறும் மொத்த விலேயில் உப்பு

விற்பனை செய்யப் பெற்றது. இந்த உப்பு வாணிகம் ஒருசில இந்தியச் செல்வர்களுடைய கைகளில் அகப்பட்டுக்கொண்டிருந்தது. அவர்கள் உப்பை ஒன்றுகக் குவித்து, விற்பதற்கு முன்னர் அதில் கலப்படம் செய்துவந்தனர். வெளிநாட்டு உப்பை இறக்குமதி செய்தால், அதன்மீது கம்பெனி கடுமையான இறக்குமதி வரியை விதித்தது.

உப்பினை விற்கும் தனி முற்றுரிமையை எதிர்த்து ராம்மோகன் கிளர்ச்சி செய்தார். "உப்பின் விலையைக் குறைத்தால், அதன் பயன் அதிகப்படும். நாட்டுமக்கள் அனைவராலும் உப்புப் பற்றுக் குறை உணரப்படுகிறது. மலிவான விலையில் நல்ல சரக்காக இருக்கும் இங்கிலாந்தின் உப்பினை இறக்குமதி செய்வதற்கு அனுமதி தரவேண்டும். உப்பளங்களில் தொழில் செய்யும் தொழிலாளிகளை வேளாண்மைத் தொழில்களில் ஈடுபடுத்தவேண்டும். உப்பினைப் பயன்படுத்தும் மக்களிடத்து உப்பானது சென்று சேர்வதற்குள், சாதாரண மண்ணைப்போன்ற நிலையை அடையுமாறு அதில் கலப் படம் செய்யப்பெறுகிறது" என்று அவர் வாதாடினர். பாராளு மன்றத் தேர்வுக் குழு ராம்மோகனரின் உப்பு வாணிகத் தனி யுரிமை எதிர்ப்பை ஆதரித்தது. இவ்வாறு அவருடைய கிளர்ச்சி பயன் அளித்தது. அதனால், உப்பு வாணிகம் கிழக்கிந்தியக் கம்பெனியாருக்கே முற்றுரிமையாக இருந்துவந்த நிலை மாறியது.

பிரிட்டிஷ் ஆட்சியாளர்களால் முறையாக இந்தியாவின் பொருளாதாரம் வற்றச் செய்யப்பெறுவதைத், தம் நாட்டு மக்களு டைய கவனத்திற்கு முதன்முதல் கொண்டுவந்தவர் ராம்மோகன் ஆவார். இந்தியாவைக் கைப்பற்றியவர்கள் தாயகத்திற்குக் கொண்டு செல்லும் திறைப்பொருளாக அது இருந்தது. 'இந்தியா வின் வருவாய் முறை'ப் பற்றிய விளுக்களுக்குத் தெளிவாக ராம் மோகன் விடை அளித்துள்ளார். இந்தியாவின் பணித்துறைகளி லிருந்து ஓய்வுபெறும் ஐரோப்பிய அதிகாரிகளால் ஏராளமான பணம் இந்தியாவிலிருந்து வெளியே கொண்டு செல்லப்படுகின்றது. இவ்வாறு வெளிநாடுகளுக்குக் கொண்டு செல்லப்பெறும் பணத்தின் அளவினை எளிதில் விளக்கிக் காட்டுவதற்கு, அவர் ஓர் அட்டவணை வரைந்து தெளிவுறுத்தியுள்ளார். அதில் பின்வருமாறு எழுதி யுள்ளார்: "திருவாளர் லாயிட் (Lloyd), மெல்வில்லே (கணக்குத் துறைத் தலைவராகவும், பின்னர் தணிக்கைத் துறைத் தலைவராகவும் பணி புரிந்தவர்) ஆகிய இருவரும் பிரபுக்கள் சபையின் தேர்வுக் குழுவின் முன்னர் 1830ஆம் ஆண்டு, பிப்பிரவரி 23ஆம் நாள் சான்று பகர்ந்துள்ளனர். அதை அக்குழுவின் நிகழ்ச்சிப் பதிவேட்டில் பதிவு செய்துள்ளனர். ஆண்டுதோறும் இந்தியாவின் வருவாயைக் கொண்டு மாநிலவாரியாகச் செலவழிக்கப்பெற்ற தொகை முப்பது லட்சம் பவுன்களாகும். இதில் 'கட்டுப்பாட்டுக் கழகம்' (Board of

Control), இந்தியச் செயலகம் (India House), இந்தியாவில் பணி யாற்றும் ஐரோப்பிய சிவில் படைத்துறை அதிகாரிகளுடைய ஊதியம், பணிக்கு வராமல் போகும் காலத்திற்குரியபடி, ஓய்வுகால ஊதியம், அவற்றிற்கு வட்டியாகக் கொடுத்தவை ஆகிய அனைத்தும் அடங்கும். இவற்றோடு இந்தியாவின் மாநிலப் பண்டசாலைகளுக்கு ஒதுக்கப்பெற்ற 453588 பவுன் தொகையும் அடங்கும்'' என்று அவ் வறிக்கையிலிருந்து கண்டறிந்த சில செய்திகளை ராம்மோகன் எடுத் துரைத்துள்ளார்.

'' வங்காள அரசினுடைய கட்டுப்பாட்டுக் கழக இயக்குநர்கள் 1810ஆம் ஆண்டு, ஜுன் 28ஆம் நாள் ஒரு கடிதம் எழுதியுள் ளனர். வங்காளத்தில் மிகுந்த பொறுப்புள்ள பதவியில் பணி புரிந்த ஒருவரால் '**இந்தியாவிற்குப் பொருத்தமான குடியேற்ற நாட்டுக் கொள்கை**' என்ற நூல் எழுதப்பெற்றது. இந்நூலில் மேலே குறிப்பிட்ட கடிதம் மேற்கோளாகக் காட்டப்பெற்றுள்ளது. அதில், அந்த இயக்குநர்கள் 'கடந்த பல ஆண்டுகளாகத் தொடர்ந்து இருபது லட்சம் பவுன்கள், ஆண்டுதோறும் தனி மனிதர்களுடைய ஆண்டுக் கணக்கில் இலண்டனில் செலுத்தப் பட்டு வருகிறது என்ற கருத்தைப் பொறுப்புடன் நாங்கள் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம்' (பக். 70) என்று குறிப்பிட் டுள்ளனர். இத்தகைய ஆதாரங்களிலிருந்தும், மற்றும் நம்பத் தகுந்த பதிவேடுகளிலிருந்தும் மொத்த மூலதனம் அல்லது 'இந் தியாவிலிருந்து தனியார்க்கு அல்லது அரசுக்குச் செலுத்தப்பெற்ற திறைப்பொருளின் கூட்டு மொத்தமான தொகை 1765 முதல் 1820 வரை, நூறு கோடி (100,00,00,000) பவுன்களாகும்' என்று அந்நூலாசிரியர் கணக்கிட்டுள்ளார்.'' இக்கருத்தினை ராம்மோகன் மிகத் தெளிவாக எடுத்து விளக்கியுள்ளார்.

இங்கிலாந்தில் கட்டுப்பாடில்லா வாணிக உரிமை வேண்டு வோரும் விற்பனை முற்றுரிமை நாடுவோரும் பெரும் பூசலிட்டுக் கொண்டிருந்தனர். ராம்மோகன் விற்பனை முற்றுரிமை நாடு வோருக்கு எதிராகக் கட்டுப்பாடில்லா வாணிகவுரிமை வேண்டு வோரை ஆதரித்தார். இப்பணியில், அவருக்குச் சிறந்த முறையில் துவாரகநாதர் உதவிபுரிந்தார். முஸ்லீம்களுடைய ஆட்சியின் இறுதிப் பத்தாண்டுகளில் இந்தியா வளர்ச்சியற்ற தேக்கநிலையில் சிக்கிச் சீரழிந்தது. அதிலிருந்து இந்தியாவை விடுவித்து மேன்மை யுறச் செய்யும் திருப்பணியை, வரலாறு பிரிட்டிஷாரின் மூலம் நிறைவேற்ற முயலுகிறது. அம்முயற்சிக்கு வழிகோலுவதற்கே இந்தியாவைப் பிரிட்டிஷார் கைப்பற்றியுள்ளனர் என்னும் தெளிவு மிக்க நோக்குடன், எதையும் நன்குணர்ந்து போற்றும் ஆற்றல் உடையவர்களாக அவ்விருவரும் இருந்தனர். நெடுங்காலமாக இந்தியா தனியே ஒதுங்கி நின்றுகொண்டிருந்தது. அது உலக

வரலாற்று உயிரோட்டத்திற்குப் புறத்தே தனித்து நின்று கொண்டிருந்தது. வரலாற்றின் ஆற்றல் மிக்க உயிரோட்டத்தின் பிரதிநிதியாக இங்கிலாந்து விளங்கியது. இந்திய வாழ்க்கையின் ஒவ்வோர் எல்லையிலும் உலக ஆற்றலாகிய உயிரோட்டம் காணப்படவில்லை. எனவே, அவ்வுயிர் ஓட்டத்தில் இந்தியாவை எடுத்து எறிந்தது. பொருளாதாரத் துறையில் தொழிற்புரட்சியை உண்டாக்கும் பணியைத் தன்னையறியாமலே அது இந்தியாவில் நிறைவேற்றியது. வங்காளத்தின் நாட்டுப்புறப் பகுதிகளில் ஆங்கிலேயர் தொழிற்சாலைகள் அமைப்பதை ராம்மோகனும், துவாரகநாதரும் போற்றியாதரித்தனர். இதன்மூலம் நிலையாக ஜமீன்தாரர்களுடைய கொடுமைக்கு ஆளாகி அல்லற்பட்டு, ஆற்றாது அழுது கண்ணீர் வடிக்கும் ஏழை விவசாயிகளுக்குப் புதுவாழ்வு கிடைக்கும் என்று அவர்கள் நம்பினர். எல்லா வரலாற்று நடைமுறைகளும் பையப்பைய மாற்றமுறுகின்றபொழுது கொடுமை நிறைந்ததாகத் தோன்றும். அதைப் போன்றே, எல்லாவற்றையும் இயந்திரமயமாக்கும் செயல்முறையும் கொடுமை நிறைந்ததாகத் தோன்றுவது இயற்கை. ஆனால், அது தவிர்க்க முடியாத ஒன்றாக இருந்தது. உலகில் வேறெந்த நாட்டிலும் நிலமானியப் படைமுறைப் பொருளாதாரத்திலிருந்து முதலாளித்துவப் பொருளாதார நிலைக்கு இத்துணை அமைதியாகவும், மெல்லவும், சேதமின்றியும் மாற்றமுற்றது இல்லை. இந்தியாவில் இவ்வழியைத் தவிர, வேறு வழியில் அது அமைவதற்கு வழி இல்லை. இந்தியாவில் இத்தகைய பொருளியல் புரட்சி உண்டாவதை ராம்மோகன் மகிழ்ச்சியுடன் வரவேற்றார். இதற்குத் தம்முடைய நண்பரான துவாரகநாத தாகூரின் பற்றுறுதி வாய்ந்த ஆதரவை அவர் திரட்டினார்.

பிரம சபையும் பிரம சமாஜமும்

1827ஆம் ஆண்டு தவத்திரு வில்லியம் ஆதாம், ஆர் டட்டன் (Dutton) என்பவருக்கு ஒருமைக் கோட்பாட்டினரின் சங்கத்தைப் பற்றிக் கடிதம் ஒன்று எழுதினார். "அதனுடைய தற்கால உறுப்பினர்கள் தலைமை நீதிமன்றத்து பாரிஸ்டரான தியோடர் டிக்கன்ஸ், மாக்கின்தோஷ் கம்பெனியைச் சேர்ந்த ஒரு வாணிகரான ஜார்ஜ் ஜேம்ஸ் கார்டன். வழக்குரைஞர் வில்லியம் டாடே, கம்பெனிப் பணித்துறையைச் சேர்ந்த அறுவை மருத்துவர் டாக்டர் P. W.

மெக்லியசட் (Macleod) கம்பெனியின் பதிவுபெருத ஊழியரான நார்மன் கெர், ராம்மோகன் ராய், துவாரகநாத தாகூர், பிரசன்ன குமார தாகூர், ராதாபிரசாத் ராய் (ராம்மோகனரின் மூத்த மகன்), நான் '' என்று அதில் அவர் குறிப்பிட்டிருந்தார்.

ஒருமைக் கோட்பாட்டினர் சங்கம் நாளடைவில் இருக்கும் இடம் தெரியாமல் நிலைகுலைந்துபோயிற்று. அச்சங்கம் தோல்வி யுற்றவுடன், ராம்மோகனரைப் பின்பற்றும் சீடர்கள், ஒருமைக் கோட்பாட்டையும் ஒரே தெய்வ வழிபாட்டு நெறியையும் நாட்டிலே பரப்புவதற்குத் தனிப்பட்ட, சிறப்புமிக்க நிலையம் ஒன்றை உடனடி யாகத் தொடங்க வேண்டியதன் தேவையை நன்குணர்ந்திருந்தனர். ராம்மோகனரின் சீடர்களுள், சந்திரசேகர தேவ் என்பவர் ஆர்வமும் ஆற்றலும் மிக்க இளைஞராவார். எத்தகைய இடையூறுமின்றி ஒருமைக் கோட்பாட்டுச் சங்கத்தின் கூட்டங்களை நடத்துவதற்குத் தனிச்சிறப்பு வாய்ந்த இடம் ஒன்றை அமைத்துக்கொள்ளுவது நல்லது என்ற கருத்தை, அவர் தம் குருநாதரிடம் அடிக்கடி கூறி வந்தார். சந்திரசேகர தேவின் கருத்தை ராய் ஒப்புக்கொண்டார். 1828ஆம் ஆண்டு, ஆகஸ்டு இருபதாம் நாள் ' பிரம சபை ' தொடங் கப்பெற்றது. சந்திரநாகூரில் வாழ்ந்த ராம்கமல் பாசுவிடம் இருந்த ஒரு வீடு வாடகைக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது. அந்தக் கமல் பாசு கல்கத்தா வட்டாரத்தில் ' பரங்கிக் கமல் பாசு ' என்று போற்றப்பட்டவராவார். அவர் ஐரோப்பியரோடு நெருங்கிய வாணிகத் தொடர்பு கொண்டிருந்தமையால், அவரைக் கல்கத்தா மக்கள் ' பரங்கிக் கமல் பாசு ' என்று அழைக்கலாயினர். பிரம சபையின் முதல் இருப்பிடமான வாடகை வீடு சித்புரிசாலையில் 48ஆம் எண்ணுள்ள மாளிகையாகும். தாராசந்த் சக்கரவர்த்தி என்பவர் இராம்மோகனரின் மற்றொரு சீடராவர். அவரைச் சபையின் முதல் செயலாளராக அமர்த்தினர். இந்த வாடகை வீட்டில் அச்சபை தொடர்ந்து இரண்டு ஆண்டுகள் செயல்பட்டு வந்தது. 1830ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் இருபத்து மூன்றும் நாள், அச்சபைக்காக வாங்கப்பெற்ற வீட்டிற்கு அது மாற்றப் பட்டது. பிரம சபை தொடங்கப்பெற்றதும், அதற்குப் போட்டி யாக ' தருமசபை ' என்பதை வைதிக இந்துக்களில் ஒரு சிலர் தோற்றுவித்தனர். வைதிக இந்துக்களின் நம்பிக்கைக்குரிய தலைவ ராக இருந்த ராதா காந்த தேவ் என்பவரின் தலைமையில் ' தரும சபை ' இயங்கியது.

1830ஆம் ஆண்டு, ஜனவரி இருபத்து மூன்றும் நாள், பிரமசபை சொந்த வீட்டிற்கு மாற்றப்பெற்றது. புதிய கட்டடத்தில் பிரமசபை தொடங்கப்பெற்றபொழுது ஐரோப்பியருள் ஒரேவொருவர் மட்டும் அவ்விழாவிற்கு வந்திருந்தார். மாண்ட் கோமரி மார்ட்டின் என்பது அவருடைய பெயராகும். அவர், ' பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகளின்

வரலாறு ' என்ற தம் நூலில், இச்சபையின் தொடக்கவிழாவைப் பற்றிய சுவைமிக்க செய்திகளைக் குறிப்பிட்டுள்ளார். அந்தக் குறிப்பிலிருந்து பிரமசபையின் தொடக்கவிழாவிற்கு ஐந்நூறு இந்துக்கள் வந்திருந்தனர் என்பது தெரியவருகிறது. சபை தொடங்குவதற்கு முன்பு, 1830ஆம் ஆண்டு ஜனவரி எட்டாம் நாள், ராம் மோகன், சபையின் அறநிலையப் பத்திரத்தை வரைந்தார். அவ்வற நிலையப் பத்திரம் சிறப்புமிக்க ஒரு பதிவேடாகும். அப்பத்திரம் பரந்த நோக்கிற்கும், அனைத்துலகப் பண்பிற்கும் பெயர்பெற்றதாகும். அப்பத்திரத்தின் இடையிடையே நாம் பின்வரும் வாசகங்களைக் காணலாம்: "எல்லாக் காலத்திலும் இதே கட்டிடத்தையும், நிலத்தையும், குடியிருப்புக்களையும், மரபுரிமையாகப் பெறத்தக்க அமைப்புக்களையும், மனையிடத்தையும், தட்டுமுட்டுச் சாமான்களையும் பயன்படுத்தவும், புழங்கவும், அனுபவிக்கவும், ஒதுக்கி வைக்கவும் அறநிலையக் காவலர்களுக்கு உரிமையுண்டு. எல்லா வகையான மக்களும், எல்லா வகையான கருத்துடைய குழுவினரும் பொதுக் கூட்டங்களை நடத்துவதற்கு இவ்விடத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆனால், அவர்கள் ஒழுங்கும், அமைதியும், சமய வுணர்வும், பற்றுறுதியும் உடையவர்களாக இப்பேரண்டத்தைப் படைத்துக் காக்கும் பரம்பொருளிடத்து, என்றும் அழியாததாய்த் தேடியும் காணமுடியாததாய், மாற்றமுறாததாய் விளங்கும் பரம் பொருளிடத்து பக்தியுடையவர்களாக இருக்கவேண்டும்............ உயிருள்ள அல்லது உயிரற்ற பொருள்கள் எதுவாக இருந்தாலும், இன்று இருப்பதாகவோ, இனிமேல் தோன்றக்கூடியதாகவோ இருந்தாலும் அவற்றை வழிபாட்டிற்குரிய பொருளாக ஏற்றுக் கொள்ளக்கூடாது. எந்த மனிதனும், எக்குழுவைச் சேர்ந்தவனாக இருந்தாலும் அதைப் போற்றவோ, இழித்துக் கூறவோ, தூற்றவோ கூடாது. வழிபடுகின்ற பொழுதோ, கருத்தைப் போதிக்கின்ற பொழுதோ, பக்திப் பாடல்களிலோ, இத்தகைய வழிபாடுகளில் பின்பற்றப் பெறும் எத்தகைய வழிபாட்டு முறைகளிலும் இத்தகைய தவற்றை யாரும் செய்யக்கூடாது.........ஆனால், இவ்வுலகத்தின் தலைவரும் காப்பாளருமான பரம்பொருளைத் தியானிப்பதையும், அறச்செயல்புரிவதையும், ஒழுக்கநெறியோடு வாழ்வதையும் மேற்கொண்டவர் பக்தியையும், அருள்நெறியையும், அறநெறியையும் போற்றி வளர்க்கப் பாடுபடவேண்டும். மேலும், எல்லாவகையான சமயக் கொள்கைகளையும் குழுவினையும் சார்ந்த மனிதரிடையே ஒற்றுமைக்குரிய பண்புகளைப் போற்றி வளர்க்கவேண்டும்".

இந்த அறநிலையப் பத்திரத்திலிருந்து, புதியதொரு சமயத்தின் நிலையமாகப் பிரம சபையை அமைக்க ராம்மோகனர் விரும்பவில்லை என்பது தெளிவாகப் புலனாகின்றது. பிரம சபையின் கட்டிடத்தை எல்லாச் சமயங்களையும் சேர்ந்த 'ஒன்றே தெய்வம்' என்ற

ஒருமைக் கோட்பாட்டாளர் தம்முடைய நிலையமாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று அவர் விரும்பினார்.

வடிவ மற்றதும், என்றும் நிலைபெற்று விளங்குவதும், தேடிக் காண இயலாததும், மாற்றம் இல்லாததுமான ஒரே கடவுளை நம்புகின்ற பல்வேறு வகையான சமயங்களைச் சேர்ந்தவர்கள் எல்லாரும் சந்திப்பதற்குரிய இடமாக, இந்நிலையம் விளங்கவேண்டும் என்பது அவருடைய அவா. அனைத்துலகச் சமயத்தை (Universal Religion)ப் பின்பற்றும் மனிதன் என்று ராம்மோகன், தம்மை குறிப்பிட்டுக் கொண்டார். தாம் இறந்த பிறகு, தம்மை இந்து சமயத்தினர் ' இந்து ' என்றும், இஸ்லாம் சமயத்தினர் ' இஸ்லாமியர் ' என்றும் அதைப்போன்றே கிறித்துவ சமயத்தினர் ' கிறித்தவர் ' என்றும் உரிமை கொண்டாடுவர் என்றும், ஆனால், தாம் எச்சமயத்தையும் சார்ந்திருக்கவில்லை என்றும், தான் அனைத்துலக சமயத்தைச் சேர்ந்தவன் என்றும் அவர் தம்முடைய நண்பர்களுள் ஒருவரிடம் கூறி இருக்கிறார். பம்பாய் மாநிலத்தில் முற்போக்கியல்பு வாய்ந்த சீர்திருத்தக் கருத்துக்களைப் போற்றுவதில் எம். ஜி. ரானடே முன்னோடியாக விளங்கினார். அவர் இந்த அறநிலையப் பத்திரத்தைப் பாராட்டி " ஆன்மிக உணர்வு, ஆழ்ந்த பக்தி, அனைத்துலகப் பொறையுடைமை ஆகிய மூன்றும் இப்பத்திரத்தின் தலையாய பண்புகளாகும். இப்பண்புகளால் அழகு, முழுநிறைவு ஆகியவற்றின் இலட்சியக் கொடுமுடியை அப்பத்திரம் எட்டிப் பிடித்துவிட முயலுகிறது. எனினும், அதனுடைய முழுச் சிறப்பையும் நம் நாட்டு மக்கள் உணர்ந்து போற்ற இன்னும் பல நூற்றாண்டுகள் ஆகலாம் " என்று அவர் வரைந்துள்ளார். சிறப்புமிக்க இந்தியப் பத்திரிகையாளரான ராமனந்த சாட்டர்ஜி, " ராம்மோகன் பிரம சமாஜத்தை நிறுவிய பல்வேறு சமயங்களைச் சேர்ந்தவர்கள் தெய்வ வழிபாட்டிற்கு ஒன்றாக இணைய விரும்பினால், அவர்கள் கூடுமிடமாகவே அதை அமைத்தார் " என்று குறிப்பிட்டுள்ளார். 1906 ஆம் ஆண்டு, கல்கத்தாவில் தெய்விக மாநாடு ஒன்று நடந்தது. அதற்கு பிரமரிஷி ஆர். வேங்கடரத்தினம் தலைமையேற்றார். தம்முடைய தலைமையுரையில், " குறுகிய சமய உட்பிரிவுகளின் பற்றில்லாமலும் கடவுளை வழிபடுவதற்குச் செயற்கையாக உண்டாகும் வேற்றுமைகள் ஏதும் இல்லாமலும் ஆன்மிக சகோதரத்துவ நிலையமாக பிரம சமாஜம் விளங்கவேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டு வரையப்பெற்றது. அழியாச் சிறப்புவாய்ந்த அறநிலையப் பத்திரமாகும் அது. எத்தகைய குறுகியபற்றோ, பாழ் செய்யும் உட்பகையோ இல்லாமல், மனிதன் மனிதனோடு கொள்ளும் உறவால் உண்டாகும் பயனையும், சிறப்புமிக்கப் பண்புகளான ஒழுக்கநெறி, பக்தி, அறஞ்செய்தல், கருணை ஆகியவற்றின் கூட்டுறவால் உண்டாகும் பயனையும் மக்கள் பெற்றுச்

சிறக்கவேண்டும் என்பதே பிரமசமாஜத்தை நிறுவியதன் அடிப் படை குறிக்கோளாகும்'' என்று அவர் அறிவித்துள்ளார். 1865ஆம் ஆண்டு, ஜூலை முதல் நாள் ''இந்தியக் கண்ணடி'' (Indian Mirror) என்ற இதழில் சிறப்புமிக்க இந்தியச் சீர்திருத்தக் காரரான கேசவ சந்திர சென், "இப்பொழுது நாட்டிலே உள்ள எந்தச் சமயப் பிரிவையும் அவர் சேர்ந்தவர் அன்று. அல்லது எத்தகைய புதிய சமயக் கிளை எதையும் தொடங்கவும் அவர் விரும்பவில்லை ; மிகுந்த திருத்தமும் தனிச் சிறப்பும் வாய்ந்ததாகப் புதியதொரு சமயத்தைத் தோற்றுவிக்கவும் அவர் விரும்பவில்லை. சாதி, நிற, சமயங்களால் வேறுபாடற்ற நிலையில் அவற்றைச் சேர்ந்த மக்கள் எல்லாரும் ஒன்ருகச் சேர்ந்து உண்மையான ஒரே இறைவனைப் பொதுவகையில் வழிபாடு செய்யவேண்டும் என்பது அவருடைய (ராம்மோகனருடைய) பேரவாவாகும். இத்தகைய பரந்த உள்ளம் வாய்க்கப்பெற்ற அவர், எந்தச் சமயத்தையும் சேர்ந்தவர் அல்லர். எனினும், ஒவ்வொரு சமயத்திற்கும் உரியவ ராக அவர் விளங்கிஞர். அவர் எந்தத் திருச்சபையின் உறுப்பினரும் அல்லர் ; ஆஞல், எல்லாத் திருச்சபைகளின் உறுப்பினராகவும் அவர் விளங்கிஞர். ஒரே தெய்வ வழிபாட்டுக் கொள்கையை அடிப்படையாகக் கொண்ட அனைத்துலகத் திருச்சபை ஒன்றை நிறுவுவதே தம் வாழ்வின் குறிக்கோளாக அவர் கொண்டிருந்தார். பிரம சமாஜத்தின் புகழ்மிக்க பிரசாரகர் சதிஷ் சக்கரவர்த்தி என்பவராவர். அவர் 1933ஆம் ஆண்டில், செப்டம்பர் திங்கள் 27ஆம் நாள் ஆற்றிய சமயச் சொற்பொழிவில், "புதியதொரு சமயத்திற்குரிய திருக்கோயிலை நிறுவுவது ராம்மோகனருடைய நோக்கம் அன்று. எல்லாச் சமயக் கிளைகளைச் சேர்ந்தவர்களும் பொதுவான ஒரு கடவுளை வழிபடுவதன் மூலம், அனைத்து இந்தியா வையும் ஒன்றுபடுத்தும் நிலையத்தை நிறுவுவதே அவர் நோக்க மாகும். அதற்காக அவர் பெரிதும் முயன்ருர். இந்து, முஸ்லீம், கிறித்தவர் ஆகியோர் தத்தம் சமயநெறியில் நின்று ஒழுகுவதுடன், வழிபாட்டில் ஒன்ருகச் சேர்ந்து வழிபடலாம் என்பது அவருடைய சிறப்புமிக்க நம்பிக்கையாகும். அவருடைய இந்த நம்பிக்கையை யும், சிறப்புமிக்க நோக்கையும் நாம் உணர்ந்து போற்றுவது மிகவும் அரிதாகிவிட்டது'' என்று குறிப்பிட்டுள்ளமை இங்குக் கருதத் தக்கது.

இந்த நாட்டின் மாண்புமிகு மனிதர்கள் சிலருடைய கருத்துக் களுள், சிலவற்றை மேற்கோள்களாக இங்கு நான் காட்டியுள்ளேன். பிரமசபாவின் பிற்கால வளர்ச்சியுற்ற வடிவமாகிய பிரம சமாஜம், எண்ணத்தாலோ, செயலாலோ ராம்மோகனரால் தோற்று விக்கப்பட்டதன்று. மிகவும் முக்கியமான இந்த உண்மையைத் தெளிவாகப் புலப்படுத்துவதற்கே இவ்வளவு விரிவாகப் பலருடைய

கருத்துக்களை நான் காட்டியுள்ளேன்.

பிரசன்னகுமார் தாகூர் என்பவர் ஓர் இதழை நடத்தி வந்தார். அதற்கு 'சீர்திருத்தவாதி' (Reformer) என்பது பெயராகும். அதில் 1831ஆம் ஆண்டு பிரம சபையைப் பற்றிப் பின்வரும் செய்தி வெளி வந்தது: "பிரம சபை ஒரு வேதாந்த நிலையமாகும். அது 1828இல் நிறுவப் பெற்றது. வேறு ஒத்தகருத்தும் மதிநுட்பமும் வாய்ந்த வேறு பல இந்துக்களோடு சேர்ந்து அறிவொளியும் பெரும் புகழும் வாய்ந்த நம் நாட்டவரான பாபு ராம்மோகன் ராயால் அது தொடங்கப் பெற்றது.......ஒவ்வொரு சனிக்கிழமை மாலையிலும் சித்புரி சாலையில் உள்ள, யாவரும் நன்கறிந்த ஒரு வீட்டில் அச்சபை யின் கூட்டங்கள் நடைபெற்று வந்தன. அக்கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் வேதாந்த உபதேசங்களைக் கேட்பதில், உண்மை யான ஒரே கடவுளைப்பற்றித் துதிப்பாடல்களைப் பாடுவதிலும் தங்கள் நேரத்தைக் கழித்தனர்.......இத்திருக்கோயில் உள்ளே சமயச் சடங்குகள் நடைபெற்றபொழுது கிறித்துவரும், பிற சமயத் தினரும் கலந்து கொள்ளுவதற்கு அனுமதிக்கப்பட்டனர்".

மகரிஷி தேவேந்திரநாத தாகூரால் தொடங்கப்பெற்ற 'தத்துவ போதினி' என்ற பத்திரிகையில், 1847ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில், "இந்த இடத்தில் சில நாட்களின் மாலை நேரங்களில் முஸ்லீம், கிறித்துவ சமயத்தைச் சேர்ந்த இளைஞர்கள் பாரசீக மொழியிலும், ஆங்கில மொழியிலும் இறைவனைப் போற்றி துதிப் பாடல்களைப் பாடி வந்தனர்" என்ற செய்தி வெளிவந்திருக்கிறது. அதே பத்திரிகையில் 1854ஆம் ஆண்டு, சிறப்புமிக்க எழுத்தாளரும் தேவேந்திரநாத தாகூரின் சீடர்களுள் முதன்மையானவருமான அக்ஷயகுமார தத்தர், "அவருடைய(ராம்மோகனருடைய)காலத்தில் பிரம சமாஜத்தின் ஆசாரியர்கள் உபநிடதங்களில் இருந்தும் மற்று முள்ள சமஸ்கிருத சாத்திரங்களில் இருந்தும் துதிப்பாடல்களை எடுத்து ஓதியும், பொருள்விளக்கம் செய்தும் வந்தனர். அவற்றுடன் கடவுள் வழிபாட்டையும் அவர்கள் செய்தனர். இதைப் போன்றே இந்துக்கள் அல்லாத பிற சமயத்தினரும் பிரம சாமஜத் திற்கு வந்து, தங்களுடைய சொந்த மொழியில் இறைவனின் திருப் புகழைப் போற்றிப் பாடித் தங்கள் வணக்கத்தை இறைவனுக்குத் தெரிவித்து வந்தனர்" என்று குறிப்பிட்டுள்ளார்.

இப்பிரம சபையின் பிற்காலப் பெயரே 'பிரம சமாஜமாகும்'. இது குறிப்பிட்ட ஒரு சமயத்திற்குரிய நிலையமாகத் தொடங்கப் பெற்றிருக்குமானால், பிற சமயத்தவர்கள் அங்கு வந்திருக்கமாட் டார்கள் என்பதும், அந்நிலையத்தைத் தங்கள் வழிபாட்டு இடமாகப் பயன்படுத்தி இருக்கமாட்டார்கள் என்பதும் இங்குக் கருதத் தக்கன.

ராம்மோகன் இந்தியாவைவிட்டுச் சென்ற பிறகு, அந்த

அமைப்பினை நடத்தியவர்கள் "பிரம சபையை", "பிரம சமாஜம்" என்று அழைக்கலாயினர். 1830ஆம் ஆண்டு, ராம்மோகன் இங்கிலாந்திலிருந்து தம் மகனுக்கு ஒரு துதிப்பாடலை இயற்றி அனுப்பினார். அப்பாடலைத் தாம் நிறுவியுள்ள தெய்வ வழிபாட்டு நிலையத்தில் பாடுவதற்குப் பயன்படுத்திக் கொள்ளுமாறு அவர் தெரிவித்தார். அந்தக் கடிதத்தில்தான் முதன்முதலாக, அவர் 'பிரம சமாஜம்' என்னும் தொடரைக் கையாண்டுள்ளார். ஆனால், அதே கடிதத்தில் அவர் 'பிரம சபை' என்ற பெயராலேயே அவ்வமைப்பினை முதலில் குறிப்பிட்டிருக்கிறார். பின்னரே, அதைப் "பிரம சமாஜம்" என்ற பெயரால் அவர் அழைத்துள்ளார். 'சமாஜம்' என்ற சொல், குறிப்பிட்ட ஒரு சமயப் பிரிவினைக் குறிக்கப் பயன்படுத்தப்படவில்லை என்பது இதனால் புலனாகின்றது. 'சமாஜம்' என்ற சொல்லை 'சங்கம்' என்ற பொருளிலேயே அவர் வழங்கியுள்ளார். இன்றும் இச்சொல் இதே பொருளில் பயன் படுத்தப்பட்டு வருகிறது.

எனினும், பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக பக்தியைப் பரப்பும் நிலையமாகப் பணிபுரிந்த பிரம சபை, வேதாந்தத்தின் கோட்பாடுகளை உபதேசம் செய்துவந்தது. எனவே, அப்பொழுது 'பிரம சமயம்' என்ற தனிப்பட்டதொரு சமயக் கிளை தோன்ற வில்லை. கல்வியிற் சிறந்த பண்டிதர்கள் சிலரைக் கொண்டு மகரிஷி தேவேந்திரநாத தாகூர் உபநிடதங்களில் இருந்து உயர்ந்ததும், சிறந்ததுமான சுலோகங்களைத் திரட்டி ஒரு நூலைத் தொகுத்தார். இவ்வாறு 1841ஆம் ஆண்டு பிரம சமயத்திற்குரிய முதல் நூல் இயற்றப் பெற்றது. அதே ஆண்டில் தத்துவ போதினி சபை கூட்டம் நடைபெற்றது. அதில் "வேதாந்தத்தை அடிப்படையாகக் கொண்ட சமயம், பிரமத்தின் தருமமாக மாற்றப்பெற்றது. அதற் காக ஓர் உடன்படிக்கை செய்துகொள்ளப் பெற்றது" என்ற தீர்மானம் நிறைவேற்றப் பெற்றது. இவ்வாறு ராம்மோகன் இறந்ததற்கு நெடுங்காலத்திற்குப் பின்னர், பிரம சமயமும், பிரம திருச்சபையும் தோன்றலாயிற்று.

1879ஆம் ஆண்டு ஜி. எஸ். லியோனார்டு (G. S. Leonard) என் பவர் "பிரம சமாஜத்தின் வரலாறு-தோற்றம் முதல் இறுதிவரை" என்ற நூலினை வெளியிட்டார். அதில் 'வேதாந்தக் கோட்பாட்டுச் சமயத்தை நான் தழுவுகிறேன்' என்று அவர் குறிப்பிட்டுள்ளார். 'வேதாந்தக் கோட்பாட்டுச் சமயம்' என்னும் சொற்கள் பிற்காலத் தில் சகம் 1768 (கி.பி. 1846), தை மாதம், பதினோராம் நாள் நடை பெற்ற தத்துவ போதினி சபையின் கருத்தாய்வுக் கூட்டத்தில் மாற்றப் பெற்றது. இம்மாற்றத்தைப் பற்றிய தீர்மானத்தை ராசநாராயண போஸ் முன்மொழிந்தார்; அக்ஷயகுமார தத்தர் வழிமொழிந்தார்.

1841ஆம் ஆண்டிற்கு முன்னர் பிரம சமயமோ, அதை யொட்டிப் பிரமசமயச் சடங்குகளைச் செய்வதற்குரிய விதிமுறை களோ இருந்ததில்லை. பிரம சமாஜத்தின் சடங்குகளின் விதிமுறை களுக்கு இணங்க, முதல்முதலாகப் பிரமத் திருமணம் 1861ஆம் ஆண்டு, ஜுலை 26ஆம் நாள் நடத்தப்பெற்றது.

ராம்மோகன் ராய் இந்தியாவின் கடற்கரையை விட்டுப் புறப் பட்ட உடனேயே, அவருடைய உயர்தரமான தொலைநோக்குக் காட்சியான, எல்லா இனத்தையும் சேர்ந்த ஒரே தெய்வக் கோட் பாட்டினர் அனைவரும் ஒன்றாகக் கூடி வழிபடுவதற்குரிய நிலை யத்தின் — பிரம சபையின்—நோக்கமெல்லாம் மங்கிப்போயிற்று. அவருடைய இறப்போடு, அவை பொய்யாய்ப் பழங்கதையாய் மறைந்துபோயின. அதனுடைய இடத்தைப் பிரம சமாஜம் பிடித்துக்கொண்டது. அது முதல், ஒரே தெய்வக் கோட்பாட்டில் நாட்டம் கொண்ட இந்துக்கள் மட்டும், கூடும் திருச்சபையாக அது மாற்றமுற்றது. ராம்மோகனருடைய தொலைநோக்குக் காட்சியின் சிறகுகள் வெட்டப்பெற்றமைக்கு, அக்காலத்திய வரலாற்று நிகழ்ச்சி களினால் உண்டான நெருக்கடியின் தேவைகள் ஒரு காரணமாகும். எனினும், ராம்மோகனரின் அனைத்துலக நோக்கு, குறுகிய நோக் குடையதாகக் குறைக்கப் பெற்றதை நாம் ஒப்புக்கொள்ளவேண்டி யவர்களாக இருக்கிறோம். இந்து சமயச் சார்புடைய ஒருமைக் கோட்பாட்டினரை—பிரம சபையினரை—மட்டும் கொண்ட ஒரு சமய அமைப்பு நிறுவப்பெற்றதையும் நாம் மறக்கமுடியாது. இத் தகைய புதிய வடிவத்தைக் கொடுத்ததில் முதன்மையான பங்கு கொண்டவர் மகரிஷி தேவேந்திரநாத தாகூராவார்.

இங்கிலாந்தில் ராம்மோகன்

1830ஆம் ஆண்டு, நவம்பர் பதினைந்தாம் நாள், அல்பியான் என்ற கப்பலில் ராம்மோகன் இங்கிலாந்திற்குப் புறப்பட்டார். 1831ஆம் ஆண்டு, ஏப்ரல், எட்டாம் நாள் அவர் இங்கிலாந்தைச் சென்று அடைந்தார். அவருக்கு முன்பே, அவருடைய புகழ் இங்கிலாந்தில் பரவியிருந்தது. 1816ஆம் ஆண்டில் வேதாந்தத்தைப் பற்றிய அவருடைய முதல் நூல் வெளிவந்தது. அதற்கு 'வேதாந்தத்தின் சுருக்கம்' என்பது பெயராகும். அதை இங்கி லாந்தின் "இறையியலும் பொது இலக்கியமும் பற்றிய

மாதக் களஞ்சியம்" (Monthly Repository of Theology and General Literature) என்ற இதழில் மிக விரிவாக மதிப்புரை செய்யப் பட்டிருந்தது. லிவர்பூலுக்கு அவர் வந்திருக்கின்றூர் என்ற செய்தி தெரிந்தவுடன், அப்பட்டணத்தைச் சேர்ந்த அவருடைய ஆதர வாளர்கள் அனைவருமே அவரைச் சந்தித்தனர். மெடிசீசைச் சேர்ந்த புகழ்மிக்க வரலாற்று ஆசிரியரான, வில்லியம் ராஸ்கோ (William Roscoe) அச்சமயம் படுத்த படுக்கையாக நோய்வாய்ப் பட்டிருந்தார். தம்முடைய மகன் மூலம், ராம்மோகனரைத் தம் முடைய இல்லத்திற்கு எழுந்தருளுமாறு அவர் வேண்டுகோள் விடுத்தார். ராம்மோகன் ராஸ்கோவினைச் சந்தித்து, நெடுநேரம் அளவளாவினுர். அவர்களிடையே மிகவும் நெருக்கமான நட்பு உரையாடல் நடைபெற்றது. அப்பொழுது ராஸ்கோவின் மகன் உடனிருந்தார். அச்சந்திப்பின் மறக்கமுடியாத நிகழ்ச்சிகள் சில வற்றை அவர் எழுதியுள்ளார். "இந்தப் பேட்டி என்றுமே மறக்க முடியாது......கீழைநாட்டு முறையில் வணக்கத்தைத் தெரிவித்த பிறகு, ராம்மோகன் நான் மிகுந்த மகிழ்ச்சியும் பெருமிதமும் கொள்ளுகின்றேன். ஐரோப்பாவில் மட்டும் அல்லாமல், உலகின் ஒவ்வொரு பகுதியிலும் புகழ்ப்பெறுகின்ற மனிதரைக்கண்டு அள வளாவுவதில் நான் பெருமைப்படுகிறேன்; பூரிப்பு அடைகிறேன்" என்று புன்முறுவலோடு கூறினுர். அதைக் கேட்ட ராஸ்கோ 'இத்திருநாளைக் காண்பதற்கு இன்றுவரை என்னை உயிருடன் வாழுமாறு விட்டுவைத்த கடவுளை நான் இன்று வாழ்த்துகிறேன்' என்று மகிழ்ச்சியோடு மொழிந்தார். பல ஆண்டுகளாகப் பாரிச வாயுவினுல் துன்புற்ற ராஸ்கோ, இச்சந்திப்பிற்குப் பிறகு விரைவில் இறந்துவிட்டார்.

மூவகையான நோக்கங்களைக் கருத்தில் கொண்டே, ராம் மோகன் இங்கிலாந்திற்குச் சென்றுர். முதலாவதாக, அப்பொழுது தில்லியின் அரசராக விளங்கிய இரண்டாவது அக்பரின் சார்பில் கிரேட் பிரிட்டனின் அரசரிடத்து, ஒரு விண்ணப்பத்தை அளிப்பதற் காக அவர் இங்கிலாந்திற்குச் சென்றுர். 'சதி' என்னும் உடன் கட்டை ஏறும் கொடிய வழக்கத்தை ஒழித்துவிட்ட இங்கிலாந்து பாராளுமன்றத்தின் மக்கள் சபையினருக்கு, நன்றி தெரிவிக்கும் வகையில் நினைவுச்சின்னம் ஒன்றை அளிப்பதற்கு அவர் இங்கி லாந்திற்குப் போனுர். மூன்றுவதாக மக்கள் சபையில் கிழக்கு இந்தியக் கம்பெனியின் பட்டயம் புதுப்பிக்கப் பெறுவதைப்பற்றி நடக்கும் வாதங்களை நேரில் கேட்க, அவர் இங்கிலாந்திற்குச் சென்றுர். சீர்திருத்த மசோதாவின் இரண்டாவது ஆய்வினை மக்கள் சபை மேற்கொண்டதை அறிந்தவுடன், காலம் தாழ்த்தாது அவர் லிவர்பூலில் இருந்து நேரடியாக லண்டன் மாநகருக்குச் சென்று சேர்ந்தார். அவர் இரவு நெடுநேரமான பிறகு

லண்டனை அடைந்தார். களைப்புற்றிருந்தமையால் அவர் உறங்கச் சென்றுவிட்டார். அச் சமயத்தில், சிறப்புமிக்க பிரிட்டிஷ் தத்துவ ஞானி ஜெர்மி பென்த்தாம் (Jeremy Bentham) அவரைக் காண வந்தார். ஓய்வெடுத்துக் கொண்டிருந்த ராம்மோகனருக்குத் தொல்லைக் கொடுக்க அவ்வறிஞர் விரும்பவில்லை. அதனால், அவர் ஒரு குறிப்பினை எழுதி வைத்துவிட்டுச் சென்றார். அதில் "தம்முடைய நண்பர் ராம்மோகனருக்கு ஜெர்மி பென்த்தாம் எழுதியது" என்று அவர் குறிப்பிட்டிருந்தார். பென்த்தாம், ராம்மோகனரை மிகுந்த அன்போடு நேசித்தார். மற்றொரு முறை ராம்மோகனரை "மிகச் சிறப்பாகப் போற்றப்பெறுபவரும், மிக்க அன்புடன் நேசிக்கப்படுபவரும், மனித இனத்திற்குப் பணிபுரியும் தொண்டருமான ராம்மோகனர் என்னும் என் தோழரே!" என்று அவர் அறிவித்துள்ளார்.

இங்கிலாந்திற்குச் சென்ற உடனேயே, தில்லியின் பேரரசர் சார்பில் அவர் செயலாற்றத் தொடங்கினார். தில்லியின் பேரரசர் தம்முடைய உரிமைகளைப் பற்றிக் கொடுத்த நினைவுக்குறிப்பைக் கிழக்கு இந்தியக் கம்பெனியின் நீதிமன்றத்து இயக்குநர்களிடம் அவர் அளித்தார். அத்துடன் லண்டனிலிருந்த செல்வாக்குமிக்க மனிதர்கள் பலரிடத்து அதன் படிகளை அவர் கொடுத்தார். தில்லிப் பேரரசர் வேண்டிய, உரிமைகள் அனைத்தையும் இங்கிலாந்தின் அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. எனினும், 1833ஆம் ஆண்டு, பிப்பிரவரி பதினெட்டாம் நாள், தில்லிப் பேரரசருக்கு அளித்து வந்த ஆண்டு உதவித் தொகையை உயர்த்துவதற்குக் கம்பெனி இயக்குநர்கள் இசைந்தனர். உடனடியாக, மூன்று இலட்சம் ரூபாயை அதிகத் தொகையாக அளிக்க அவர்கள் அனுமதி அளித்தனர்.

இங்கிலாந்தின் சிறப்புமிக்க மனிதர்களைச் சந்திப்பதில் ராம்மோகனர் பேரீடுபாடு கொண்டிருந்தார். அதனால், லண்டன் மாநகரிலிருந்த பெரிய மனிதர்களைச் சந்திப்பதில் அவர் மிக மும்முரமாக ஈடுபட்டிருந்தார். அவ்வாறு தாம் சந்தித்த பெருமக்களோடு, அரசியல் பற்றிய கலந்துரையாடல்களையும் அவர் நடத்தினார். இங்கிலாந்து அரசரின் உடன் பிறந்தவர் கம்பர்லாந்து கோமகன் என்பவராவர். அவர் ராம்மோகனரைப் பிரபுக்கள் சபையில் அறிமுகப்படுத்தி வைத்தார். ஜேம்ஸ் சதர்லாந்து எழுதிவைத்துள்ள குறிப்புக்களினால் 'இந்திய ஜூரிகளின் மசோதா'விற்கு எதிராக வாக்களிக்க டோரிக் கட்சியைச் சேர்ந்த பிரபுக்கள் விரும்பினர் என்றும், ஆனால், ராஜா ராம்மோகன்ராய் வேண்டிக்கொண்டதன் பேரில், அவர்கள் அதற்கு ஆதரவாக வாக்களித்தனர் என்றும் தெரியவருகிறது. அடிமை முறையை அடியோடு ஒழிக்கவேண்டும் என்பதன் தலைமை ஆதரவாளரும், மக்கள் அனைவருக்கும் கல்வி

யளிக்க வேண்டும் என்ற கொள்கையைச் சிறப்புமிக்க முறையில் பரப்பி வந்தவருமான பிரௌகாம் பிரபு (Brougham) வோடு ராம்மோகன் மிக நெருக்கமான நட்புறவை வளர்த்துக் கொண்டார். 1831ஆம் ஆண்டு, கிழக்கு இந்தியக் கம்பெனி இயக்குநர்கள் அவருக்கு லண்டன் மாநகர உணவு விடுதியில் ஒரு விருந்தளித்தனர். கிழக்கு இந்தியக் கம்பெனி இயக்குநர் குழுவின் தலைவர், அவ்விருந்திற்குத் தலைமை தாங்கினார். அவ்விழாவில் இந்திய சமூகத்திற்குப் பேரளவில் பணிகள் பலவற்றை ராம்மோகன் ஆற்றியிருப்பதைப் பாராட்டினர். இத்தகைய சிறப்புடையவர் பன்னெடுங்காலம் வாழ வேண்டும் என்று விருந்தின் தலைவர் வாழ்த்தினார். அச்சமயத்தில் நான்காவது வில்லியத்திற்கு முடிசூட்டு விழா நடைபெற்றது. அவ் விழாவிற்கு ஐரோப்பாவின் அரசர்களும், அரசியல் தூதர்களும் மிகப் பலராக வந்திருந்தனர். அவர்களுடைய இருக்கைகளுக்கு இடையில் ராம்மோகனருக்கு இடமளித்து, விழாவைக் காண பிரிட்டனுடைய அரசினர் ஏற்பாடு செய்திருந்தனர். லண்டனில் உள்ள வேத்தியல் ஆசிய சங்கம் (Royal Asiatic Society) தன்னுடைய ஆண்டு விழாவில் கலந்துகொள்ளுமாறு, ராம்மோகனருக்கு அழைப்பு விடுத்தது. அவ்விழாவின் இறுதியில், உலகறிந்த கீழ்த்திசைக் கலை வல்லுநரான ஹென்றி தாமஸ் கோல்புரூக்கிற்கு அச்சங்கத்தின் சார்பில் ராஜா ராம் நன்றி தெரிவித்தார். மனிதநலக் கோட்பாட்டு சோசலிஸ்டான ராபர்ட் ஓவனை (Robert Owen)யும் மோகன் ராய் சந்தித்தார். அப்பெரியார் ராம்மோகனரைத் தம்முடைய சோசலிசத்தைத் தழுவுமாறு செய்வதற்குப் பெருமுயற்சி செய்தார்.

ராம்மோகன் இங்கிலாந்திற்குச் சென்றபொழுது, சீர்திருத்த மசோதா காரணமாக அதன் அரசியல் வாழ்க்கை நடுக்கம் கண்டிருந்தது. 1831ஆம் ஆண்டில், பாராளுமன்றத்தில் அறிமுகப் படுத்தப்பெற்ற அம் மசோதா, குழு ஆய்வுநிலையிலேயே தோற்கடிக்கப்பட்டுவிட்டது. இத்தோல்வியின் விளைவாகப் பாராளுமன்றம் கலைக்கப்பெற்றது. 1831ஆம் ஆண்டு, செப்டம்பர் 26ஆம் நாள், இரண்டாவது சீர்திருத்த மசோதா புதிய மக்கள் சபையால் ஏற்றுக்கொள்ளப்பெற்றது. ஆனால், அக்டோபர் மாதத்தில் பிரபுக்கள் சபையால் அது வீசி எறியப்பட்டது. மூன்றாவது சீர்திருத்த மசோதா 1832ஆம் ஆண்டு, மார்ச்சு மாதத்தில் மக்கள் சபையில் நிறைவேற்றப் பெற்றது. பின்னர், அது பிரபுக்கள் சபைக்கு அனுப்பப்பெற்றது. ராம்மோகனர் இங்கிலாந்திற்குச் சென்ற சமயத்தில், அது பிரபுக்கள் சபைக்கு அனுப்பப்பெற்றிருந்தது. இங்கிலாந்துநாட்டு மக்கள் பெரிய கிளர்ச்சியில் ஈடுபட்டிருந்தனர். 'கிளர்ச்சி எனும் காய்ச்சலால் நடுங்கிக்கொண்டிருந்த' அவர்கள், பிரபுக்களின் முடிவினை அச்சம் கலந்த ஆவலோடு எதிர்நோக்கிக் கொண்டிருந்தனர். இச்சமயம், பொதுமக்களின்

வற்புறுத்தலுக்குப் பிரபுக்கள் இணக்கம் தெரிவித்தனர். அதனால், சீர்திருத்த மசோதா 1832ஆம் ஆண்டு, ஜூன் மாதத்தில் சட்டமாக்கப்பெற்றது. இதைப்போன்ற சட்டங்கள் அயர்லாந்திற்கும், ஸ்காட்லாந்திற்கும் இயற்றப்பெற்றன. சீர்திருத்த மசோதா சட்டமாக்கப்பெற்றது குறித்து ராம்மோகன் பெரு மகிழ்ச்சியுற்றார். அதைப்பற்றி வில்லியம் ரத்போனிற்கு அவர் எழுதிய கடிதத்தால் இதை நாம் அறிகிறோம். அக்கடிதத்தின் வாசகங்கள் சில முன்னரே மேற்கோளாகக் காட்டப்பட்டன.

சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம் ஆகிய மனித உரிமைகளுக்காக ஆர்வத்தோடு குரல்கொடுத்த நாடு பிரான்சு. அதனிடத்து ராம்மோகனருக்குப் பேரீடுபாடும் காதலும் உண்டாகியிருந்தன. அந்நாட்டை, 'கலைகளையும் அறிவியலையும் வளர்ப்பதன் மூலம் கவர்ச்சிமிகு அழகுடன் விளங்குவது ; எல்லாவற்றையும்விட உரிமை மிகு அரசியல் அமைப்பினைப் பெற்று விளங்கும் நற்பேறுடைய நாடு' என்று அவர் போற்றிப் பாராட்டியுள்ளார். 1818ஆம் ஆண்டு அளவிலேயே, ராம்மோகனரின் நூல்கள் பிரான்சிற்கு அறிமுகமாகியிருந்தன. எனவே, பிரான்சின் அறிவு நலங்கனிந்த பண்பாட்டுக் குழுவினருக்கு அவருடைய பெயர், நன்கு பழகிய ஒன்றாக இருந்தது. கல்கத்தா டைம்ஸின், ஆசிரியரான டெ'காஸ்டா (D' Acosta), பிளாய்சின் பிஷப்பான அபே கிரிகோரிக்கு, ராஜா ராமின் தத்துவ ஆராய்ச்சி வெளியீடுகள் சிலவற்றை அனுப்பி வைத்திருந்தார். அப்பாதிரியார் மூலம், பிரான்சின் அறிஞர் உலகத்திற்கு ராம்மோகன் நன்கு அறிமுகமாயிருந்தார். ராம்மோகனரைப் பாராட்டும் வகையில், அவர்கள் ஒரு மலரை வெளியிட்டனர். அதில் அப்பாதிரியார், " தம்முடைய எழுத்துக்களைக் கடுமையாகத் தாக்கினாலும் அதைத் தண்மையாக எதிர்க்கும் திறனும், அவருடைய வாதத்தின் ஆற்றலும், இந்துக்களின் புனித நூல்களில் அவர் கொண்டுள்ள ஆழ்ந்த அறிவும் அவர் மேற்கொண்டுள்ள பணிக்கு மிகுந்த தகுதியுடையவர் என்பதை மெய்ப்பிக்கின்றன ; அவர் பணத்தைப் பெரிதாகக் கருதாமல், தியாகங்கள் பலவற்றைச் செய்துள்ளார். அதை நோக்குகின்றபொழுது மிகவும் மகிழ்ச்சியோடு போற்றவோ, பாராட்டவோ முடியாத, ஒருவகையான பற்றற்ற மனநிலையை உடையவர் அவர் என்பது புலனாகின்றது " என்று சிறப்பாக எழுதியுள்ளார்.

1824ஆம் ஆண்டு, ஜூன் மாதம் 7ஆம் நாள் கூடிய ஆசிய சங்கத் (Society Asiatique) தின் கூட்டத்தில், யாரை இந்திய இணை-எழுத்தாண்மைத் தொழிற்பேராளராக நியமிப்பது என்ற ஆய்வு நடைபெற்றது. அப்பொழுது, மான்சியர் லி காம்டே-டி ஹாடௌரன் என்பவரும், பேரன் டி சேசி என்பவரும் பண்டித ராம்மோகன் ராயின் பேரினைப் பரிந்துரைத்தனர். இப்பரிந்துரை ஓர் ஆணைக்குழுவிற்கு

அனுப்பப்பெற்றது. அக்குழுவில் திரு. லஞ்சுனியஸ், திரு. பர்னும், திரு. கலாபுரோத் என்ற மூவரும் உறுப்பினர்களாக இருந்தனர். 1824ஆம் ஆண்டு, ஜூலை 5ஆம் நாள் அக்குழுவின் சார்பில் திரு. கலாபுரோத் ஓர் ஆய்வு அறிக்கையை அனுப்பினார். அதில் பண்டித ராம்மோகனரின் இலக்கியப் பட்டங்களையும், புலமையையும் அவர் போற்றிப் பாராட்டி இருந்தார். அத்துடன், இணை-எழுத்தாண்மைத் தொழிற் பேராளராக ராம்மோகனரை நியமிக்குமாறு அவர் பரிந்துரைத்திருந்தார். அச்சங்கத்தின் ஆய்வுக்குழுக் கூட்டத்தின் முன், இந்த ஆய்வு அறிக்கையின் முடிவுகள் வைக்கப் பெற்றன. 'இணை-எழுத்தாண்மைத் தொழிற் பேராளர்' என்ற பட்டத்தை ராம்மோகனருக்கு அக்கூட்டத்தில் சூட்டினர் என்று நாம் அறிகிறோம். இந்தியாவும் உலகமும், (India and the World) என்ற இதழின் 1933ஆம் ஆண்டு, திசம்பர் திங்கள் வெளியீட்டில் திருமதி மோரின் (Morin) எழுதியுள்ள கட்டுரையால், இதை நாம் அறிகிறோம்.

இப்பட்டத்தை ராம்மோகன் ராயிடம் நேரில் சென்று வழங்கும் பொறுப்பு, ஓய்வு பெற்ற ஆங்கிலேய அதிகாரியான திரு. லாக்லன் (Lachlan) என்பவரிடம் ஒப்படைக்கப்பெற்றது. 'ரெவியூ என்ஸ்சைக் குலோபியாடிக்' (பாரிஸ்) என்ற இதழின், 1924ஆம் ஆண்டு வெளியீட்டில், சிஸ் மாண்டி (Sismondi) என்பவர், "ராம்மோகன் ஒரு பிராமணர். அவரை அறிந்தவர்கள் இந்தியாவின் சிறப்புமிக்க அறவோர்களுக்கும் ஞானிகளுக்கும் பிரதிநிதியாக விளங்குபவர் ராம்மோகன் என்பதை ஒப்புக்கொள்ளுவார்கள். உண்மையான, ஒரே தெய்வத்தை வழிபடும் நெறிக்குத் தம்முடைய நாட்டுமக்களை அழைத்துச் செல்ல அவர் அரும்பாடுபடுகிறார்; மேலும் ஒழுக்கமும் சமயமும் இணைந்த வாழ்க்கை நெறியை மேற்கொள்ளுமாறு அவர் தூண்டி வருகிறார்......" என்று எழுதியுள்ளார்.

1832ஆம் ஆண்டு, அக்டோபர் மாதம் 14ஆம் நாள், ராம்மோகனர் பிரெஞ்சு நாட்டு அரசரைக் கண்டு அளவளாவினார். அதே ஆண்டு, திசம்பர் மாதத்தில், ராம்மோகனருடைய நூல்களின் பல்வேறு இயல்புகளை, மிக விரிவாக விளக்கியுரைக்கும் ஆய்வுக் கட்டுரை ஒன்றைப் பாரிஸ் மாநகரில், திரு. பௌத்தியர் (Pauthier) வெளியிட்டார்.

காலப்போக்கில் தில்லிப் பேரரசரின் தனிச்சிறப்பு வாய்ந்த தூதராக ராம்மோகனரைப் பிரிட்டிஷ் அரசு ஏற்றுக்கொண்டது. தில்லிப் பேரரசர், ராம்மோகனருக்கு அளித்துப் பாராட்டிய "ராஜா" என்ற பட்டப்பெயரையும் அது ஒப்புக்கொண்டது. செயின்ட் ஜேம்ஸ் அரண்மனையில் கூடிய அரசவைக் கூட்டத்தில் நான்காம் வில்லியம் அரசரை, 1831ஆம் ஆண்டு, செப்டம்பர் ஏழாம் நாள் ராம்மோகன் சந்தித்தார். பின்னர் லண்டன்மாநகரப்

பாலத்திறப்பு விழாவை யொட்டி ஏற்பாடு செய்யப்பெற்ற விருந்திற்கு, ராம்மோகனரை அரசர் அழைத்திருந்தார். ஆங்கிலேய சமூகத்தின் மிகவுயர்ந்த நிலைக்குழுக்களின் உறுப்பினர்களுள் ஒருவராக அவர் ஏற்றுக்கொள்ளப்பட்டார். அவரைப் பாராட்டிப் போற்றுவதற்காக லண்டனில் எண்ணற்ற வரவேற்புகளும் விருந்துகளும் அளிக்கப்பெற்றன. அவற்றில் சீரும் சிறப்புமிக்க அறிஞர்களும், பெருந்தகையாளரும், பெருங்குடி மக்களும் கலந்துகொண்டனர். அவர்களுள் முதன்மையானவர் ஜெரிமி பென்த்தாம். பிரிட்டிஷ் ஒருமைக் கோட்பாட்டுச் சங்கத்தினர் ஒரு விழாவிற்கு ஏற்பாடு செய்திருந்தனர். ஜெரிமி பென்த்தாமுடைய வாழ்க்கை வரலாற்று ஆசிரியரான டாக்டர் பௌரிங்கு, அவ்விழாவில் வரவேற்புரை நிகழ்த்திஞர். அவர் ராம்மோகனரை, " அவருடைய வருகையால் நம்முடைய உள்ளங்கள் எல்லாம் மகிழ்ச்சிக் கடலுள் மூழ்கித் திளைக்கின்றன. அவரிடத்து நாம் கொண்ட அன்பாலும் ஈடுபாட்டாலும் உண்டான உணர்ச்சிக் கனிவை, சொற்களால் எடுத்துரைக்க நம்மால் இயலாது. காலத்தால் கறைபடாது, கருத்தால் பொலிவு குன்ருது பொன்ருப் புகழ் எய்திய அறிஞர்கள் திடீரெனத் தங்களிடையில் தோன்றுவார்களாஞல், தங்களுடைய நிலை எவ்வாறு இருக்கும் என்பதைப் பற்றிச் சிலர் ஆராய்ந்ததை என்னுல் நினைவுகூர முடிகிறது. பிளேட்டோ அல்லது சாக்ரடிஸ் அல்லது மில்டன் அல்லது நியூட்டன் முதலியோர் திடீரென்று வருகைதந்து தங்களைச் சிறப்பிப்பார்களாஞல், தங்களுடைய மனவெழுச்சி எவ்வாறு இருக்கும் என்பதைக் கற்பனை செய்து பார்க்கும் துணிச்சல் கொண்டவர்கள் உண்டு..... அவர்கள் உள்ளத்தில் எத்தகைய உணர்ச்சிப் பெருக்கு உண்டாகுமோ, அத்தகைய உணர்ச்சிகளை ராஜாராம் மோகன்ராயை வரவேற்றபொழுது நான் அடைந்தேன். இடத் தொலைவின் விளைவு, காலத் தொலைவின் விளைவு ஆகிய இரண்டும் ஒன்றுபோலவே தோன்றுகிறது. பல ஆயிரம் கற்களுக்கு அப்பால் உள்ள நாட்டிலிருந்து வந்து, நம்மிடையே கலந்து அளவளாவும் அவரை, நாம் ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த புகழ்பெற்ற பேரறிவாளர்களுக்கு ஒப்பாக வைத்து ஆர்வத்தோடு போற்றிப் பாராட்டவேண்டும் " என்று மொழிந்துள்ளார்.

இவ்வரவேற்பில், அமெரிக்க ஐக்கிய நாட்டிலுள்ள ஹார்வார்டு பல்கலைக் கழகத்தின் ஓய்வுபெற்ற தலைவர் டாக்டர் கிர்க்லாந்து கலந்துகொண்டார். " ராஜா அமெரிக்க மக்களுடைய அன்புகனிந்த உள்ளத்தைக் கவர்ந்துள்ளவராவார். அவருடைய வருகையை அமெரிக்க மக்கள் பற்றுர்வத்தோடு எதிர்நோக்கிய வண்ணம் உள்ளனர் " என்று அவர் குறிப்பிட்டுள்ளார். அக்கூட்டத்தில் கலந்துகொண்ட தவத்திரு. W. G. பாக்ஸ் என்ற பாதிரியார் ராம்மோகனரின் அருமைபெருமைகளைப் பாராட்டிச் சிறப்

பாகப் பேசினுர். இந்தப் பாராட்டு விழாவின் நிறைவு கட்டத்தில் ராம்மோகன் தம்முடைய நன்றியுரையை நவின்றுர். அவ்வுரை பின் வரும் வாசகத்தோடு நிறைவுற்றது: ''பகுத்தறிவிற்கும் புனித மறைகளுக்கும் இடையேயும், பொது அறிவிற்கும் செல்வத்திற்கும் இடையேயும், அதிகாரத்திற்கும் தப்பெண்ணங்களுக்கும் இடையே யும் நாட்டிலே போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த மூன்றும், மற்ற மூன்றை எதிர்த்துப் போரிடுகின்றன. ஆனுல், நீங்கள் விரைவிலோ, சிறிது காலங்கடந்தோ வெற்றியடையப் போவது உறுதி என்பது எனக்குத் தோன்றுகிறது......நீங்கள் எனக்கு அடிக்கடி செய்துவரும் பாராட்டுதலையும் மதிப்பையும்...... என்னுடைய இறுதிமூச்சு உள்ளளவும் நான் மறக்கவேமாட்டேன்.''

ராம்மோகனர் நோய்நொடியற்ற நலமான உடல் உடையவ ராகத்தான் இருந்தார். ஆனுல், பொருள் இழப்பால் உண்டான கவலைகளும், அதிகப்படியாக உழைத்தமையால் உண்டான உடல் சோர்வும் சேர்ந்து, அவருடைய உடல்நலத்தைப் பெரிதும் பாதித்து விட்டன. கல்கத்தாவில் இருந்த மேக்கின்தோஷ் அண்டு கம்பெனி என்ற பாங்கிலும், அதன் கிளையாக லண்டனிலிருந்த ரிக்கார்ட்ஸ் மேக்கின்தோஷ் அண்டு கம்பெனி என்ற பாங்கிலும் தம்முடைய சேமிப்புத் தொகைகளை அவர் போட்டிருந்தார். அவர் லண்டனி லிருந்தபொழுது அப்பாங்குகள் திவாலாகிவிட்டன. அதனுல், அவர் மனம் உடைந்துபோனுர். சில நாட்கள், லண்டனைவிட்டு பிரிஸ்ட லுககுச் சென்று ஓய்வு எடுத்துக்கொள்ளுமாறு அவருடைய நண்பர்கள் அவரை வேண்டிக்கொண்டனர். **1833**ஆம் ஆண்டு, செப்டம்பர் மாதத்தின் தொடக்கத்தில் அவர் பிரிஸ்டலுக்குச் சென்று, செல்வி காசில் (Castle) என்பவருடைய வீட்டில் தங்கலானுர். பிரிஸ்டலில் இருந்த லெவினுடைய மீட் தொழுகைக் கோயிலின் மதகுரு அவருக்கு நண்பராவார். அந்த நண்பரின் பாது காப்பிலேயே செல்வி காசில் வளர்ந்து வந்தார். இதனுல், ராம் மோகனர் அந்தப் பெண் வீட்டில் தங்கி, ஓய்வு எடுத்துக்கொள்ள முயன்றுர். நண்பர்களிடையே அளவளாவும்பொழுது அவர் பெரிதும் கவலை குறைந்து புத்துணர்ச்சி பெற்றிருந்தார். ஆனுல், செப்டம்பர் மாதம் **19**ஆம் நாள், எதிர்பாரா வகையில் அவர் நோய்வாய்ப்பட்டார். கொடிய தலைவலியோடு, கடுமையான காய்ச்சலுக்கு அவர் ஆளானுர். சில நாட்களுக்குள் அவருடைய நிலை மிகவும் கவலைக்கிடமாகியது. டேவிட் ஹேரின் உடன்பிறப்பான செல்வி ஹேர், அச்சமயத்தில் அவருக்குப் பணிவிடை செய்து வந்தார். சிறப்புமிக்க மருத்துவர்கள் பலர் அவரைக் கண்காணித்து வந்தனர். ஆனுல், எம்முயற்சியும் பயனளிக்காமல் போயிற்று. **1833**ஆம் ஆண்டு, செப்டம்பர் **23**ஆம் நாள் ராம்மோகன் ராய் உயிர்நீத்தார்.

டாக்டர் எஸ்டிலின் (Estlin) என்ற மருத்துவர், நோய்வாய்ப் பட்டிருந்த ராம்மோகனரைக் கண்காணித்து வந்தார். ராஜா ராம் மோகன் ராயின் கடைசி நேரத்தைப்பற்றி அம்மருத்துவர், "அவ்விரவு நிலவொளி படர்ந்த அழகியதோர் இரவாகும். ஒரு பக்கத்து சன்னலின் அருகே திரு. ஹேரும், செல்வி கிட்டலும், நானும் இருந்தோம். நான் சன்னலுக்கு வெளியே ஒளிமயமான அவ்விரவினைக் கூர்ந்து நோக்கிக்கொண்டிருந்தேன். அமைதியான நாட்டுப்புறச் சூழல் நிறைந்திருந்த நள்ளிரவு நேரம் அது—மற்றொரு சன்னலின் பக்கம் இத்தனிச்சிறப்பு வாய்ந்த மனிதர் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தார். அக்கணப்பொழுதை என்னால் என்றுமே மறக்க இயலாது. அப்பொழுது நம்பிக்கையிழந்த செல்வி ஹேர், துன்பத்தைத் தாங்கமுடியாது அழத் தொடங்கினாள். அவருக்கு உணவை ஊட்டியும், பரிவோடு பணிவிடை செய்தும் வந்த அவளால், மனவுறுதியோடு அக்காட்சியைக் காண இயல வில்லை. அவளுடைய நம்பிக்கையெல்லாம் பறந்தோடிப் போயிற்று. எனவே, அருகிலிருந்த நாற்காலியில் அமர்ந்திருந்த அவள் விம்மி விம்மி அழலானாள். ......இரண்டரை மணியளவில் திரு. ஹேர் என்னுடைய அறைக்கு வந்து 'எல்லாம் முடிந்துவிட்டது' என்று தழுதழுத்த குரலில் தெரிவித்தார். ராம்மோகனரின் இறுதிமூச்சு 2 மணி 25 நிமிட அளவில் நின்றுபோய்விட்டது" என்று அவர் எழுதியுள்ளமை நம்முடைய உள்ளத்தை இன்றும் நெகிழச் செய்கிறது. செல்வி கலெக்ட் (Collect) என்பார், "அவர் கடைசி யாக முணுமுணுத்த சொற்கள், புனித மந்திரமான 'ஓம்' என்பதாகும். சாவின் வாயிலில் தனிமையில் நின்றபொழுதும், வாழ்க்கை யெனும் நெரிசலான நெடுஞ்சாலையில் உழன்றபொழுதும், அவருடைய ஆன்மாவின் முதன்மைச் செயலாக அவர் அதைச் சொல்லி வந்தார். இந்நிகழ்ச்சி அவருடைய உள்ளம் எப்பொழுதும் கடவுளைத் தியானிப்பதில் தோய்ந்திருந்ததைப் புலப்படுத்துகிறது" என்று குறிப்பிட்டுள்ளார்.

1833ஆம் ஆண்டு, அக்டோபர் 18ஆம் நாள் ஸ்டேபில்டன் சோலையில் அவர் அடக்கம் செய்யப்பெற்றார். அப்பொழுது அங்கி ருந்தவர்களுள் மேரி கார்பெண்ட்டர் என்னும் அம்மையார் ஒருவ ராவர். நெஞ்சை நெகிழ்விக்கும் அந்தச் சோகக் காட்சியை "எல்லா ஏற்பாடுகளும் சிறப்பாகச் செய்யப் பெற்றிருந்தன. ஹேரின் குடும்பத்தினர் லண்டனிலிருந்து வந்திருந்தனர். அந்தச் சோலைக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தவர்கள் அனைவரும் எவ்வகையிலேனும் நேரடியாக ராஜாவோடு தொடர்புடையவர் களாக இருந்தனர். செல்வி காசிலின் பாதுகாவலரும் ஹேரின் குடும்பத்தினரும் அவருடன் மிகவும் நெருக்கமான தொடர்புடைய வர்களாவர். திரு. ஹேரின் உடன்பிறந்தாளின் மகள் ராம்மோக

னரின் கடைசி நாட்களில் அவருடைய மகளைப்போன்று பணிவிடை புரிந்தவளாவாள். அவளும் அங்கு வந்திருந்தாள். ராஜா ராம் மோகன் ராயின் வளர்ப்பு மகனுகிய சிறுவன் ராஜாராமும் பிராமண வேலையாட்களும் வந்திருந்தனர். மேலும், அவருக்கு மருத்துவ உதவி யளித்த திரு. எஸ்டிலின், வணங்கத்தக்க தம் தாயோடும், சிறு பெண்ணுன தம் மகளோடும் வந்திருந்தார். டாக்டர் ஜெரார்ட், பெரிதும் போற்றப்பட்ட ஜான் பாஸ்டர் (Foster) ஆகியோரும் அங்கு வந்திருந்தனர். என்னுடைய தந்தையும் நானும் சென்றிருந்தோம். நண்பகற்பொழுது கழிந்தவுடன், அந்த மாண்புமிகு ஆன்மாவின் உடல் வைக்கப்பட்டிருந்த பெட்டியை, ஆழ்ந்த அமைதியோடு மெல்ல இடுகாட்டை நோக்கி வேலையாட்கள் எடுத்துச் சென்றனர். நிலவுலகில் மிக அண்மைக் காலத்தில் அவருக்கு நண்பர்களான மக்கள், அவர்களைத் தொடர்ந்து துயருறும் கோலத்தோடு சோகமே வடிவமாகச் சென்றனர். பெட்டியைத் தூக்கிச் சென்றவர்கள் பையப்பைய நடந்தனர். ராம்மோகனரின் திருவடிகள் பலமுறை பட்டுப் பழகிய அச்சோலையின் உள்ளே, அவருடைய பொன்னுடலைக் கொண்டு சென்றனர். அவர் மீளா ஓய்வு கொள்ளுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்ட இடத்தில், தாங்கள் சுமந்துகொண்டு வந்த புனிதச் சுமையை அவ்வேலையாட்கள் அடக்கம் செய்தனர். ஒவ்வொருவர் உள்ளத்திலும் பொங்கி எழுந்த ஆழ்ந்த சிந்தனைகளை ஒரு குரல்கூட வெளிக்காட்டுவதற்குத் துணியவில்லை. 'அத்தகைய சவ அடக்கத்திற்குப் பின்னர் யாரால்தான் பேசமுடியும்?' என்று ஜான் பாஸ்டர் (Foster) கண்கலங்கிய நிலையில் கூறினர்'' என்று அவ்வம்மையார் ஏட்டில் பதிவு செய்துள்ளார்.

பல ஆண்டுகளுக்குப் பிறகு, 1842ஆம் ஆண்டு ராம்மோகனரின் நண்பரும், சீடருமான துவாரகநாத தாகூர் இங்கிலாந்திற்கு வந்திருந்தார். அவர், ஸ்டேபில்டன் சோலையிலிருந்து ராம்மோகனரின் பிணப்பெட்டியைப் பிரிஸ்டல் நகரின் புறத்தே இருந்த ஆர்னேவின் வேலே (Arno's Vale) என்ற இடத்திற்குக் கொண்டு சென்றார். அங்கு 1843ஆம் ஆண்டு, மே மாதம் 29ஆம் நாள், ராம்மோகனரின் திருவுடல் அடக்கம் செய்யப்பெற்றது. அதன்மீது இந்தியக் கலைப்பாணியில் அழகுமிக்க சமாதி ஒன்று 1844ஆம் ஆண்டு கட்டப்பெற்றது.

ராம்மோகனரின் கருத்துத் தாக்குதல்

அவருடைய வரலாற்றை ஆங்கிலத்தில் சோபியா டாப்சன் கோலட் என்பவர் எழுதியுள்ளார். ராம்மோகனரை வெளிநாட்டில் வியந்து பாராட்டியவர் பலராவர். அவர்களுடைய உள்ளத்தில் ஆழப்பதியுமாறு செய்திருந்த எண்ணங்களையும் கருத்துக்களையும் சுருக்கமாக சோபியா அம்மை வரைந்துள்ளமை இங்குக் குறிப்பிடத் தக்கது : "ராம்மோகன், வரலாற்றில் உயிருள்ள ஓர் இணைப்புப் பாலமாக விளங்குகிறார். அளவிட்டுக் கூற இயலாத தொன்மைச் சிறப்பும் பண்பாட்டு வளமும் வாய்ந்த இந்தியா, எதிர்காலத்தை நோக்கி அப்பாலத்தின்மீது அணிவகுத்துச் செல்லுகிறது. பழைய சாதிக் கொடுமைகளுக்கும் புதிய மனித இனத்திற்கும், மூடப்பழக்க வழக்கங்களுக்கும அறிவியலுக்கும், எதேச்சாதிகாரத்திற்கும் ஜன நாயகத்திற்கும், இறுகிப்போன பழக்கவழக்கங்களுக்கும், பழமைப் பற்றுமிக்க முன்னேற்றத்திற்கும்......பல கடவுள் கொள்கைக்கும் ஒரே கடவுள் கொள்கைக்கும் இடையே உண்டான பெரும் பிரிவினையும் பிறவினையும் இணைக்கும் வழிமுகடாக அவர் விளங்கினார். தம்முடைய மக்களுக்கு இடையே அவர் நடுவராகத் திகழ்ந்தார். அடிக்கடி தம்முடைய தனிமைத் துன்பத்தினாலே நினைவுக்கு எட்டாத காலம் முதல் இருந்துவரும் மரபுகளுக்கும், தவிர்க்கமுடியாத அறிவொளிக்கும் இடையே முரண்பட்ட பூசலிடும் இயல்புகளையெல்லாம் தம்முள் தாமே இணங்கிப் போகுமாறு மாற்றியும், திருத்தியும் அவர் அமைத்துக்கொண்டார். பல்வேறு இனங்களும், சமயங்களும் நாகரிகங்களும் கட்டாயமாகக் கலப்பதனால் உண்டாகும் புதிய தோர் எழுச்சியின் திருவுருவமாக அவர் விளங்கினார். எதையும் ஆராயும் உரிமை வேட்கையையும், அறிவியலிடத்துக் கொண்ட பேரீடுபாட்டையும், மனித இனத்திடத்து அளவில்லாப் பரிவு இரக்கத்தையும் உடையவராக அவர் வாழ்ந்தார். தூய்மையும் நுட்பமும் தோன்றுமாறு ஆராயப்பெறும் ஒழுக்கவியல் நெறியில் அவர் நின்று ஒழுகினார். ஆனால், குற்றங்காணாது கடந்த காலத்தை மதித்துப் போற்றும் மதிப்புணர்ச்சியும், முன்மதியும்......புரட்சி செய்ய விரும்பாத மனநிலையும் கொண்ட மாபெரும் மனிதராக அவர் திகழ்ந்தார். நாம் ராம்மோகனரின் வாழ்க்கையில் ஓர் உண்மையைக் காணுகின்றோம். இதுவரை இந்தியாவின் முன்னேற்

றத்தில் நமக்குச் சுட்டிக் காட்டப்பெறும் பண்பாக இருந்துவருவது சமயம். இந்தியாவின் ஒவ்வொரு செயலிலும் மறைபொருளாக இருந்துவருவது சமய உணர்வேயாகும். இத்தகைய அலைவுகளுக்கு இடையிலும் ராம்மோகனர் தம்முடைய சமய நம்பிக்கையினால் காப்பாற்றப்பட்டுள்ளார்....பழைய இந்து சமயப் பண்ணையிலிருந்து வளர்ச்சியுற்ற உண்மையான இந்துவாக அவர் விளங்குகிறார்; புதிய கருத்துத் தாக்குதல்கள் என்ற நீர்பாய்ச்சப் பெற்ற மண்ணிலிருந்து பழக்கப்படாத புதிய நெருக்கடியான சூழ்நிலைகளுக்கு இடையில் பண்டை இந்துசமயப் பற்றுளராகவே அவர் சிறப்புற்று விளங்கு கிறார். ராஜா மேலைநாட்டு நாகரிகத்தில் ஊறித்திளைத்த வெறும் கீழைநாட்டு அறிஞர் அன்று; ஐயப்பாட்டிற்குரிய ஐரோப்பியப் போலித்தோற்றத்தில் மறைந்துள்ள நயமிகு இந்து அவர் அன்று; அவர் மிகச் சிறிய தோற்றம் உடையவராக இருந்ததைப் போன்றே ஓர் ஆன்மிக யூரேசியனாக இருந்தார் என்று நாம் கூறலாம். அவரு டைய சரியான வளர்ச்சியின் போக்கை நாம் புரிந்து கொள்வோ மானால், அவர் கடந்த காலத்தின் கீழைப் பண்பாட்டிலிருந்து மேலைப் பண்பாட்டிற்குச் செல்லவில்லை; மேலைப் பண்பாட்டின் மூலம் இந்தியாவை அவர் அழைத்துச் செல்லுகிறார் என்பதை நாம் எளிதில் உணரமுடியும். அவா அடைய விரும்பிய நாகரிகம் மேலை நாடுகளுடையதுவும் அன்று; கீழை நாடுகளுடையதுவும் அன்று. ஆனால், அவை இரண்டையும்விட விரிந்ததும், சிறப்புமிக்கதும், பெருந்தன்மை வாய்ந்ததுமான புதியதோர் நாகரிகத்திற்கு, அவர் நம்மை அழைத்துச் செல்லுகிறார். தம்முடைய சமயப் பண்பாட் டினால், வழிநெடுக பண்டை நாகரிகத் தொடர்ச்சியைப் பேணிக் காத்து வருகிறார். அவருடைய முற்போக்குக் கொள்கைகளைக் கொண்ட இயக்கத்திற்கு, உள்ளார்ந்த ஆற்றலை அளிப்பதும் அச்சமயப் பண்பாடேயாகும். அவரைத் தொடர்புபடுத்தியதும் கட்டுப்படுத்தியதும் சமயமேயாகும் அவருடைய அறிவை விரிவு படுத்தியதும் உணர்ச்சித் தூண்டலை ஊட்டியதும் சமயமேயாகும்.

புதிய இந்தியாவின் முன்மாதிரியாகவும் முன்னோடியாகவும் ராம்மோகன் விளங்குகிறார். இவ்வாறு ஆர்வத்தைத் தூண்டுவ தாகவும், அறிவுறுத்துவதாகவும் அமைந்த புதிய இந்தியாவைப் பற்றிய ஆராய்ச்சியின் நிலைக்களனாக அவர் திகழ்கிறார். நம்முடைய மிகப்பெரிய கீழைக் குடியேற்ற நாடு இன்னும் நம்முடைய பிரிட்டிஷ் பேரரசுக்குட்படவில்லை. அந்நாட்டில் தோன்றிய அவர் மிகவும் அரியதொரு கோட்பாட்டை மேலைநாட்டுப் புதிய சனநாய கத்திற்குப் பரிசாக வழங்குகிறார். எதிர்காலத்தில் இந்தியாவிற்கு எத்துணைப் பேறுகள் காத்திருந்தாலும், அவ்வெதிர்காலம் ராம் மோகன் ராயின் வாழ்வாலும் தொண்டாலும் உருவாக்கப்படும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. இந்தியாவின் எதிர்காலம் மட்டும்

அன்று ; உலகத்தின் வருங்காலமும் அவருடைய அரும்பணியால் ஆக்கம் பல பெறும். இதற்கு முன்பு, என்றுமே கண்டிராத அளவிற்குக், கிழக்கும் மேற்கும் இன்று கலந்துறவாடுகிறது. இத்தகைய காலத்திலே நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். மனித இன வளர்ச்சி என்னும் ஐரோப்பிய-ஆசியப் பண்பாட்டு ஓடைகள் இதற்கு முன்னர் ஒன்றோடொன்று அடிக்கடி சிறிது அளவில் கலந்துள்ளன. ஆனால், இப்பொழுது அவை இரண்டும் ஒன்றாகக் கலக்கும் நிலையை நெருங்கிக் கொண்டிருக்கின்றன. அக்கலப்பால் மனித இனத்தின் கூட்டு முன்னேற்றம் என்னுமொரு பெருங்கடல் - ஆறு உண்டாகும். ......அதனால் அளவிட்டு உரைக்க முடியாத அரும்பெரும் நன்மைகள் அரும்பும் காலம் நெருங்கிவிட்டது. அக்காலத்தில், எந்த மனிதனின் வாழ்க்கைக் கதையை இப்பொழுது நாம் கண்டோமோ, அந்த மனிதன் முக்கியத்துவம் வாய்ந்த புகழ்மிக்க மனிதராகச் சிறப்புற்றிலங்குவார். எதிர்காலத்தில் உண்டாகக் கூடிய மாற்றங்களை முன்கூட்டியுரைக்கும் தீர்க்கதரிசியாக அவர் இல்லாவிட்டாலும், முன்கூட்டிக் குறிப்பாக அறிவிக்கும் மூதறிஞராக அவர் விளங்குகிறார் என்று நாம் கூறலாம்.''

இந்தியாவின் புதிய ஊழியில் ராம்மோகனரின் கருத்துத் தாக்குதலை என்றும் மறக்க இயலாது. இதற்கு ரவீந்திரநாத தாகூரின் சொற்களே சிறந்த சான்றாகத் திகழுகின்றன.

'' தம்முடைய நாடு உயிர்ப்பண்புகளை இழந்து, தன்மதிப்பினைத் தானே கெடுத்துக் கொள்ளும் முரண்பட்ட நிலையில் அந்நாட்டில் சான்றோர்கள் தோன்றுவர். அத்தகைய அரும்பெரும் பண்புகள் நிறைந்த மனிதர்களை உலகம் புரிந்துகொள்ளவும், போற்றிப் பாராட்டவும் சிறிது காலம் பிடிக்கிறது. மக்கள் தங்கள் உள்ளத்தைச் சோர்வடையுமாறு விட்டுவிட்டபடியாலும், ஒரு காலத்தில் தங்களுடைய இயற்கையின் மிக உயர்ந்த வீறமைதியில் தோன்றிய உண்மையின் இசைக்கேற்பத் தங்கள் உணர்வுகளை இசைவுடைய தாக்கிக் கொள்ள அவர்கள் தவறிவிட்டமையாலும், அப்பெரு மக்களின் குரல்கள், அந்நாட்டு மக்களுக்குத் துன்பத்தை அளிக்கும் முரண்பாட்டுக் கீதமாகக் கேட்கிறது.

அத்தகைய மனிதர்களுள் ராம்மோகன் ராயும் ஒருவராவார். நாடு அவரைக் கடுமையாக எதிர்த்தது. அவரைத் தலைவராக ஏற்றுக்கொள்ள மறுத்தது. தான் அடைந்துவரும் சீரழிவிடத்து நம்பிக்கையற்ற மோகம்கொண்டு, விடாப்பிடியாக அவற்றை நமது நாடு பற்றிக்கொண்டிருந்த காலத்தில் அவர் தோன்றினார். அதனால், தம்முடைய சிறப்புமிக்க மரபுவழியின் பொறுப்பினை அவர் நினைவுபடுத்துவதையும் விரும்பாது, எதிர்ப்புக் குரல் எழுப்பிய மக்களிடையே அவர் தோன்றினார். ஆனால், அவர் தோன்றிய சமயம் மிகவும் நெருக்கடியான நேரம். எனவே, சீற்றமிக்க

தொல்லைகளுக்கு இடையே அவருடைய தோற்றம் தவிர்க்க முடியாததாயிற்று. இந்தியப் பண்பாட்டு வானில் உண்டாகும் பருவ மாறுதலை அறிவுறுத்தும் வானம்பாடியாக அவர் வந்தார். நெடுங்கால வறுமைமிகு பஞ்சத்திற்குப் பின்னர் உண்டாகக்கூடிய பருவ மாறுதலை உணர்த்த அவர் தோன்றினர். நெடுங்கால வறட்சிக்குப் பின்னர், வாடிக் கரம்பாகிப்போன நிலம் வான் மழையைப் பெற்றுப் பக்குவம் அடைவதைப் போன்று, இந்நாட்டு மக்களுடைய வாழ்க்கையில் புத்தொளியும், புதுவாழ்வும் உண்டாவதற்கு மனப்பக்குவம் அடையுமாறு செய்யும் அறிவுமழையாக அவர் வந்தார். பருவ மாறுதலால் உண்டாகும் காட்சி மாற்றம் அச்சந்தரத்தக்க அதிசயமாகும். அறுவடை காலத்தில் கதிர்கள் முற்றிக் கனியும் வரையில் அதனுடைய முழுப்பொருளையும் வெளிப்படுத்தாது மறைக்குறிப்பாகவே வைத்திருக்க வேண்டும். அறுவடைப் பருவம் வந்தவுடன் அதன் பயனை அனுபவிக்கின்றவர் அதை ஏற்றுக்கொள்ளச் சிறிதும் தயங்கக்கூடாது! மக்கள் எதிர்பாராத தற்செயல் நிகழ்ச்சியைப் போன்று, ராம்மோகன் தம்முடைய நாட்டு மக்களிடையே தோன்றினர். அவருடைய சூழ்நிலைகளுக்குச் சிறிதளவும் பொருத்தமில்லாப் பாரிய தற்செயல் நிகழ்ச்சியாக அவர் தோன்றினர். எனினும், நம்முடைய வரலாறு, அறியாமை எனும் இரவுக்காலம் முழுவதும் எந்த மனிதரின் வருகையை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்ததோ, அந்த மனிதராக ராம்மோகன் தோன்றினர். தாம் தோன்றிய நாட்டின் உயிர்ப் பண்பு, வாழ்க்கைப்பணி ஆகியவற்றின் முழுமையான சிறப்பியல்புகளைத் தம் வாழ்க்கையின் மூலம் உணர்த்தும் மனிதராக அவர் தோன்றினர். அது ஒரு தனிமை நிறைந்த வாழ்க்கை. ஆனல், அதற்குத் தோழர்கள் இருந்தனர். அவருக்குப் பன்னெடுங் காலத்திற்கு முன்பு உண்மையைக் காணும் துணிச்சல் மிக்க உள்ளவுரத்தோடு பலர் சிறப்புற்று விளங்கினர். அச்சான்றோர்கள் இந்தியாவிற்கு விழுமிய வாழ்க்கை நெறியைக் காட்டுவதற்கு அல்லும் பகலும் அயராது உழைத்தனர். அவர்களுடைய கால்வழியில் வந்தவர் நம் ராம்மோகனுவார்.

குறுகிய மாநிலப்பற்று மிகுதியாக இருந்த தெளிவற்ற காலத்தில் ராம்மோகனர் தோன்றினர். தம்மைப் புரிந்துகொள்ளாத மக்களுக்கு அன்புப் பரிசை வழங்கும் ஆற்றல் உடையவராக அவர் விளங்கியமை எல்லையில்லா வியப்பூட்டும் செய்தியாகும். அவருடைய உள்ளத்தில் பரிவு இரக்கம் பொங்கி வழிந்தது; அதனல் எதையும் புரிந்துகொண்டு அன்போடும், பண்போடும் அவரால் நடந்துகொள்ள முடிந்தது. கீழை நாடுகள், மேலை நாடுகள் ஆகியவற்றின் சிறப்புமிக்க வேட்கைகளை எளிதில் புரிந்துகொண்டு, செயல்படத் தொடங்கியது அவருடைய உள்ளம். பண்பாடுகளின்

கலப்பிற்கு, அவருடைய உள்ளம் தானே திறந்து இடம் கொடுத்தது. அதனுல், பண்பாட்டுக் கடல்மீது சிறப்புமிக்க 'நாகரிகக் காலங்கள்' என்னும் மரக்கலங்களை என்றும் மிதந்து செல்லுமாறு அவர் செய்தார். எண்ணிறந்த உரிமை வேட்கைகளையும், செயல் முறைகளையும் கொண்ட புதிய உலகத்தின் கனவுருவக் காட்சி அவருடைய மனக்கண் முன்னுல் தெளிவாகத் தோன்றியது. தனக்குரிய உள்ளத்தைத், தாஞக முழுவதும் புதிய யுகம் தேடிக் காண்பதற்கு முன்னர், அதைத் தம்முடைய நாட்டிற்கு முதன்முதல், உண்மையில் அறிமுகப்படுத்திவைத்த பெரியார் ராம்மோகனராவார்''.

ராம்மோகனரின் வாழ்க்கையில் சிறப்புமிக்க நாள்களும் நிகழ்ச்சிகளும்

1772 : மே 22ஆம் நாள் ராதா நகரில் பிறந்தார்.

1809 : அரங்கபுரி தண்டல்நாயகமான ஜான் திக்பியின் கீழ் திவானாக அமர்த்தப்பட்டார்.

1815 : கல்கத்தாவில் வாழத் தொடங்கினார்.
ஆத்மிக சபை நிறுவினார்.
வங்காளமொழியில் 'வேதாந்த கிரந்தம்' வெளியிடப் பெற்றது.

1816 : 'வேதாந்த சாரத்'தை எழுதி, வங்காளி, இந்துஸ்தானி, ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளில் வெளியிட்டார். கேனோ, ஈசான உபநிடதங்களை வங்காளியிலும், ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்தார்.

1817 : இந்துக் கல்லூரி நிறுவப்பெற்றது.
மாண்டுக்கிய உபநிடதமும், கதோ உபநிடதமும் வங்காளி மொழியில் மொழிபெயர்க்கப்பட்டன.

1818 : 'சதி'யை எதிர்த்து முதல் துண்டுப்பிரசுரம் வெளியிடப் பெற்றது.

1820 : 'இயேசு பெருமானின் போதனைகள்' வெளியிடப்பெற்றது.

1821 : தவத்திரு வில்லியம் ஆதாம் ஒருமைக் கோட்பாட்டிற்கு மாற்றப்பட்டார்.
'சம்பத கௌமிதி' இதழ் தொடங்கப்பெற்றது.

1822 : 'மீரத்-உல்-அக்பர்' தொடங்கப்பெற்றது.
ஆங்கிலோ இந்துப் பள்ளி தொடங்கப்பெற்றது.
'பண்டை மகளிரின் உரிமைகள் பற்றிய குறிப்புக்கள்' வெளியிடப்பெற்றன.

1823 : பத்திரிகை அவசரச் சட்டத்தினை எதிர்த்துத் தலைமை நீதிமன்றத்தில் தம்முடைய எதிர்ப்பினைத் தெரிவித்தார்.
மீரத்-உல்-அக்பர் பதிப்பு நின்றுவிடல்.

'மிக முற்போக்கான அறிவுத்திறன் உடைய கல்வியைப் பயிற்றுவிக்கவேண்டும்' என்று ஹாம்ஹெர்ஸ்ட் பிரபுவிற்கு அவர் வேண்டுகோள் விடுத்தார்.

1824 : பாரிஸ் மாநகர் ஆசிய சங்க உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1826 : வேதாந்தக் கல்லூரியை நிறுவினுர்.

1828 : கவர்னர் ஜெனரலாக வில்லியம் பென்டிங்கு பிரபு கல்கத்தாவிற்கு வந்தார்.
பிரமசபை நிறுவப்பட்டது.
ஜூரி மூலம் வழக்கு விசாரணை நடத்தப்பெறவேண்டுமென்று அவர் தெரிவித்தார்.

1830 : நவம்பரில் இங்கிலாந்திற்கு அவர் புறப்பட்டார்.

1831 : ஏப்ரலில் இங்கிலாந்தை அடைந்தார்.
லண்டனில் ஜெரிமி பென்த்தாமைச் சந்தித்தார்
கிழக்கு இந்தியக் கம்பெனியாரோடு விருந்துண்டார்.
அரசர் நான்காம் வில்லியத்திற்குப் பரிசளித்தார்.
'பாஸ்போர்ட்' முறையை ஒழிக்குமாறும், அனைத்து நாடுகளின் அமைப்பு ஒன்றை நிறுவுமாறும் டெலிராண்டிற்கு அவர் கடிதம் எழுதினுர்.

1832 : சீர்திருத்த மசோதாவைச் சட்டமாக்க அவர் பேராதரவு தந்தார்.
பாரிஸ் நகருக்குச் சென்றுர். பிரான்சின் அரசரான லூயி பிலிப்பின் அவையில் அளவளாவினுர்.

1833 : பிரிஸ்டலுக்கு அருகிலுள்ள ஸ்டேபில்டன் குன்றுக்கு லண்டன் மாநகரிலிருந்து அவர் புறப்பட்டார்.
செப்டம்பர் 27ஆம் நாள் அவர் இயற்கை எய்தினுர்.

நூல் தொகுதி

இச் சிறிய நூல் தொகுதியில், வங்காள மொழியிலும் ஆங்கிலத்திலும் தொகுத்து வெளியிடப்பட்ட ராம்மோகன் ராயினுடைய நூல்களின் பதிப்புக்களே குறிப்பிடப் பெற்றுள்ளன. அம்மொழிகளில் அவரைப்பற்றி வெளிவந்துள்ள நூல்களின் தேர்ந்தெடுக்கப் பெற்ற பட்டியல் ஒன்றும் இதனுடன் சேர்க்கப்பட்டுள்ளது. மேற்கண்ட மொழிகளிலும், வேறு மொழிகளிலும் வெளிவந்துள்ள அவருடைய நூல்களையும், அவரைப் பற்றி வெளிவந்துள்ள நூல்களையும் அறிந்துகொள்ள விரும்புகின்றவர்கள் கோலட் என்பார் எழுதியுள்ள **"ராஜா ராம் மோகன்ராயின் வாழ்வும் தொண்டும்"** என்ற நூலின் பிற்சேர்க்கையைக் காண்க. "பல்வேறு மொழிகளில் ராஜாராம் மோகன்ராயின் வெளியீடுகள்" என்பது அப் பிற்சேர்க்கைக்கு வழங்கும் பெயராகும். அதனைத் திலிப்குமார் பிஸ்வாஸும், பிரபோத சந்திர கங்கோலியும் தொகுத்துள்ளனர். அந்நூலின் பதிப்பாசிரியர்களாகவும் அவர்கள் பணிபுரிந்துள்ளனர். அந்நூல் 1962ஆம் ஆண்டு சதாரன் பிரம சமாஜத்தினால் வெளியிடப்பெற்றுள்ளது.

வங்காள மொழி

ராம்மோகனரின் வங்காளமொழி படைப்புக்கள் தொகுக்கப் பெற்று, முதன் முதலாக 1839ஆம் ஆண்டு, ஆனந்த பிரசாத் பானர்ஜியால் வெளியிடப்பெற்றது. அதைத் தொடர்ந்து பின் வரும் நூல்கள் வெளியிடப்பெற்றன :

ராஜாராம் மோகன்ராயின் பிராஸித கிரந்தாவலி ; பதிப்பாசிரியர் : ராஜ் நாராயணபாசும், ஆனந்த சந்திர வேதாந்த வாகிஸும், கல்கத்தா, 1880.

ராஜாராம் மோகன்ராயின் சமஸ்கிருத வங்காள கிரந்தாவலி : பாணினி அலுவலகம், அலகாபாத், 1905.

ராம்மோகன் கிரந்தாவலி, பதிப்பாசிரியர் : பிரேஜேந்திரநாத பானர்ஜியும், சஜனிகாந்த தாஸும், கல்கத்தா, B. S. 1359

ஆங்கிலம்

இதுவரை ஆங்கிலத்தில் பதிப்பிக்கப்பெற்றுள்ள ராம்மோகன் ராயினுடைய நூல் தொகுதிகள் :

ராஜாராம் மோகன்ராயின் ஆங்கில நூல்கள் - பதிப்பாசிரியர் : ஜோகேந்திர சந்திரகோஷ் ; தொகுத்து வெளியிட்டவர் : ஈசன் சந்திர போஸ், தொகுதி 1 ; ஓரியண்டல் அச்சகம், கல்கத்தா, 1885.

ராஜாராம் மோகன்ராயின் ஆங்கில நூல்கள் - பதிப்பாசிரியர் : ஜோகேந்திர சந்திர கோஷ் ; மூன்று தொகுதிகளாக மறு பதிப்பைக் கொண்டுவந்தவர் ஸ்ரீகண்ட ராய், கல்கத்தா, 1901.

ராஜாராம் மோகன்ராயின் ஆங்கில நூல்கள் - புதிதாகச் சில கடிதங்கள் சேர்க்கப்பட்டுள்ளன ; இராமானந்த சாட்டர்ஜி யின் முன்னுரையோடு கூடியது ; பாணினி அலுவலகம், அலகாபாத், 1906.

ராஜாராம் மோகன்ராயின் ஆங்கில நூல்கள் - பதிப்பாசிரியர் : காளிதாஸ் நாகும் தேபஜோதிபர்மனும், ஏழு பகுதிகள் ; இப்பொழுது முதல் ஆறு பகுதிகள் கிடைக்கின்றன ; சதாரன் பிரம சமாஜ வெளியீடு ; கல்கத்தா, 1945-51.

ராம்மோகனரின் வரலாறு

(அ) வங்காள மொழி

பானர்ஜி, பிரஜேந்திரநாத : ராம்மோகன் ராய், (சாகித்திய-சாதக-சரித்திரமாலா, எண் 16), நான்காம் பதிப்பு ; பங்கீ சாகித்திய பரிஷத், 1353 B.S.

பாசு, சசிபூஷன் : ராஜாராம் மோகன்ராயரின் ஜீவாணி, 21ஆம் பதிப்பு ; கல்கத்தா, 1332 B.S.

சக்கரவர்த்தி, அஜித் குமார் : ராஜாராம்மோகன், கல்கத்தா, 1934.

சாட்டர்ஜி, நாகேந்திரநாதர் : மகாத்மா ராஜாராம்மோகன் ராயர் ஜீவிய சரிதம், 5ஆம் பதிப்பு ; இந்தியன் அச்சகம், அலகாபாத், 1928.

தாஸ், ஜோகானந்த : ராம்மோகன் ஓ பிரமோ-அண்டோலன், சதாரன் பிரம சமாஜ், கல்கத்தா, 1353 B.S.

சாஸ்திரி, சிவாநாத : ராம்மோகன் ராய், கல்கத்தா, 1886.

சென் சாஸ்திரி, சித்திமோகன் : யுககுரு ராம்மோகன், கல்கத்தா, 1952.

தாகூர், ரவீந்திரநாத : பாரதபதிக் ராம்மோகன் ராய், விஸ்வ பாரதி, 1366 B.S.

பால், உபேந்திரநாத : ராம்மோகன் ராயின் வாழ்வும், பணியும், சிந்தனையும், யு. ராய் அண்டு சன்ஸ், கல்கத்தா 1933.

பானர்ஜி, பிரஜேந்திரநாத : இங்கிலாந்தில் ராஜா ராம்மோகன் ராயின் தொண்டு, என். எம். ராய் சௌத்திரி அண்டு கம்பெனி, கல்கத்தா, 1926.

கார்ப்பெண்டர், லான்ட் : 'ராஜா ராம்மோகன் ராயின் பணியும் கருத்துக்களும் பண்பாடும்'—அவர் இறந்தபொழுது, பிரிஸ்டலில் உள்ள லெவின்மீட்ஸ் சாப்பலில் செய்யப்பெற்ற உரைகளும், அவருடைய படைப்புகளில் இருந்து பல தலைப்புக்களில் தேர்ந்தெடுக்கப்பெற்ற கருத்துரைகளும், வாழ்க்கை வரலாற்று நினைவுக் குறிப்பும், ஏஷியாடிக் ஜர்னலில் வெளியிடப்பெற்ற இழிவான குறிப்புக்களும் அடங்கியது; லண்டனும் பிரிஸ்டலும், 1833.

கார்ப்பெண்டர், மேரி: 'ராஜா ராம்மோகன் ராயினுடைய (இங்கிலாந்தின்) கடைசி நாட்கள்', லண்டன், 1866. மறுபதிப்பு ராம்மோகனரின் நூலகம், கல்கத்தா, 1915.

சக்கரவர்த்தி, சதிஷ்சந்திர (பதி.): புதிய இந்தியாவின் தந்தை, நூற்றாண்டு விழா மலர், 1933; கல்கத்தா, 1935.

சாட்டர்ஜி, இராமனந்தர்: ராம்மோகன் ராயும் புதிய இந்தியாவும், 1918.

கோலட், சோபியா டாப்சன்: 'ராஜா ராம்மோகன் ராயின் வாழ்வும் தொண்டும்', மூன்றாம் பதிப்பு: சதாரன் பிரம சமாஜ், 1962.

கங்கோலி, நளின சந்திர: ராஜா ராம்மோகன் ராய், புதிய இந்தியாவினை நிறுவிய சிற்பிகள் வரிசை, ஒய். எம். சி. ஏ. வெளியீடு, கல்கத்தா, 1934.

ஹோம், அமல் : ராம்மோகன் ராய் ; மனிதரும் அவருடைய நூல்களும், கல்கத்தா ; இதை ராம்மோகன் ராயின் நூற்றாண்டு விழா மலரில் சேர்த்துள்ளனர்.

ஜதீந்திரகுமார் மஜூம்தாரும் இராமபிரசாத சந்தாவும் : ராம்மோகன் ராயின் வாழ்வோடு தொடர்புடைய கடிதங்களும், பதிவேடுகளும் ; தொகுதி 1 (1791—1830), ஓரியண்டல் புக் ஏஜன்சி, கல்கத்தா, 1938.

மஜூம்தார், ஜதீந்திர குமார்(பதி.) : "ராஜா ராம்மோகன் ராயும் கடைசி மொகலாயரும்", அதிகாரப் பூர்வமான பதிவேடுகளிலிருந்து தேர்ந்தெடுக்கப் பெற்றவை, 1803—1839 ; வரலாற்று முன்னுரையோடு கூடியது ; கலை அச்சகம், கல்கத்தா, 1939.

மஜூம்தார், ஜதீந்திர சந்திர (பதி.) : "ராஜா ராம்மோகன் ராயும் இந்தியாவின் முன்னேற்ற இயக்கமும்." பதிவேடுகளிலிருந்து தேர்ந்தெடுக்கப் பெற்றவை, 1775—1845, வரலாற்று முன்னுரையோடு கூடியது ; கலை அச்சகம், 1941.

மாக்ஸ் முல்லர் : வாழ்க்கை வரலாற்றுக் கட்டுரைகள், லாங்மன்ஸ், லண்டன், 1884.

மூவரே, அட்ரியன்னே : "ராம்மோகன் ராயும் அமெரிக்காவும்" சதாரன் பிரம சமாஜ், கல்கத்தா, 1942.

சாமாட்டர், ஆர். என். : ராஜா ராம்மோகன் ராய், 1911.

சீல், பிரஜேந்திர நாத் : "ராம்மோகன் ராய்—ஓர் அனைத்துலக மனிதன்", சதாரன் பிரம சமாஜ் ; ஆண்டு, குறிப்பிடப் பெறவில்லை.

புதிய இந்தியாவின் தந்தையாகப் போற்றப் பெறுபவர் ராம் மோகன்ராய். உலகம் போற்றும் சமய நெறிகள் பல. அச்சமயங்களின் ஒப்பியல் ஆராய்ச்சிக்கு முதன்முதல் ராம் மோகன் ராய் அடிகோலினர். அவருடைய காலத்தில் வாழ்ந்த சீர்திருத்தக்காரர்கள் பலராவர். அவர்களுள் மிகப் பெருஞ்சீர்திருத்த வாதியாக விளங்கியவர் ராம் மோகனரே எனலாம். அனைத்துலக மனிதநலக் கோட்பாட்டின் அடிப்படையை முதன்முதல் ராஜாராம் வகுத்துத் தந்தார். புதுயுகத்தைப் போற்றி வரவேற்ற தீர்க்கதரிசி அவர். மனித வாழ்க்கையின் பல்வேறு துறைகளுக்கு அவர் ஆற்றியுள்ள அரும்பணி, உண்மையிலேயே மிகச் சிறப்புடையதாகும். எளிய நடையில், வங்காளமொழி உரை நடையை முதன்முதல் எழுதியவர் ராஜாராம் என்பது பொதுவாகப் பலரால் அறியப்பெருத உண்மையாக இருந்துவருகிறது. கவிதைகள் சிலவற்றையும் அவர் எழுதியுள்ளார். பகவத் கீதையை வங்காள மொழியில் செய்யுள்களாக அவர் மொழிபெயர்த்துள்ளார். மேலும், துதிப் பாடல்கள் சிலவற்றையும் அவர் இயற்றியுள்ளார். தாய்மொழியில் அவர் சிறந்த புலமை பெற்றிருந்தார். அவர் இயற்றிய ‘வங்காள மொழி இலக்கண’ நூலே அதற்குப் போதிய சான்ருகும். அவருடைய காலத்தில் இயற்றப்பெற்ற இலக்கண நூல்களுள் மட்டும் அந்நூல் தலைசிறந்து விளங்கவில்லை; சில வகைகளில் அதற்கு ஒப்பாகச் சொல்லக் கூடிய இலக்கண நூல் வங்காள மொழியில் இன்றும் தோன்றவில்லை என்று நாம் கூறலாம். அவருடைய நடை, எளிமையும் தெளிவும் வாய்ந்தது; கருத்துக்களை ஆற்றலுடன் வெளிப்படுத்தும் பண்பும் உடையது. கீழைநாட்டு மொழிகளோடு மேலை நாட்டு மொழிகளையும் அவர் கற்றுத்தேர்ந்திருந்தார். பிறமொழிப் புலமை அவருடைய நடையினை எளிமையும், இனிமையும், தெளிவும் உடையதாகச் சிறப்புறச் செய்தது எனலாம்.

ராம்மோகனரின் வாழ்வையும் தொண்டையும் விளக்கும் வகையில் இச்சிறிய ஆராய்ச்சி நூலினைச் சௌமியேந்திரநாத தாகூர் வரைந்துள்ளார். ராம்மோகனர், புதிய இந்திய இலக்கியத்தின் முன்னேடி என்னும் கருத்தை சௌமியேந்திரநாத தாகூர் இந்நூலில் நிலைநாட்டியுள்ளார்.

விலை: ரூ. 5